# மனக்குகை ஓவியம்



காஞ்சனா ஜெயதிலகர்

காஞ்சனா ஜெயதிலகர்

# மனக்குகை ஓவியம்

## 1

மழை பெய்துகொண்டிருந்தது.

"உன்னைக்கொஞ்சம் குளிர்விக்க வந்தேன்' எனும்படியான சிநேகப் பொழியல்!

பூமியைச் சகதியும், குட்டையுமாய் மாற்றாமல் கழுவிவிட்டபின் சமர்த்தாய் நின்றுகொண்டது மழை!

மண்வாசனைக் கிளர்ந்ததுமே கடலைப் பருப்பை ஊறவைத்தாயிற்று. இப்போது ஆமை வடைக்கான மாவும் தயார்.

இப்போது எஞ்சியிருக்கும் ஒரே உறவு தம்பி வர்ணன்தான். அவனும் இல்லையெனில் யாருக்கென்று வடை சுட?

'சூடாய் சாப்பிடு வா...' என்று யாரைக் கூப்பிட?

இதுபோன்ற மழை மாலைகளில் சூடாய் பண்டம் சாப்பிடுவது அப்பாவால் ஏற்பட்ட பழக்கம்.

'மேகம் கருத்ததுமே என்ன பலகாரம் போடுறேன்னு அடுக்களைக்கு வந்துடுவீங்களே' என்ற– செல்ல அலுப்போடு அம்மாவும் பலகார தயாரிப்பில் இறங்கிவிடுவாள்.

அதேபோல மின்தடை வந்தாலும் கூட கொண்டாட்டம்தான். கனத்த மெழுகுத் திரியைஏற்றிவிட்டு,கம்பளத்தைதரையில்விரிப் பார், அப்பா. ரெண்டு தலையணைகளோடு



பிள்ளைகள் அவரை உரசி அமர, பழைய குடும்பக் கதைகள், ஊர் நடப்புகள், வேலையில் சந்தித்த சவால்கள், நண்பர்கள் பற்றி பேசி பொழுது நகரும்.

சிலநேரங்களில் அப்பா மெழுகுத்திரியை ஏற்றும்போதே, சித்ரா சத்தமில்லாது 'சுவிட்'சுகளை அணைத்து வைப்பாள். அக்கம் பக்கம் வேறு வீடுகள் இல்லாததால் மின்சாரம் மீண்டது தெரியாமல் சிரிப்பும், பேச்சுமாய் வீடு குலுங்கும். அம்மா பெரிய கும்பாவில் எல்லாருக்கும் சோறு பிசைந்து கையில் உருட்டிப் போட, சாப்பிட்டு- அப்படியே தலையணைகளை வாகாய் போட்டு படுத்து உறங்கிவிட்ட இரவுகள் உண்டு.

'அதென்ன ஊர்ல வெளிச்சந் தெரியுதே?' என்று சுவிட்சைத் தட்ட, படரும் ஒளியில் கண் கூசியபடி சித்ராவைத்தான் திட்டுவாள், அம்மா.

'கழுதை- உன் வேலைதானே?'

அப்பாவிற்குத் தொழில்- ஓவியம் வரைவது என்பதாலும், வருமானம் அதிகமில்லை என்பதாலும் உருவானது இந்த அம்சமான வீடு.

இதை உருவாக்கிய தம்பதிகளும் அம்சமானவர்கள். ஒருநாளும் சண்டையால், ஆங்காரத்தால் இதன் சுவர்கள் அதிர்ந்ததில்லை. வேதனைக் கண்ணீர் அதன் தரையில் சொட்டியதில்லை.

இத்தனை அன்பான தம்பதிகளுக்கு மகளாய் பிறந்தது பாக்கியம் என்று அடிக்கடி பெருமிதப்பட்டுப் பட்டு பட்டு... தன் கண்ணே பட்டுவிட்டதோ? இல்லையென்றால் இப்படி நேருமா?

முதலில் அந்த பாழும் செய்தி எட்டியது அம்மா ஆசிரியையாக பணியாற்றிய பள்ளிக்குத்தான். பள்ளியின் தலைமை ஆசிரியர் ஊரின் வேறு சிலருடன் வந்து இறங்கிய தோரணையிலே சித்ராவிற்கு அடிவயிறு பிசைந்தது.

"வாங்க சார்... என்ன?"

அதற்குமேல் ஏதும் கேட்காதபடி வாய் உலர்ந்துவிட்டது. 'முதல்ல உட்காரம்மா சித்ரா. தம்பி எங்கே விளையாடப் போயிருக்கானா? ஒரு சொம்பு தண்ணீரை பக்கத்துல இப்படி வச்சிக்கோ... அதாவது வந்து...'

அவர்கள் சொல்லும் முன்பே உள்ளுணர்வு அவளுக்கு உணர்த்தி விட்டது. ஏதோ விபரீதம் நிகழ்ந்துவிட்டது... மாற்றமுடியாத- ஆற்றக்கூடாது விபரீதம். அச்செய்தியை ஏற்றுக்கொள்ளும் வகையில் உடல் முழுக்க மரத்து, விறைத்தது.



'மனசை தைரியமாய் வச்சுக்கம்மா... எங்களுக்கும் இது அதிர்ச்சிதான்... ஆனா, குடும்பத்துக்கு மூத்தவ நீ... உன்னைக் கொண்டுதான் தம்பிப் பய நிக்கணுமில்லையா?'

சொன்னவர் குரல் நடுங்கியது.

'என்னாச்சு?'

'அஜந்தா குகைகளைப் பார்க்கப் போனப்ப விபத்து நேர்ந்து, அப்பாவும்... அம்மாவும் இறந்துட்டாங்கம்மா...'

இப்போதும் அச்செய்தி அவளை இரும்பு குண்டு போலத் தாக்குகிறது- செயலிழக்க வைக்கிறது.

'இல்லை. இதெல்லாம் கொடுங்கனவு சித்ரா. முழிச்சுக்கோ' என்று குரல் கொடுத்தாலும் இன்னும் விழிக்க முடியாமல் புத்தி திமிறுகிறது.

ஆனால், அத்தனையும் உண்மை.

பிரேத பரிசோதனை முடிந்து உடல்கள் வந்துசேர்ந்தன.

'இனி எதிர்காலத்தை மட்டுந்தாம்மா நீ யோசிக்கணும்' என்று ஆறுதல்கூறிய அக்கம் பக்கத்தாரை மீறி- அவள் மனம் முழுக்கப் பெற்றவர்கள்தான்.

அவர்கள் இல்லாத எதிர்காலம் சூன்யமல்லவா? மறக்க அல்லது சற்று ஒதுக்கக்கூடிய அன்பையா காட்டினார்கள்? கூடவே, வேண்டிய மட்டும் சுதந்திரம், வாழ்வை முறைப்படுத்தும் கட்டுப்பாடு, ஊக்குவிக்கும் அறிவுரைகள் தந்த முழுமையான பெற்றோர்.

'கடமைகளைச் செவ்வனே சீக்கிரம் முடித்துவிட்டீர்களே' என்று பாராட்டுவது போலல்லவா எமன் வந்து வேகவேகமாய் அவர்களைக் கொண்டுபோய்விட்டான்.

பள்ளியில் சுற்றுலா போவது முடிவானதும் அம்மா ஆசைப்பட்டது, அப்பாவும் உடன் வரவேண்டும் என்றுதான்.

அம்மா- பள்ளியின் சரித்திர ஆசிரியை என்பதாலும், மாணவர்களின் மதிப்பை பெற்றிருந்ததாலும் சுற்றுலாவின் தலைமைப் பொறுப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அச்செய்தியைச் சொன்ன தலைமை ஆசிரியரிடம்,

'அவருக்கு அஜந்தாக் குகை ஓவியங்களைப் பார்க்க ரொம்ப ஆசை' என்றெல்லாம் சொல்லி, பள்ளியின் அனுமதி பெற்ற பிறகும் அப்பா எளிதில் சம்மதிக்கவில்லை.

"அதெல்லாம் சரி கஸ்தூரி, பிள்ளைகளை எங்கே விட்டுட்டுப் போறது? சித்ராவுக்கு இது பரீட்சை நேரம்" என்றார்.

"நான் இருக்கேன்லப்பா... அக்காவோட துணைக்கு?" தம்பி நெஞ்சு நிமிர்த்தினான்.

கடைசியில் பள்ளி பியூனின் தாய் பூவாயி வந்து இவர்களோடு தங்குவதாய ஏற்பாடானது. பூவாயிம்மா ஓரளவு நன்றாகவே சமைத்ததால், பிரச்சினையின்றி நாட்கள் நழுவின.

சித்ரா பரீட்சை மும்முரத்திலும், வரு தன் நண்பர்களோடு விளையாட்டிலுமாய் இருந்ததோடு, பெற்றோர் ஆனந்தமாய் ஒரு சுற்றுலாவில் இருக்கின்றனர் என்ற எண்ணத்தாலும் பிரிவு அத்தனைச் சிரமமாயில்லை.

ஆனால், இருவரும் ஒரே சமயத்தில் ஒரேயடியாய் தங்களை விட்டுப் பிரிந்தாயிற்று என்ற உண்மை– மிக மிருதுவான இதயத்தில் பலக்கக் குத்தியது.

தம்பிக்காக துக்கத்தை அடக்கி சமாளித்தாள், சித்ரா.

தைரியத்தை இழக்காதவள் போல ஊரின் முன் பாவனை காட்டினாள். ஆனால், துக்கம் குடைந்து, கூடான மனதை உலுக்கியது.

'உலகில் உனக்கென்று இனி யாருமில்லை... நீங்கள் அநாதைகள்!' என்று அச்சம் மிரட்டியது.

வெறும் பாதி முகம் மட்டுமே தெரியும்படி சுற்றப்பட்ட உடல்கள் வந்து இறங்க, ஊரே துடித்தது.

வர்ணன் பயந்து அலறினான்.

'இது எங்க அப்பா– அம்மா இல்ல... வேற... வேற யாரோ!'

அந்நாளை நினைத்தால் இன்னும் குலை நடுங்குகிறது. உடன் போன ஆசிரியர் அழுகையினூடே விளக்கினார்.

'அஜந்தா குகைங்க மலைமேல அரைவட்டமாய் இருக்குதும்மா. ஒருபுறம் குகைங்கன்னா, மறுபக்கம் அதல பாதாளம்... முழுக்க மரங்கள் அடர்ந்த அடி தெரியாத சரிவு. லயிச்சு ஓவியங்களையெல்லாம் 'ஸ்கெட்ச்' போட்டபடி வந்தார். அப்பப்போ போட்டோவும் எடுத்தாரு. வளைவிலே... அந்த விளிம்பிலே நின்னப்போ... காத்து வேகமாய் வீச, அவரு கையிலிருந்த– வரைஞ்ச பேப்பருங்க பறந்திடுச்சு... தன்னையறியாத வேகத்துல எக்கிப் பிடிக்க ரெண்டு எட்டு வைக்க, 'பாலன்ஸ்' தவறி விழுந்திட்டாரு... அவர் பின்னால் நின்ன டீச்சரும் 'ஐயோ'ன்னு அவரைப் பிடிக்க கைய நீட்டினவங்கதான்... மறுநொடி ரெண்டு பேருமே அங்கில்லை.

பிள்ளைங்க கத்தி அலறுனாங்க– அங்க வயசாளிங்களை நாற்காலியில உட்கார வச்சு தோளிலே பல்லக்கு போல தூக்கிட்டு நடக்கிற ஆளுங்க சில பேரு சாசான்னு சரிவுல கொஞ்ச காரம்



இறங்கிப் பார்த்தாங்க... ஏதும் முடியாம போலீசில் சொன்னோம்... அவங்க தீயணைப்பு ஆளுங்களுக்குச் சொல்லிவிட்டு, கீழே காட்டுக்குள்ள போய்தான் உடம்பை மீட்டாங்க... அதுக்கே மறுநாளாயிருச்சு. அதோடு, விசாரணை வேறு. பிரமைப் பிடிச்சு நின்ன பள்ளிக்கூட பிள்ளைங்களை கூட்டிட்டு வந்து, உங்களுக்குத் தகவல் தந்தேன்.

ம்ப்ச்... போறப்ப எத்தனை சந்தோசமாய் போனோம்ப்பா... சார் பார்த்த அத்தனையையும் வரைஞ்சு தள்ளிட்டார். ரெயில்ல வந்த சக பயணிங்களை அவர் 'ஸ்கெட்ச்' போட, சாரைச் சுத்தி சதா கூட்டம், பாராட்டுன்னு... ம்... கண்ணுதான் பட்டிருச்சு போல... ஆனா, அன்னைக்கு சார், டீச்சர் முகங்கள்ல ஏனோ களையில்லை.'

இவளது மழுங்கிய உணர்வுகளில் ஏறியும், ஏறாமலும் இருக்க– அவர் சொல்லிக்கொண்டே போனார்.

'இனி வாழ்க்கை நகருமா?'

விரக்தியை மீறி ஏறக்குறைய ஒரு ஆண்டு இருந்தாகிவிட்டது.

ஒரு மாதிரி மனம் தேறிய வேளையில் மறுபடி இந்த உலுக்கல். தான் வளர்ந்த, தன் தந்தையும் தாயும் மகிழ்ந்து உருவாக்கிய இந்த வீடும் நிலைக்காது போல... வீட்டை துக்கத்துடன் பார்த்தாள், அவள்.

## 2

'அரசாங்கங்கிறது மக்களைக் காபந்து பண்ணவா? இல்ல... இப்படி அலைக்கழிக்கிறதுக்கா?'

'எடுத்துக்குற நிலத்துக்கான விலையைக் கொடுத்துடுறோம்ங்கிறது நிஜந்தான். ஆனா, பெறுமானமுள்ள காசைத் தருவாங்களா?'

'காசோடு, வேற இடத்துல நிலமும் தந்தாத் தேவலை...'

'இது எங்க தாத்தா வாங்கின நிலம்' பெருமூச்செறிந்தது ஒரு பெருசு.

'இது நியாயமில்லப்பா... எழுதிப் போடுவோம். இன்னும் தள்ளி கிடக்கிற நிலத்தை வாங்கி அரசாங்க குடியிருப்பைக் கட்டிக்கட்டும்.'

கூடிய இடங்களில் எல்லாம் சாத்தூரை ஒட்டிய அச்சிற்றூரின் மக்கள், அரசாங்கம் வீட்டு வாரிய விஸ்தரிப்பிற்காக தங்கள் நிலங்களைக் கேட்டிருப்பது பற்றியே பேசினார்கள்.

அவர்களின் ஆட்சேபனை ஏற்கப்பட, சித்ரா மகிழ்ந்தாள். ஆனால், அங்குத் துழாவி ஏமாந்த இராட்சச கரம் தன் வீட்டை கபளீகரம் செய்ய முனைந்தபோது அதிர்ந்து வக்கீலிடம் ஓடினாள். ஊர் பெரியவர்களிடம் ஆலோசனை கேட்டு, உரியவர்களுக்கு எழுதிப் போட்டாள். பெற்றவர்களை இழந்த துக்கம் இன்னும் ரணமாகவே இருக்க- இப்படி அடுத்த வேட்டு விழுந்ததைத் தாள முடியவில்லை.

ஊரார் சொன்னார்கள்: "அப்பா அம்மா இருந்தவரை இப்படி ஊருக்கு ஒதுக்குப்புறமான வீட்டில் நீங்க இருந்தது சரி. ஆனா, இனி அத்தனைப் பாதுகாப்பில்லை."

'துணைக்கு ஒரு பெரியம்மாவை வச்சிட்டு இங்கேதான் இருக்கப்போறேன்.'

'கள்ளப் பயலோ... காமாந்தகனோ வந்தா ஒரு கிழவி எப்படிம்மா உன்னைக் காப்பாத்தும்? தம்பியும் சிறு பயல்.'

'தைரியம்தான் துணை... துணிச்சலாய் வாழப் பழகிக்க வேண்டியதுதான்.'

'அது அசட்டுத் துணிச்சலா ஆயிடக்கூடாதும்மா.'

ஆனால், ஊரின் எச்சரிப்பை மீறி அவள் தொடர்ந்து அதே வீட்டில்தான் இருந்தாள். பெற்றவர்களை இழந்த இருவருக்கும் அவர்கள் கட்டி ஆண்ட வீடு பெரிய ஆறுதலாக இருந்தது.

ஆனால், நிம்மதி நிலைக்குமோ... இல்லையோ? இந்தத் துயரங்களோடு பிறரிடம் சொல்லி ஆற்றாத வேறொரு துன்பமும் அவளுள்ளே பொறுமியது.

"யக்கா..."

வீடு நுழைந்த தம்பி குரல் கொடுத்தான்.

"வா வரு. வடை போடப் போறேன். வந்து கூப்பிடலாமான்னு யோசிக்க, சரியாய் வந்துட்டே."

"அஞ்சு மணிக்கு வந்திடுறதாய்தானே சொன்னேன்."

"ம்..."

குழந்தை போலத் தோன்றிய வர்ணன் இப்போது பொறுப்புடன் தான் நடந்துகொள்கிறான்.

மேல் கழுவி, தலைசீவி வந்த தம்பியைப் பரிவுடன் பார்த்தாள். இவளைவிட 8 வயது இளையவன். இன்னும் மாறாத பால்முகம். சூது வாது தெரியாத வளர்ப்பு.

"ம்மா... வடை வாசனை அமர்க்களம் பண்ணுதுக்கா..."



உண்மைதான். வீடு முழுக்க மணம் சுற்றியடித்தது.

இரு தம்ளர்களில் நீர் வார்த்தவன், தட்டுகளை எடுத்து வைத்தான்.

முதல் வடைகளை தட்டில் போட்டுத் தந்தாள்.

"நீயும் வாக்கா. சேர்ந்து சாப்பிடலாம்."

"எங்க போயிருந்தே?"

"ஸ்டீபன் வீட்டுக்கு. மழைங்கறதால அவன் வீட்டில் 'கேரம்' ஆடினோம்."

"செஸ் ஆடுறதுதானே? சிந்திக்கிறதுக்கு அது நல்ல பயிற்சி."

"விஸ்வநாத் ஆனந்த் ஜெயிச்ச குஷியிலே இப்படியெல்லாம் அறிக்கை விடுவாங்க. ஆனா, ஒவ்வொரு 'மூவ்' யோசிக்கவும் தலை சூடாயிடுதுக்கா" வடையை ரசித்தபடி சொன்னான்.

"பயிற்சி இல்லாத உடம்புதான் அரை மைல் நடந்ததும் இளைக்கும்... அதேபோலத்தான் மூளையும்."

"வேறென்ன பண்ணுறது? லீவிலேயும் அதையேதான் செய்யணும்."

ஜன்னல் வழியே வெறித்தவன் தொடர்ந்தான்– "கோபால் வீட்டிலே இந்த மே மாசம் கோவளம் போறாங்களாம்." தம்பியின் ஏக்கத் தொனி அவளைச் சுட்டது.

கடந்த ஒரு ஆண்டில் அவர்கள் எங்கேயும் போகவில்லை. பெற்றோர் இருந்தவரை மாதந்தோறும் ஒரு 'பிக்னிக்'. பதினைந்து நாட்களில் ஒரு சினிமா, வாரா வாரம் சனிக்கிழமை இரவு ஓட்டல் பிரியாணி என்று அனுபவித்தவனுக்கு இது சிறை வாழ்வு போலத்தான்.

"நாம... நாம வேணா சிவகாசி போலாமா... ஒரு தடவை அந்த மாமா வீட்டுக்குப் போயிருந்தோமே?"

"அவரு அம்மாக்கூடப் பிறந்தவரில்லையே..."

"வேற நமக்குச் சொந்தம்னு யாரிருக்கா வரு?" கேட்டவளுக்கு குரல் கம்மியது. ஏறக்குறைய அநாதையான கஸ்தூரியை, அதாவது சித்ராவின் தாயை, விரும்பிக் கல்யாணம் செய்ய செல்வம் முனைய, அவர் வீட்டில் ஏக எதிர்ப்பாம். அப்பா செல்வம் அந்த எதிர்ப்பும் நியாயமானது என்றே சொல்வார்.

'எங்க மூத்த அக்கா மதுரம். ஒரு வடஇந்தியரைக் காதலிச்சு, வீட்டை எதிர்த்து அவரைக் கல்யாணம் செய்துகிட்டா. என்னை விடப் பத்து வயசுக்கு மூத்த அக்காவை எனக்கு ஞாபகம்கூட

இல்லை... அவங்க வீட்டைவிட்டுப் போனப்ப எனக்கு எட்டு வயசா இருந்திருக்கும்.'

'எங்கப்பா போனாங்க?'

"மும்பைப் பக்கம்னு கேள்வி. ரொம்பப் பாசமான அக்கா. என்னை கூட்டிட்டே போவாங்க. அவரை- அதான் அத்தானைக்கூட புகை போல ஞாபகமிருக்குது. வெளுப்பா, உயரமாய் கூர் மூக்கோடு சிரிச்சுட்டே இருப்பார். பார்க்கும்போதெல்லாம் எங்கையில சாக்லட், பிஸ்கட்னு தருவார்.'

'லஞ்சம்ப்பா அது!'

'முறையாய் வீட்டுக்கு வந்து அவர் பொண்ணு கேட்டும்கூட எங்கப்பா தாறுமாறாய் பேசி விரட்டிட்டாராம். பின்னாடி, அம்மா சொல்லி வருத்தப்பட்டதுண்டு. 'புடவை வியாபாரத்துல அந்தப் பிள்ளைக்கு கைநிறைய வருமானம்- தெருவில் அத்தனை பேரும் அவங்குணம் தங்கம்றாங்க. பிறகென்ன? பேசாம கௌரவமாய் நாமே கல்யாணம் செஞ்சு தந்திருக்கலாம். பாவி, ஓடிப்போயிட்டாள்ன்னு அம்மா புலம்புவாங்க. அப்பா எதுவுமே பேசாம கடைசிவரை வீம்பாவேதான் இருந்தார். முதல் ரெண்டு வருஷம் அக்கா கடிதாசி வரும். கிழிச்சிடுவார். பிறகு அக்காவே வந்தாங்களாம். ராசாபாசமாய் ஆயிடுச்சாம்.'

'அடுத்தத் தெருவில் இருந்த அந்த மாமா பிறகு ஏன் மும்பை போணும்?'

'வெறுப்பைக் காட்டுற உறவுக்காரங்க எதிரே ஏன் வாழணும்ன்னு கிளம்பி இருக்கணும். அவர் படிச்சதெல்லாம் மதுரையிலதான்... அப்ப நாங்க அங்கதான் இருந்தோம். அவர் பேசற தமிழ், பழக்க வழக்கமெல்லாம் நம்மளைப் போலத்தான்... சின்னக்காவுக்கு மூத்த அக்காவைவிட ரெண்டு வயசுதான் கம்மி. தோஷ ஜாதகம். தவிர, அக்கா- வீட்டைவிட்டுப் போய் கல்யாணம் செய்துகிட்டவங்கற அபவாதம்... ஆக, கல்யாணம் கூடிவரலை. ஒரு கார்த்திகையில் நேர்ந்த விபத்துல சின்னக்கா எரிஞ்சுபோயிட்டா?'

'எப்படிப்பா?'

'விபத்துதாம்மா. ஆனா, ஊர் அதை இல்லாததும் பொல்லாததுமாக்கிச் சொல்ல- அப்பா, அம்மா மனசொடிஞ்சுட்டாங்க. நானும் 21 வயசா இருக்கையிலேயே உங்கம்மாவைப் பார்த்தேன்... ஒரு கவிதைப் போட்டியிலே பொழிஞ்சுத் தள்ளினா... என்னை ஒரு ஓவியன்னு அறிமுகப்படுத்தினப்போ என்ன சொன்னா தெரியுமா?'



'சித்திரம் கண்ணால் பார்க்கும் கவிதையாகிறது; கவிதையோ படித்துப் பார்க்கும் சித்திரமாகிறது'ன்னு நான் கவுந்திட்டேன். காதலங்கற வார்த்தை எங்க வீட்டுக்கு வேம்பு- ஆகவே ஆகாது. லேசா பேச்செடுத்தாலே ஏக எதிர்ப்பு வந்தது. அவங்க சூழ்நிலை அப்படி. ஆக என் முப்பது வயசு வரைக் காத்திருந்து, தளர்ந்த அப்பாம்மா போன பிறகுதான் உங்கம்மாவின் கைப்பிடிச்சேன்- அவளும் பொறுமையாய் காத்திருந்தா...'

'ரெண்டு பக்கமும் நமக்கு அதிக உறவுக்காரங்க இல்லை. உங்க மூத்த அக்கா அட்ரஸ்?'

'தொடர்பு விட்டுப்போச்சேம்மா.'

"போதுங்க்கா."

சாப்பிட்டு கை கழுவிய வரு, பாக்கெட்டிலிருந்த கடிதத்தை தொட்டு உருவினான். "ஆங்... விளையாடப் போகும்போதே வழியில் போஸ்ட் மேனைப் பார்த்தேன்க்கா. இதை உங்கிட்ட தரச்சொன்னார்."

"உடனே தந்திருக்க வேணாம்?"

"மறந்துட்டேன்."

தபாலில் கீழ் ஓரத்திலிருந்த அரசாங்க முத்திரையைப் பார்த்தவளுக்கு தொண்டை அடைத்தது. பிரித்து வாசித்ததும் அடைப்பு இறுகியது.

"உங்களுடைய ஆட்சேபம் நிராகரிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதித் திட்டத்தை விரிவுபடுத்த உங்கள் நிலம் அவசிய தேவையாக இருப்பதால், வாரியம் அதை ஏற்கும்."

வடை கருகும் வாடை கிளம்பியது.

3

**எ**ண்ணைக் குளியலுக்காய் ஆபரணங்களை எல்லாம் களைந்துவிட்ட பெண்ணாட்டம் நின்றது வீடு.

பள்ளி வளாகத்தை ஒட்டியிருந்த வீடுகளில் இவளுக்காய் ஒன்றை ஒதுக்கியிருந்தார், தலைமை ஆசிரியர் மந்திரமூர்த்தி.

பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருந்த சித்ராவிற்கு அம்மாவின் வேலை அதே பள்ளியில் கைகட்டி காத்திருந்தது.

"வீடு ரொம்பச் சின்னதுதாம்மா."

"போதும் சார்... பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில கிடைச்சதே

பெரிசு."

"ஆனா, உன் வீட்டு சாமானெல்லாம் வைக்க இடம் போதாதேம்மா."

"சிலதை வேணா வித்துடலாம் சார்" சிரமத்துடன் சொன்னாள்.

"பணக்கஷ்டம் இருக்குதாம்மா?"

"இல்ல...இடக்கஷ்டம்தான்– அலமாரி, நீள மேஜைன்னு... பெரிய சாமான்கள்."

"பள்ளிக்கூட ஸ்டோரில் தற்சமயம் போட்டு வையம்மா. பிறகு பார்ப்போம். வாழ்க்கை ஒவ்வொரு நாளும் வெவ்வேறு மாதிரி மாறுதே."

"தாங்ஸ் சார்... இத்தனைப் பரிவாய் உதவறவங்க இருக்கிறதால சமாளிச்சிட்டோம்."

"இதெல்லாம் எங்க கடமைம்மா."

கடமைதான் என்றாலும் கருணையும் கண்ணியமுமாய் உதவியவரை நன்றியுடன் நினைத்தாள். மனிதர்கள் நல்லவர்கள் தான். ஒரு சிலரைத் தவிர.

இக்கசப்பிற்கு தற்போதைய காரணம் முரளி.

வீட்டை ஒழிக்க, கேட்காமலேயே வந்து உதவியவனை தடுக்க முடியவில்லை.

அவனும், "இதெல்லாம் எங்கடமை" என்று ஒட்டிக்கொள்ள– சகித்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தம். கூடவே அர்ஜுனின் நினைப்பும் வந்து குத்தியது.

அர்ஜுனை சந்தித்தது மூன்று ஆண்டுகளுக்குள்தான். சித்ரா கல்லூரியில் சேர்ந்த புதிதில் அவளைத் தேடிவந்த சில இளைஞர்கள், இவள் தந்தையிடம் பேசினர்.

'உங்க படமெல்லாம் ரசிக்கிறது உண்டு சார். அதுவும் மர்ம நாவலுக்கு நவீனமாகவும், கவிதை நடைக்கு ரவிவர்மா பாணியிலும் படம் போடுற உங்க திறமை அபாரம்.'

'நன்றி– என் மகளைப் பார்க்க வந்ததாய் சொன்னீங்க.'

'அது அவங்க எழுத்து விஷயமாய்...'

"வாம்மா சித்ரா– உட்காரு..." வந்து அமர்ந்தவள், அந்த இளைஞர்களை சின்ன முறுவலுடன் வரவேற்றாள்.

"போன பள்ளிக்கூட ஆண்டு மலர்ல ஒரு நாடகம் எழுதி இருந்தீங்க. அடுத்த சுதந்திரம்னு."



"ஆமா."

"லஞ்சம், சாதியம், மதவெறியில் இருந்து இந்தியாவுக்கு சுதந்திரம் தேவைங்கிற ரீதியிலே..."

"ம்... நாடகப் போட்டிக்காக எழுதினேன். முதல் பரிசு கிடைச்சதால என் நாடகத்தை ஆண்டு மலர்ல போட்டிருந்தாங்க."

"அதை உங்க அனுமதி கிடைச்சா நாங்க நாடகமாய் நடிக்கலாம்னு இருக்கோம்."

"எந்த நிகழ்ச்சிக்காக?" ஆவலாய் கேட்டாள்.

"நம்ப காலனிப் பெண்களுக்கு ஒரு பொதுக் கழிப்பிடம் தேவை– ஊர் கோடியில் உள்ள அண்ணா நகரிலே..."

"கண்டிப்பாய்."

"நிதி திரட்டிக் கட்டிக்கலாம்னு."

"நல்ல நோக்கம். குடிசையில வாழுற பெண்கள் கூனி குறுகி முள் புதரண்டை ஒதுங்கிறதை வேதனையோடு கவனிச்சி இருக்கேன். நீங்க அதைக் குறித்து கவலைப்பட்டு அவங்க நிலையை மாற்ற முயற்சியும் எடுக்கிறதைப் பற்றி பெருமையாய் இருக்குது. தாராளமாய் 'அடுத்த சுதந்திரத்தை' நீங்க பயன்படுத்தலாம். கண்டிப்பா நாலு டிக்கெட் வாங்கிக்கிறோம்– என்னப்பா?"

உற்சாகமாய் உடன்பட்டாள்.

மறுமாதம் டிக்கெட் தர வீடு வந்தான், அர்ஜுன். பின்பு நிகழ்ச்சி யின் இடைவேளையில் நாடக ஆசிரியை சித்ராவை மேடை ஏற்றி சரிகை மாலையைக் கையில் தந்தபோது அவளது மனதில் இடம்பிடித்தான்.

கண்ணியமாய் வீட்டிற்கு அவ்வப்போது வரப் போக இருந்து நெருங்கினான். இளவயதின் கவர்ச்சி இருவரையும் வெகுவாக ஈர்த்தது.

அவனது கம்பீரத் தோற்றம் அவளைக் கிளர்ச்சி அடையச் செய்தது.

"சாத்தூரிலே அழகின்னா அது சித்ராதான்" என்று பேசப்பட்ட அவளது அழகு அவனைப் பாடாய்படுத்தியது.

அர்ஜுன் ஒரு மாதம் போல வீட்டுப் பக்கம் வராமல்போனால் ஏக்கத்துடன் காத்திருப்பாள்.

'இதுதான் காதலோ?' என்று சந்தேகமும், உன்னிப்புமாய் கவனித்திருந்தாள்– மனமும் கனிந்துகொண்டிருந்தது.

ஆனால், தன் உணர்வை முழுமையாய் நிச்சயிக்கவும்

முடியவில்லை.

இந்த நேரத்தில்தான் அவள் வாழ்வை முற்றிலுமாய் மாற்றிய பேரிடி விழுந்தது– அவளது பெற்றோரின் மரணம்.

"மரணமும் எங்களைப் பிரிக்க முடியாது" எனும்படியான ஜோடிச் சாவு. ஊரே அநாதரவான பிள்ளைகளுடன் புலம்பித் தவித்தது. பின் தேறி ஆறுதல்படுத்தியது.

'இனி தனக்கு யாருமில்லை' என்ற அப்பச்சை ரணத்திற்கு அர்ஜுன்தான் சரியான மருந்து. ஆனால், அவன் சித்ராவின் கண்களில் படவேயில்லை.

'அழாதடா சித்ரா– நானில்லை?' என்று அவளுக்கு மட்டும் கேட்கிறார்போல இரு வார்த்தை சொல்லி இருந்தாலும் சற்று ஆசுவாசப்பட்டு இருப்பாள்.

அவன் வரவேயில்லை.

மறுவாரம் வெளியே போய்விட்டு வீடு நுழைந்த வர்ணன், சோகமாய் கேட்டான்:

'ஏன்க்கா, அர்ஜுன் சார் நம்மைப் பார்க்க வரலை?'

'அ... அதானே... அவர் ஊரிலே இல்லை போல...'

'இங்கேதான் இருக்கார். இப்பகூட அவரை 'டவுன்ல' பார்த்தேனே?'

'ஓஹோ.'

'இலமாயில் அண்ணனும் அவரும் ஒன்னாத்தானே வேலை பார்க்கிறாங்க?'

'ம்...

'போன வாரம் பரீட்சையாம். இப்ப என்னைப் பார்த்த பிறகும் பார்க்காதது மாதிரி போயிட்டார்.'

நெஞ்சு வலித்தது.

'பார்த்திருக்கமாட்டார்.'

'நல்லாப் பார்த்துட்டு, பிறகுதான் திரும்பிகிட்டார்.'

யாரோ திருகியது போல நெஞ்சு மேலும் வலித்தது.

'ஏன்... ஏன் இப்படி?' –தனக்குள்ளாகக் கேட்டு மாய்ந்தாள். சில நாட்களிலேயே விடை வந்தது. வேலைக்கார ஆயா அங்கலாய்த்தாள்.

'இப்படியுமாம்மா பேசுவாங்க? நாங்க படிக்காதவங்கதான். ஆனா, படிச்சவங்க நிலைமை எங்களைக் காட்டிலும் மோசமாவில்லே இருக்குது? இங்க வருமே அர்ஜுனு தம்பி– அவங்கம்மா



அப்படி அடிச்சுச் சொல்லுது– 'அந்த சித்ராப் பொண்ணு ராசி மோசமானது. இப்படி முழுசா பெத்தவங்களை ஒருசேர விழுங்கினது. புருஷன் வீட்டுக்குப் போனா அங்கேயும் விழுங்க ஆரம்பிக்கும்... இனி அதுக்கு கல்யாணமானாப் போலத்தான்'னு. நான் வுடலை... பெற்றவங்க பிரியத்தையும் சேத்து தர்றாப்பல அதுக்குப் புருஷன் வருவாம் பாருன்னுட்டு வந்தேன்"

சித்ரா குன்றிவிட்டாள். ஆக, தாய் சொல்லைத் தட்டாத தனயனாய்தான் அர்ஜுன் தங்களை அலட்சியம் செய்திருக்கிறான். போகட்டும். இத்தனை பெரிய இழப்பை அனுபவித்த நான் அதையும் முழுங்கி ஜீரணிக்க வேண்டியதுதான்.

ஆனால், அது அத்தனைச் சுலபமா இல்லை. ஏற்கெனவே வேதனையில் வெண்டிருந்த மனம் பொசுங்கிப் புகைந்தது.

"இந்தப் பெரிய மேசை வேணுமாக்கா? பள்ளிக்கூடத்தில் உள்ள அறையில விட்டுடலாமே? இந்த சின்ன அறையில் பாதியை அது அடைச்சுக்குது" சந்தேகமாய் கேட்டான், வரு.

"இல்லை வரு. அப்பா எப்பவும் இதுலதான் உட்கார்ந்து வரைவார். அம்மாவும் வர்ற கதைகளை வாசிச்சு அப்பா படமாக்க வேண்டிய பகுதியை பச்சை மையால் கோடிட்டு தருவாங்க."

"ம்..."

"இனி எனக்கும் பள்ளிக்கூடத்துல திருத்த நிறைய நோட்டு வரும். நீயும் படிக்கணும். நாம சேர்ந்து உட்கார, படிக்க இதுதான் வசதி."

"சரி."

மேசைக்கு 'பளிச்'சென்ற ஒரு விரிப்பை போர்த்தியவள், புதிய வீட்டை இரண்டே நாட்களுக்குள் ரம்மியமானதாய் மாற்றி இருந்தாள்.

தங்கள் சொந்த வீட்டை கடைசி முறையாய் பூட்டியபோது துக்கம் அவளை ராட்சஷத்தனமாய் உலுக்கியது.

ஆனால், எல்லாம் நன்மைக்குதான் என்பது வீடு மாறிய சில நாட்களில் புரிந்தது.

பழைய வீட்டில் பெற்றவர்களின் நினைப்பும், அது கிளரும் ஏக்கமும் அதிகம். தனிமையும், அக்கம் பக்கத்தாரற்ற அமைதியும் அதை மேலும் வளர்த்தன.

இது சிறு வீடு என்றாலும் முற்றிலும் புதிய சூழல். இதமாக இருந்தது. அக்கம்பக்கத்து வீட்டாரின் கரிசனையான விசாரிப்பும், உதவிகளும் உற்சாகமூட்டின.

ஆயா வீடும் அருகிலேயே இருந்தது வசதி.

இறுதித் தேர்வுகளை நல்லபடி எழுதி முடித்த சித்ரா, இனி பள்ளியின் ஆசிரியை வேலையில் சேருவதற்குமுன் கிடைத்த இரண்டு மாத இடைவெளியை எப்படி பயன்படுத்த என்று யோசித்த வேளையில், தலைமை ஆசிரியரிடம் இருந்து அழைப்பு வந்தது.

"ரெண்டு ஆசிரியைகள் விடுமுறை கேட்கிறாங்கம்மா. ஒரு வீட்டில் கல்யாணம். அடுத்த வீட்டில் காய்ச்சல். நீ இருக்கிற தைரியத்துல விடுமுறை கொடுத்துட்டேன். மேல்வகுப்பு தேர்வுகளை வந்து மேற்பார்வை செய்யணும்மா நீ. நானும் உதவுறேன்."

"ஆகட்டும் சார்."

நாள் முழுக்க மாணவ, மாணவிகள் நடுவே கழித்தது அவளை உற்சாகமூட்டியது.

அன்று பரீட்சை. பதில் தாள்களை சீராக அடுக்கி தலைமை ஆசிரியரின் அலுவலகத்தில் தந்துவிட்டு, வீடு திரும்பியவளின் மனம் துணுக்குற்றது.

அவர்களது ஓட்டு வீட்டுக்குப் பொருந்தாமல் அதன் முன் நின்ற காரும், வாசற்படியில் பளபளத்த தோல் செருப்புகளும் ஏனோ அவளை மிரட்டின.

அவளது உள்ளுணர்வு அடுத்த மாற்றத்திற்கான எச்சரிக்கை மணியை ஒலித்தது!

## 4

**சி**த்ரா உள்ளே நுழைய– உட்கார்ந்திருந்த மூன்று ஆண்களும் எழுந்து நின்று கைகுவித்தனர்.

"வணக்கம்... நீங்கதானே சித்ரா செல்வம்?"

"ஆமா" –குவிந்த அவள் விரல்கள் நடுங்கின. தம்பியைப் பார்த்தாள்.

அவன் முகமெல்லாம் சிரிப்பு. இத்தனை மலர்வாய் அவன் முகத்தைப் பார்த்து பல மாதங்கள் ஆயிற்று. சற்று துணிவுடன், வந்தவர்களைப் பார்த்து புன்னகைத்தாள்.

"உட்காருங்க."

கதர் வேட்டி, அரைக்கை சட்டையில் இருந்த பெரியவர், "நீயும் உட்காரும்மா" என்றார்.

"உங்களுக்கு காப்பி இல்லை... டீ?"



"வந்த விஷயத்தை முதல்ல சொல்லிடுறோம். அப்புறம் தண்ணீர் குடிச்சிட்டு கிளம்ப வேண்டியதுதான்."

'என்ன விஷயம்?' என்ற கேள்வி முகம் முழுவதும் இருக்க மவுனமாய் நின்றாள்.

"நாலு மாசம் முன்னே 'ஸ்தம்பிக்க வைக்கும் ஸ்தலங்கள்'ன்ற ஒரு கட்டுரையை எங்க அலுவலகத்துக்கு அனுப்பி இருந்தீங்க."

அவள் முகம் சுலபமாய் மலர்ந்தது.

"ஓ... 'எழுத்து' பத்திரிகையில் இருந்து வந்திருக்கீங்க... அப்ப அதனுடைய ஆசிரியர் விஜயநாதன் நீங்கதானா?"

மறுபடி கைகுவித்தாள்.

"ஆமாம்மா. உன்னை எழுத வச்சு எங்களுக்கு கட்டுரையை அனுப்பி இருந்தார் உங்க பள்ளி தலைமை ஆசிரியர்."

"அப்பா வரைஞ்ச ஓவியங்களுக்குப் பொருத்தமாய் கட்டுரை எழுதலாம்னு சொன்னதும் அவர்தான்." "ஏப்ரல் மாசம் விடுமுறைச் சிறப்பிதழ்ல உன் கட்டுரை உங்க அப்பாவின் ஓவியங்களோடு இடம்பெறுது."

"சந்தோஷம்."

அவள் உள்ளம் வெகு நாட்களுக்குப் பின் மகிழ்வுடன் எம்பியது.

"இந்தச் செய்தியை உங்க தலைமை ஆசிரியருக்கு போன் மூலம் தெரிவிச்சபோது, நீ ரொம்பத் திறமையான பொண்ணுன்னார். இந்த விடுமுறை சிறப்பிதழை 'ஸ்பான்சர்' பண்ற ஒரு சுற்றுலா நிறுவனம் பல விடுமுறை ஸ்தலங்களைப் பற்றி அமர்க்களமாய் எழுதற ஆட்கள் தேவைன்னாங்க. நாங்க சிபாரிசு செய்த பெயர்கள்ல புதுப் பெயர் உன்னுடையதும்மா. உன் கட்டுரையை வாசிச்ச அவங்களுக்கும் முழு திருப்தி."

மலைப்புடன் கேட்டபடி நின்றாள்.

"உன்னைப் போல இன்னும் ரெண்டு இளைஞர்களைத் தேர்ந்து எடுத்து, அவங்க வெவ்வேறு இடங்களுக்குப் பயணப்படணும்னு சொல்றாங்க. நீங்க கொண்டுவரும் சுவாரசியமான கட்டுரைகள், புகைப்படங்களை அவங்க பயன்படுத்திக்குவாங்க."

"தலைமை ஆசிரியர் இதுபற்றி ஏதும் சொல்லலியே?"

"நேற்றுதான் விலாவரியாய் திட்டமிட்டு முடிவு பண்ணினோம். அவர்கிட்ட சொல்ல, நீங்க இந்தப் பக்கம் வர்றேங்கிறீங்களே, நேரே சித்ராகிட்ட சொல்லுங்கன்னார். எனக்கும் செல்வம் சார்

பொன்மனை பார்க்கணுங்கிற ஆர்வம். அப்பா இறந்தபோது எங்க உதவி ஆசிரியர்தான் வர முடிஞ்சது."

இழவு வீட்டில் பல புதுமுகங்கள் கண்ணில் பட்டும் கருத்தில் படியவில்லை. இவள்தான் அவ்வப்போது அர்ஜுனுக்காக கூட்டத்தைத் துழாவிவிட்டு சோர்ந்து கிடந்தாளே...

"நேரில் விவரமாய் சொல்லி சம்மதத்தோட போகணும்னு வந்தோம்மா. எந்த மாநிலத்துக்குப் போகணுங்கிற உரிமையை முதல்ல உங்களுக்குத் தரவும் விருப்பம்."

அவர் நீட்டிய காகிதத்தை, வர்ணனும் ஆவலாய் வந்து வாசித்தான்.

"சார், நான் தனியாக போக முடியாது. அதாவது, தம்பி வர்ணனை தனியே விட்டுட்டுப் போறது சரியில்லைன்னு நினைக்கிறேன்."

"தலைமை ஆசிரியரும் அதுபற்றி சொன்னதால் உங்களுக்கு மட்டும் ரெண்டு டிக்கெட்னு ஏற்கெனவே முடிவுபண்ணிட்டோம்மா. தவிர, பெண்கள் துணையோடு போறது பாதுகாப்பும்கூட..."

அக்கா தோள் வழியே வாசித்த வரு, அவள் முதுகைச் சுரண்டினான். 'என்ன?' என்பதாய் திரும்பினாள்.

"குளிர்பானம் வாங்கிட்டு வரவா?"

"காப்பி கலக்கட்டுமா சார்? இல்லை குளிர்பானம் ஏதாவது?"

"ஒரு தம்ளர் தண்ணீர் போதும்மா. தம்பி உங்கிட்ட ஏதோ சொல்லப் பிரியப்படுறாப்பல... பேசி முடியுங்க. கோவில்பட்டி போயிட்டு திரும்புற வழியிலே மறுபடி வந்து உங்க முடிவைத் தெரிஞ்சுக்கிறோம். பத்து நாளிலே நீங்க கிளம்பவேண்டியது இருக்கும்."

"நாங்க மராட்டியம் போய் அஜந்தா, எல்லோரா பற்றி எழுதுறோம் சார்."

தம்பி திடும்மென சொல்ல, சித்ரா திகைத்தாள். பத்திரிகை ஆசிரியரின் முறுவல் மாறவில்லை.

"ஆகட்டும்ப்பா... அக்கா சம்மதத்தையும் தெரிஞ்சுக்கோ" என்றார்.

"ஒரு நிமிடம்– சர்பத் கலக்குறேன்."

உள்ளே விரைந்தவள், சிறு தட்டுகளில் வீட்டில் தயாரான பர்பியை, மிக்சருடன் வைத்து தம்பியிடம் தந்து அனுப்பினாள்.

பழரசம் கலந்து, வந்தவர்களுக்கு தந்து, 15 நிமிடங்களில் அவர்கள் கிளம்பியபோது, "தம்பி சொன்னது போல நாங்க மராட்டியம் போறோம் சார்."



"ஆகட்டும்மா. அப்ப நாளை நாங்க உங்களை வந்து பார்க்க வேண்டிய அவசியமில்லை?"

"இல்லை. அப்பா– அம்மா கடைசியாக பார்த்த இடமது. அதை நாங்க பார்க்க இப்படி ஒரு வாய்ப்பு அமையறது தெய்வச் செயல். உங்க மூலமாய் வந்த சந்தர்ப்பத்துக்காக நன்றி."

மனப்பூர்வமாய் மறுபடி கைகுவித்தாள்.

"இருக்கட்டும்மா. நினைக்கிறதை சிறப்பாய் எழுத்திலே கொண்டு வரும் ஆற்றல் உனக்கு இருக்குது. கட்டுரையைத் தவிர கதை ஏதும் எழுதறது உண்டா?"

"எழுதினது உண்டு."

"அனுப்பும்மா. தகுதி இருந்தா அதுவும் பிரசுரமாகும். பிரயாணத்துக்கும் தயாராயிடுங்க."

"ஆகட்டும் சார். அப்பா கடைசியாக அஜந்தாவிலே வரைஞ்ச சில ஓவியங்களும் இருக்கும். கட்டுரைக்கு அதையும் பயன்படுத்திக்கலாம்."

"நல்லதும்மா. வர்றோம்."

வந்தவர்கள் கிளம்பிய இரு நிமிடங்கள் வரை வாசலிலேயே நின்ற அக்காவிற்கும், தம்பிக்கும் பேச்சே வரவில்லை.

ஒருவரை ஒருவர் பார்த்தவர்கள் மெல்ல சிரித்தார்கள்.

பின்பு பலத்த சிரிப்பு வீடு முழுக்க ஓடி நிறைந்தது. கட்டுரை பற்றியும், எதிர்பாராது வந்த வாய்ப்பு பற்றியும் மாறி மாறி பேசியவர்கள், தலைமை ஆசிரியர் வீட்டிற்கு போய் நன்றி சொன்னார்கள்.

அன்றிரவு சித்ராவிற்கு உறக்கம் பிடிக்கவில்லை. அஜந்தா போக சம்மதித்ததற்கு அவளுக்குப் பிறர் அறியாத– பிறரிடம் பகிர விரும்பாத வேறொரு காரணமும் இருந்தது.

படுத்து கால்மணி நேரம் கழிந்த பிறகும் புத்தி தெளிவாய் விழித்திருந்ததால் எழுந்தவள், அலமாரியை மெள்ளத் திறந்தாள்.

கீழ்த்தட்டில் அந்தக் கருநீல கைப்பை இருந்தது. 'வெல்வெட்'டினால் ஆன அதைத் தொட்டு தடவியதும் கண்கள் கொப்பளித்தன. தன் தாயின் மடி சாய்ந்தாற்போலொரு ஆறுதல். உயிருடன் இருந்த கடைசி நிமிடம்வரை இது அம்மாவின் தோளில் தொங்கிய பை. அம்மா– அப்பாவின் பின் பாய்ந்த வேகத்தில் அது சுழன்று மலை மீதே தங்கிவிட, மாணவர்கள் அதைப் பத்திரப்படுத்தி இவளிடம் வந்து சேர்த்திருந்தனர். வேண்டுமென்று அதைப்போலீசாரிடம் இருந்து மறைத்திராவிட்டாலும், நடந்த களேபரத்தில் அனைவரும் அதை மறந்துவிட, எடுத்த விலாசினி அதை சித்ராவிடம் சேர்த்து

விட்டாள்.

பெற்றோர் மறைந்த சில வாரங்கள் கழித்தே சித்ரா அதைத் திறக்கத் துணிந்தாள். அழுது வறண்ட கண்கள் மீண்டும் கசிந்தன. அம்மாவின் கையெழுத்தில் சில குறிப்புகள், பேனா, சதா நேரமும் அம்மா திறந்து உறிஞ்சும் 'இன்ஹேலர்', கைக்குட்டை. இவற்றின் நடுவே தனித்து தெரிந்தது அச்செய்தித்தாளின் துண்டு.

முதன்முறை அதைப் பார்த்தபோதே உள்ளே நெருடியது.

அதிலிருந்து படத்தை உற்றுப் பார்த்தாள்.

பிடரியை ஒரு குளிர் விரல் நீவியது!

செய்தித் தாளில் இருந்து வெட்டப்பட்ட அக்கறுப்பு-வெள்ளைப் புகைப்படத்தில் இருந்த பெண் சித்ராவை ஒத்திருந்தாள். சித்ரா தன் அறுபதாம் வயதில் இப்படித் தோன்றக்கூடும்!

மதுரம் சருநாத்?

இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி.

நிச்சயம் இது அப்பாவின் மூத்த சகோதரிதான். அப்பா சிறுவனாக இருக்கும்போது வடஇந்தியனுடன் காதல்வசப்பட்டு- வீட்டாரை விலக்கி- விரும்பியவருடன் வாழக் கிளம்பிப்போன தன் அத்தை.

தன் ஒரே உடன்பிறப்பும் உலகை நீத்து இரு ஆண்டுகளாகி விட்டன என்பது தெரிந்த அதிர்ச்சிதான் அப்பாவை அன்று அப்படி நிலை தடுமாற வைத்ததோ?

தன் பெற்றோர் இதில் இருக்கும் விலாசத்திற்கு போய் மாமாவை சந்தித்தார்களா?

இல்லை, அதற்கு முன்பே அவர்கள் மரணம் நேர்ந்துவிட்டதா? ஆங்கில செய்தித் தாளில் இத்தனை பெரிய கட்டமிட்டு நினைவு அஞ்சலி தெரிவிக்க வேண்டும் என்றால் மனைவி மீது பாசம் கொண்டவராகவும், வசதி உடையவராகவும் மாமா இருக்கவேணும்.

அவரைப் போய் பார்க்கலாமே என்ற ஆர்வம்தான் தம்பி 'அஜந்தா போகிறோம்' என்று சொன்னதிற்கு இவளும் உடனே ஒத்துபோனதற்கான காரணம்.

இவர்கள் அவுரங்காபாத் போய் இறங்கினால் மாமா சந்தோஷப் படுவாரா? இல்லை... இதென்ன திடீர் உறவு, பாசம் என்று முகம் சுளிப்பாரா?

தாங்கள் ஒன்றும் மாமாவிடம் அடைக்கலமாகப் போவதில்லை. அவர் தயவில் சாப்பிட்டு பிழைக்கப் போவதில்லை. பிறகென்ன?



போக்குவரத்து, தங்குமிடம் எல்லாம் ஏற்பாடாகிவிடும். ஒரு நேரம் போய் மாமாவை, தங்களுக்கு எஞ்சி இருக்கும் ஒரே உறவைப் போய் பார்த்து வந்துவிட வேண்டியது.

அத்தைக்கு குழந்தைகளே பிறக்கவில்லை என்றாரே அப்பா. அப்படி இருக்க, தன் மனைவியின் ஜாடையில் இருக்கும் தன்னைப் பார்த்து மாமா மகிழ்ந்துவிடமாட்டாரா?

ஒருவேளை அதுவே அதிர்ச்சியாகிவிட்டால்?

முதலில்செய்தித்தாளில் காணும் விலாசத்திற்கு கடிதம் எழுதவேண்டியது. அப்பா- அம்மாவிற்கு நேர்ந்த கொடுமையான விபத்து பற்றி... தங்களைப் பற்றி...

காசு பணத்தை எதிர்பார்க்கவில்லை. பாசத்தை மட்டுமே எதிர்பார்த்து போவதில் தப்பே இல்லை.

இதுவரை குடும்பத்தாரிடம் இருந்து கிடைக்காத அன்பு, இளைய தலைமுறையிடம் இருந்து கிடைத்தால் மாமாவிற்குக் கசக்குமா என்ன?

காலை முதல் வேலையாய் மாமாவிற்குக் கடிதம் எழுத முடிவு செய்தவள் அதை எப்படி அமைப்பது என்ற சிந்தனையுடன் படுக்க, உறக்கம் சீக்கிரமே அவளை இழுத்துப்போனது.

## 5 அவுரங்காபாத்

அவர்கள் நுழைந்த உணவகம் ஆர்ப்பாட்டமாய் இருந்தது. விஸ்தீரமான விடுதியின் அத்தனை சுவர்களிலும் அஜந்தா ஓவியங்கள் இருப்பதால் ஒயிலாய் காட்சி தந்தன.

இடப்பக்கக் கண்ணாடி தடுப்பைத் தாண்டி தெரிந்த நீலக்குளத்தைக் கண்ட வர்ணனுக்கு ஆனந்தம் பிய்த்துக் கொண்டது.

"ஐயோ... அக்கா... நீச்சல்குளம்!"

வெள்ளி மின்னல்களைத் தெறித்துத் தளும்பிய நீச்சல் குளத்தை தானும் ரசித்தபின் தம்பியை எச்சரித்தாள்.

"உள்ளே இறங்கணும்னு நினைக்காதே. உனக்கு நீச்சல் தெரியாது."

இவர்கள் பேச்சை அனுமானித்த மேலாளர், "இங்கே தங்கும் சில நாட்களில் உங்களுக்கு நீச்சல் கற்றுத்தர ஏற்பாடு செய்திடலாம்

மேடம். நல்ல பயிற்சியாளர் உண்டு" என்றார், ஆங்கிலத்தில்.

"அப்ப நான் இப்பமே போறேங்க்கா..."

"முதல்ல உங்க அறைக்குப் போய் சாமான்களை வச்சபின், குளிங்க தம்பி. அறைக்கே நீச்சல் பயிற்சியாளரை அனுப்புறேன். பிறகு நீச்சல்குளத்துக்குப் போகலாம்."

"ஓ... சரி."

"மேடம், உங்க அறைக்கு முதல்ல காப்பி அனுப்புறேன். கொஞ்சம் ஓய்வு எடுங்க. பிறகு, இங்கே பார்க்கக்கூடிய இடங்களைப் பற்றியும், அதை நீங்க எத்தனை நாட்களில் பார்க்கலாங்கிறதைப் பற்றியும் முடிவெடுங்க. சரியா?" சற்றே தலை தாழ்த்தியபடி விலகிய மேலாளர், மறுபடி ஒரு மணி நேரத்தில் ஆஜரானார்.

அதற்குள் குளித்து, உடை மாற்றி இருந்தாள், சித்ரா. வரூ இன்னும் நீச்சல்குளத்தில் ஆட்டம் போட்டபடி.

"வழக்கமாய் மூன்று நாட்களில் அவுரங்கபாத்தையும், குகைகளையும் பார்த்திடலாம், மேடம். ஆனா, நீங்க இங்கே ஒரு வாரம் வரை தங்க இருப்பதாலும், பார்த்ததைப் பற்றி எழுதவும் வேண்டி இருப்பதாலும் சாவகாசமாய் ஓரிரண்டு இடங்களாய் பார்ப்பது உசிதம்."

"சரி."

"முதல்ல உள்ளூரைப் பார்த்திடுங்க. பிறகு, எல்லோரா குகைகளுக்குப் போகலாம். அது நகரில் இருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அஜந்தா குகைகள் 100 கிலோமீட்டர் தள்ளி போய்வர, அலுப்பு வரும். உங்களது பிரயாண அலுப்பு நீங்கினதும் அங்கே போறது நலம்."

"நன்றி சார். இத்தனை சவுகரியமாய் தங்க, உதவ ஆட்கள் இருப்பாங்கன்னு நாங்க எதிர்பார்க்கலை."

"விருந்தோம்பல் எங்க தொழிலாச்சே மேடம்... இது பழகின துறை மட்டுமல்ல, பிடிச்ச துறையும்கூட 'நீ ரசித்து செய்யாத ரொட்டி புளித்துப்போகும்'ன்னாரே கலீல்ஜிப்ரான்!"

"சபாஷ்!"

நன்றியுடன் தலைதாழ்த்தியவர் "இன்னும் பத்து நிமிடத்திலே மதிய சாப்பாடு தயாராயிரும் மேடம். நீங்க போய் சாப்பிடலாம்" என்று விடைபெற்றார்.

ஆனால், வரூவை தண்ணீரில் இருந்து மீட்பது எளிதாயில்லை.

"அக்கா, இப்பமே எனக்குக் கொஞ்சம் நீச்சல் பழகிடுச்சு, பார்க்கிறியா?" என்று நீரில் துழாவினான்.



"வந்ததும் வராததுமாய் புது ஊர் தண்ணீரிலே இப்படி ஊறினால் ஆகாது வரூ, வா."

தமக்கையின் கெஞ்சலுக்கு எல்லாம் மசியாமல் கடைசியில் அவள் அதட்டிய பிறகுதான் கரையேறினான், வர்ணன்.

அவனை உடை மாற்ற அனுப்பிவிட்டு, அங்கிருந்த கடைகளை பார்த்தபடி சுற்றி வந்தாள்.

அப்பகுதியில் கிடைக்கும் விலை உயர்ந்த கற்களால் உருவான நகைகள், சிறு சிற்பங்கள் அனைத்தும் நூதனமாகவும் தெரிந்தன. கடைகளில் அலங்காரமாக சால்வைகள், சேலைகளும்கூட வித்தியாசந்தான்.

தொட்டு நீவினாள்.

பெரிய புன்னகையுடன் வந்து நின்ற விற்பனையாளரிடம்–

"இவை இங்கேயே நெய்யப்படுகின்றனவா?" எனக் கேட்டாள்.

தெரிந்த இந்தி வார்த்தைகள் வெகு சொற்பம் என்பதால் ஆங்கிலத்திலேயே பேசினாள். வரும் சுற்றுலா பயணிகள் பெரும்பாலும் வெளிநாட்டவர் என்பதால் அவ்வூர் மக்கள் நாவில் ஆங்கிலமும், பிரெஞ்சும் சரளமாய் புரண்டன.

"இது மராட்டியத்தின் பிரத்தியேக நெசவு மேடம். இங்குள்ள தறிகளுக்கு உங்களை அழைத்துப்போவார்கள். இந்த வகை நெசவை 'ஹிம்ரூ' என்போம். இங்கு வரும் எல்லாரும் கண்டிப்பாய் இவ்வகை 'ஷால்' இல்லை, சேலை வாங்கிப் போவார்கள்.

வேலைப்பாடு மிகுந்த அத்துணி வகைகளை மறுபடி நீவி, உதடுபிதுக்கினாள். "விலை அதிகம் இருக்கும்... என்னால் ரசிக்க முடியுமே தவிர வாங்கக்கூடுமான்னு தெரியலை." "உயர்ரகப் பட்டில் இந்த நெசவின் விலை அதிகம்தான். அதையே செயற்கை இழைப் பட்டில் செய்தால் குறைவாக வரும். கம்பளியில் நெய்த சால்வைகள் எழுநூற்று ஐம்பது ரூபாயில் இருந்து கிடைக்கும் மேடம்."

"ஓ... அப்ப ஊருக்குப் போகும்முன் வாங்கிக்கிறேன்."

"என் கடையிலே வாங்கணும் மேடம். சகாய விலையில் தர்றேன்."

"நன்றி."

"மதிய உணவு சூடும், சுவையுமாய் இருந்தது.

இரண்டு நாள் ரெயில் பயணத்திலும் உணவிற்கு குறைவில்லை என்றாலும், குளித்து– ஊர் வந்து சேர்ந்த திருப்தியுடன் சாப்பிடுவது தனி சுகம். பல மாதங்களாய் தன் கை பாகத்தையே உண்டு சலித்த

நாக்கிற்கு வேறு கை சமையல் அமிர்தமாய் தெரிந்தது.

"ஏன்டா வரு... நல்லாச் சாப்பிடு."

"தூக்கமாய் வருதுக்கா."

"இத்தனை நேரம் தண்ணியிலே ஆடினால், அதுவும் ஆயிரம் மைல் பிரயாணம் பண்ணின உடனே?"

பிரியமாய் அதட்டியவளுக்கு தன்னையே தூக்கம் ஆட்கொள்வதை உணர முடிந்தது.

மாலையில் நகரைச் சுற்றினார்கள். முற்றிலும் புதிய சூழலில், புதிய முகங்களை– அந்நிய மொழி பேசினாலும் புன்னகை மாறாத மனிதர்களைப் பார்ப்பது உற்சாகமாய் இருந்தது.

மறுநாள் அவுரங்காபாத் நகரின் முக்கிய இடங்களைச் சுற்றி பார்க்க மராட்டிய சுற்றுலா பஸ்சில் ஏறினர்.

முதலில் பார்த்தது 'பஞ்சக்கி.'

இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்து வாழ்ந்த ஒரு ரஷியனால் நம்மூர் ஏழைகளுக்கு உதவ என்று ஏற்படுத்தப்பட்ட மாவு மில்! பெரிய சதுர குளம் நிறைய நீர் தளும்ப, சுற்றிலும் கடை விரித்திருந்த வியாபாரிகள்– சுற்றுலா பயணிகளை கைவீசி அழைத்தனர்.

கண்ணாடி பதித்த மண்குவளைகளும், அலங்காரப் பொருட்களுமாய் அனைத்து கடைகளும்.

'இத்தண்ணீரில் இருந்து உருவாகும் சக்தியால் தானியம் அரைக்கப்பட்டு, ஏழைகளுக்கு உணவு கிடைத்தது. இன்னும் இந்த அரவை இயந்திரம் பழுதின்றி செயல்படுவது ஆச்சரியம்தான்' –விளக்கினான் சுற்றுலா வழிகாட்டி.

அடுத்து போய் இறங்கிய இடத்தைப் பார்த்தவள் மலைத்து போனாள்.

ஆக்ராவின் உலக அதிசயம் எப்படி இங்கு வந்தது?

'நீங்கள் பார்ப்பது 'பி பிகா மக்பாரா.' பதினேழாம் நூற்றாண்டில் மன்னர் அவுரங்கசிப்பின் மனைவி தில்ரஸ் பானுவிற்காக அவளுடைய மகன் இளவரசர் அசாம் ஷா கட்டிய சமாதி, இது. தாஜ்மகாலைப் போலவே தோன்றினாலும், இது முழுக்கப் பளிங்கியினால் உருவானது அல்ல. ஸ்தூபியையும், தரையையும் தவிர மற்றவை சுண்ணாம்புக்கல்– அன்றைய ஆறு லட்ச ரூபாயில் தாய்க்காக மகன் எழுப்பிய நினைவுச் சின்னம், இது.'

பக்கத்தில் இருந்த ஒரு சுற்றுலாப் பயணி சொன்னார்– "தாஜ்மகால் மாதிரி கட்டப்பட்டாலும் இது அசலின் பக்கத்தில்



கூட நிற்கமுடியாதம்மா. அது உலக அதிசயம்."

"ஓ?"

தலை ஆட்டினாலும் தனக்குக் கிடைத்த எள் உருண்டையைவிட மனமில்லாமல் ஆர்வத்துடன் சுற்றிச் சுற்றி நடந்தாள். சில புகைப்படங்களை எடுத்தவளுக்கு வரு தன்னுடன் இல்லை என்பது புரிந்தது. சற்று முன்புகூட வாலாய் ஒட்டி வந்தானே?

கலவரத்துடன் சுற்றிலும் பார்த்தாள்.

"வரு... வரு..."

கூவி அழைத்தாள்.

ஒரு சின்ன மர நிழலில் தெரிந்த நீலச்சட்டை அவனுடையது தானா? படிகளில் இறங்கி அவனை நோக்கி ஓடியவளின் கலக்கம், அவனை நெருங்க நெருங்க அதிகரித்தது.

எம்பி எக்கி வாந்தி எடுத்துக்கொண்டிருந்தான்.

"ஏன் வரு... என்னாச்சு திடீர்னு?"

பரிவுடன் அவன் முதுகை நீவியவள், மறுகையால் அவன் நெற்றியை அழுத்தினாள்.

"எப்படியோ இருந்துச்சுக்கா."

"எங்கிட்ட சொல்றதுக்கென்ன?"

"இது உன்னோட வேலை நேரம். 'பிசி'யாய் இருந்தே. அதான்..."

"தனியாய் வந்து வாந்தி எடுக்கிறியாக்கும்... கடவுளே... இப்ப தேவலையா?"

"ம்..."

கைப்பையில் இருந்த பாட்டிலின் தண்ணீரைக் குடிக்கத் தந்து, முகத்தைக் கழுவிவிட்டாள். அவள் தந்த மாத்திரையை வாயில் இட்டவன் முகம் சற்று தெளிந்திருந்தது.

இவர்களது குழுவின் 'வழிகாட்டி' அழைத்தார்.

"அடுத்தது துறைமுகம் பார்க்கப் போறோம். கிளம்பலாமா?"

அவரிடம் போன சித்ரா, "தம்பிக்கு உடம்பு சரியில்லை. நாங்க ஓட்டல் திரும்பிடலாம்னு பார்க்கிறோம்" என்றாள்.

"பணத்தை திருப்பித் தரமுடியாது மேடம்" என்றார், அவர் பணிவாய்.

"பரவாயில்லை... ஒரு கார் அமர்த்தித் தந்தால் போதும்."

"கண்டிப்பா."

"இல்லக்கா... போகலாம். எனக்குச் சரியாயிடுச்சே."

"முழுக்க சரியாகட்டுண்டா. காலையிலே உன் முகம் சரியில்லை. பூரியைப் பிய்ச்சதோட சரி. சாப்பிடலை. உடம்பு வேற சுடுறாப்பல தோணுது."

காரில் திரும்பும்போது வழியில் தெரிந்த ஒரு பெரிய வண்ணக் கூடாரத்தைப் பார்த்த வரு ஆவலாய், "ஓட்டல்க்கா. ஏதாவது ஒரு குளிர்பானம் குடிக்கலாமா?" கெஞ்சினான்.

"எலுமிச்சை ஜூஸ் குடிக்கலாம்" என்றவள், காரை நிறுத்தச் சொன்னாள்.

நெடுஞ்சாலைப் பயணிகளைக் கவர்வதற்கு என்றே நின்ற அக்கூடாரத்தைச் சுற்றி பயணிகள் கூட்டம் மொய்த்தது. சுடச்சுட பலகாரங்களும், குளிர்பானங்களும் விற்று தீர்ந்தன.

உப்பு பிஸ்கட்டும், எலுமிச்ச பழரசமும் 'ஆர்டர்' செய்தவள், சுற்றிலும் விழியோட்டினாள். அவள் பார்வையை அந்த ஜோடி கட்டி இழுத்தது. நல்ல உயரமும், வாளிப்புமான அவர்கள், படிப்பிலும் செல்வத்திலும்கூட சோடை போகாதவர்கள் என்பது தெளிவாய் தெரிந்தது. கடுகடுவென்ற முகங்களோடு இருவரும் ஏதோ வாக்குவாதத்தில் இருந்ததும் புரிந்தது. பொது இடத்தில் ஏன் இப்படி?

எளிய வாழ்வு வாழ்ந்த தன் பெற்றோர்கள் இப்படி ஒருநாளும் வீட்டிற்குள்ளும்கூட சண்டை போட்டதில்லை என்று பெருமிதமாய் நினைத்துக்கொண்டாள்.

அங்கு இருந்த மரப்பலகையில் தம்பியோடு அமர்ந்தவளின் பின்னால் இருந்து தமிழ்க் குரல்கள் கேட்டன.

"நாஞ் சொல்லலை. இவங்க வண்டி ரொம்ப நாள் ஓடாதுன்னு?"

ஆண் குரல் ஆமோதித்தது.

"நானும் நினைச்சேன். ஆனா, நினைச்சதையெல்லாம் சொல்லணுமான்னு விட்டுட்டேன். சரத் இவ முகத்தைப் பார்த்து ஏமாந்துட்டான்."

"அவ கோவிச்சுட்டுப் போற வேகத்தைப் பார்த்தீங்கல்ல?"

பின்னிருந்து வந்த கருத்துகள் அக்கவர்ச்சியான ஜோடியைப் பற்றிதான் என்பது சித்ராவிற்குப் புரிந்தது. கூண்டில் படபடத்த காதல் கிளிகளைப் பார்க்கும் ஆவலுடன் வரு நகர்ந்துவிட, சித்ராவை நகரவிடாமல் ஏதோ ஒன்று கட்டி இருத்தியது.

அப்பெண் விரிந்த கூந்தலைச் சிலுப்பி குதிரை போல நடக்க, அந்த வாலிபன் இறுகிய முகத்துடன் அவளைத் தொடருவதை ஒரு நாடகம் போலப் பார்த்திருந்தாள்.

"ஆம்பிளைத் தப்பான வழியே திரும்பப் பார்த்தாலும் ஒரு நல்ல பொண்ணு அவனை அதட்டி நேர்ப்படுத்தணும் நிகிலா அப்படிப்பட்டவ கிடையாதே."

அருகில் இருப்பவர்களுக்குத் தமிழ் தெரியாது என்ற சுதந்திரத்தில் அவர்கள் பேசியதை சற்று சங்கடத்துடனே கேட்டுக்கொண்டிருந்தாள், சித்ரா. எதேச்சையாய் கேட்கும் பேச்சுகளில் சற்று கற்பனைக் கலந்து கதையாக்கிவிடும் திறமை உண்டு, அவளுக்கு.

"முன்னே அகர்வாலோடு சுத்தினவ அவனை வெறும்பயலாக்கிட்டு நம்ப பலயலைப் பிடிச்சுட்டா."

"பிறப்பால் இந்திக்காரன் என்றாலும் சரத்தை நம்பப் பயலாத்தான் நினைக்கத் தோணுது."

"அவன் பேசுற தமிழ் அப்படி. படிப்பு முழுக்க சென்னையில் தானே?"

"பெரியவர் சொத்து முழுக்க இவனுக்குத்தாங்கிற நினைப்பில் இவனை மடக்கினா. ஆனா, இப்ப விஷயம் அத்தனை சுலபமாய் இல்ல... இடிக்குது."

"இப்ப உன்னைத்தான்டீ இடிக்கணும்... ஏதோ கடிதம் வந்ததாம். பிறகு விவரமாய் சொல்றேன்னியே... இப்ப சொல்லு கதையை."

"இப்ப சரத்துக்குப் பாதி சொத்துதான் வரும்கிறாப்பல காட்சி மாறிடுச்சு. அதான் மகாராணிக்கு இந்த எரிச்சல்... இவ கஷ்டப்பட்டு சம்பாதிக்கலை... சொத்திற்கான வாரிசுமில்லை... ஆனா, கோபம் மட்டும் பொத்துக்குது..."

இனியும் தொடர்ந்து தான் கேட்பது முறையில்லை என்று உணர்ந்து, எழுந்து நகர்ந்தாள், சித்ரா. ஆனாலும், கேட்ட வார்த்தைகள் வழக்கம் போல கதைக்குக் கருவாகாமல் அவள் மனதை உறுத்தின.

## 6

**வ**ந்து படுத்த வருணனை காய்ச்சல் இரண்டு நாட்களாய் எழ விடவேயில்லை. சித்ரா பயந்தாலும், ஓட்டலின் மேலாளர் உடனடியாய் மருத்துவரை வரவழைத்து சிகிச்சைத் தந்து பரிவாய் கவனிக்க, மனம் தேறினாள்.

உணவகத்தில் வேலை பார்த்த ஒரு தமிழ் சமையல்காரர் மிளகுரசம், மல்லித் துவையல் என்று தயாரித்து அறைக்கு அனுப்பிய கையோடு, "தம்பிக்கு இப்ப கொஞ்சம் தேவலையா?"



என்றும் விசாரிப்பார்.

மூன்றாம் நாள் வரு முழுக்க தெளிந்துவிட்டான்.

"இன்னைக்கு எங்கே போகலாம்க்கா?"

"இன்னைக்கு ஒருநாள் போகட்டும்... அலைய வேணாம்."

"சரி, நான் வரலை... நீயும் ஏன்க்கா அறைக்குள்ளேயே அடைக்கணும்?"

"எங்கே போறது?"

அப்படிக் கேட்டாலும் மாமாவைப் போய்ப் பார்த்தால் என்ன என்றும் தோன்றியது. ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரத்தில் திரும்பிவிடலாம். அதுவும் இங்கு முடிக்க வேண்டிய ஒரு முக்கிய வேலைதானே?

தவிர, நகரின் மற்ற இடங்களையோ, குகை ஓவியங்களையோ தம்பி இல்லாமல் தனியே பார்க்க மனமில்லை.

"சரி. படுக்கையைவிட்டு எழுந்திரிக்காதே. ரெண்டு மணி நேரத்திலே வந்துடுறேன்."

ஆட்டோவை அமைதியான ஓரிடத்தில் நிறுத்திய அதை ஓட்டி வந்த இளைஞன், அங்கிருந்த பெரிய மதில் சுவரின் சிறு கதவைக் காட்டி 'பீச்சே' என்று ஏதோ சொல்லியபடி கிளம்பிவிட்டான்.

'இது வீட்டின் பின்புறம் போல் இருக்கிறதே... இப்படியா நுழைவது?' என தனக்குள் முணுமுணுத்தாலும், மனித நடமாட்ட மற்ற அச்சிறு சாலையில் தனியே நிற்க மனமின்றி, அந்த சிறிய கதவைத் திறந்து நுழைந்தாள், சித்ரா.

சற்றுத் தொலைவில் பழையதாயும், பெரியதாயும் வீடு தெரிந்தது. வீட்டை அடைய கல்படிகள் இருந்தன. இவள் அதில் ஏற முனைந்த நேரமே– ஒரு பருத்த ஓணானும் படியேற– இவள் அஞ்சி இறங்கினாள்.

இவள் அசைவில் அதுவும் அல்லாட, இவள் ஒடி ஒதுங்கி நின்ற இடத்தில் இருந்த சிறு அறையில் இருந்து பேச்சுக் குரல்கள் தெளிவாய் கேட்டன.

அவசரமாய் விலக நினைத்தவளை, அசையவிடாமல் கவ்வி இருந்தது அவள் முதுகில் அழுத்திய ஒரு முள் கிளை.

கத்தவோ, அசையவோ முடியாமல் சிறைப்பட்டு நின்றாள்.

"யாரோ எழுதின லெட்டருக்காய் என்னை ஏன் உலுக்கிறே நிகிலா? என் பெரியப்பா பார்க்க அமைதியானவர்னாலும் அழுத்தமானவர்... அவரை இப்படி செய்யுங்க, அப்படி

செய்யாதீங்கன்னு யாரும் உத்தரவு போடக்கூடாது."

"ஏன் முடியாது? இத்தனை ஆண்டுகள் அவருக்காக உழைச்சி இருக்கீங்க. உங்க உழைப்பை எடுத்துகிட்ட அவருக்கு உத்தரவை ஏத்துக்க முடியாதாக்கும்?"

"என்ன உத்தரவு போடலாங்கிறே? உங்க சொத்து முழுக்க எனக்குத்தான், எனக்கு மட்டுந்தான்னா?"

இந்தப் பக்கம் ஓணான் நடமாட்டம் உண்டா என்று விழி சுற்றியவளின் பார்வை, நிலைகுத்தி நின்றது. காரணம், அந்த ஆர்ப்பாட்டமான கருநீல பைக்!

முன்புறக் கண்ணாடி தடுப்பு, பலவித பளபளப்பான பாகங்களுடன் நின்றிருந்த இதில்தானே மூன்று நாட்களுக்கு முன்பு அந்த அழகிய ஜோடி ஏறிப் பறந்தார்கள்?

அப்படியானால் உள்ளே சிறிக்கொண்டு இருப்பவர்கள் அவர்களேதானா?

இதென்ன விதியின் விளையாட்டு?

முள்ளின் பிடியில் இருந்து தன்னை விடுவிக்க மேலும் மும்முரமாய் முயன்றாள், "ஆம்பிளைங்களே இப்படித்தான்.. திடீர்னு ஒரு முடிவெடுத்துட்டு, பிறகு அதை மாத்தப் பிடிக்காம குரங்கு பிடியாய் தொங்கறது! ஒரு கடிதத்தைப் பார்த்தும் எடுக்கிற முடிவா, இது? அவ வந்ததும் பார்த்துப் பழகி முடிவெடுத்தால்... வேணாங்கலை. இப்படியாவது உங்க பெரியப்பாவுக்கு புத்தி சொல்லலாம்ல நீங்க?

"அவ வர்றதுக்கு முன்னே நீ ஏன் இத்தனை ஆர்ப்பாட்டம் செய்றேன்னு எனக்குப் புரியலை?" ஆண்குரல் அலுத்தது.

"ஊர் முழுக்கத் தெரிஞ்சாச்சே? பெரியவரின் மருமகள் வரப்போறாங்கிறதைத் தமுக்கு அடிக்காததுதான் பாக்கி."

"அது அவர் விருப்பம்... எல்லாம் அவர் இஷ்டம், விடு."

"அப்படி விடக்கூடாதுன்னுதான் பேசுறேன். இனி நீங்க தனியாள் இல்லையே, சரத்? என்னையும் கலந்துக்கணும் இல்லையா? நம்ப கல்யாணத்துக்குப் பிறகு இந்தப் புராதன அரண்மனையிலே நம்மால் கால்ந்தள்ள முடியாது. ஜிம்கானா பகுதியில் வீடு பார்த்திருக்கேன். அடுத்து, கார் வேணும். பிறகு பிள்ளைங்க் படிப்புன்னு ஏகச் செலவு வரும்."

"ஒரு நிமிடம், நிகிலா. எங்களைத் தப்புச் சொன்ன நீயும் நிறைய தப்புக் கணக்கு போட்டிருக்கே?"

உள்ளே இருந்தவனின் முகம் பார்க்க முடியாவிட்டாலும், அவன்



குரலின் வெப்பம் இவளை நடுக்கியது.

"பழகினோம்... சேர்ந்து சுற்றினது வரை சரி. ஆனால், கல்யாணம் வரை ஏன் போறே?"

"பின்னே இந்தப் பழக்கம் எதுக்காம்?"

"கல்யாணப் பேச்சு இதுவரை நம்மிடையே வரலை. இதெல்லாம் நடந்த பிறகு இனி எழ வாய்ப்புமில்லை."

"கோபத்துல வார்த்தைகளை விடாதே, சரத். உனது கோபம் உன் பெரியப்பா மேல்தான் இருக்கணும். என் மேல இல்லை. நாம இணையறது புத்திசாலிதனம்."

"சொத்து அத்தனையும் சுருட்டணுங்கிறியே?"

"அது உன் நன்மைக்காகவும்தான், சரத்" பெண் குரலின் சுருதி கெஞ்சலாய் இறங்கியது.

ஒருவழியாய் தன் ரவிக்கையைக் கவ்வி இருந்த முள்ளைப் பிய்த்துவிட்டு, கல் படிகளில் மீண்டும் ஏறினாள், சித்ரா.

ஓணானுக்கு அஞ்சி மெல்ல ஏறியவள், ஒருவழியாய் 20 படிகளை ஏறியபோது ஒரு குரல் அவளை அதட்டியது.

"கோன் ஹை?"

நடுங்கி நிமிர்ந்தாள்.

கீழ் அறையில் சண்டையில் மும்முரமாய் இருந்ததாய் அவள் நினைத்த அதே வாலிபன்தான், இப்போது அவள் முன் கடுகடுவென்று நின்றான்.

"நா... நான் மிஸ்டர் சருநாத்தைப் பார்க்க வந்தேன்."

"ஓ... தமிழா? அதனால் இத்தனை உரிமையாய் வீட்டின் பின்புறத்திலே புழங்க அவசியமில்லை."

"தெரியும். ஆனா, ஆட்டோக்காரன் இப்படி பின்வாசல்ல இறக்கி விட்டுட்டான். சாலை ரொம்பத் தனிமையாய் இருந்தது. அதான் வேறு வழி இல்லாம பின் கேட்ல நுழையவேண்டியதாய் போச்சு."

பேசியவளை அவன் விழிகள் கூர்ந்து கவனித்தன.

மிக எளிய ஆடை அலங்காரத்துடன் இருந்தாலும்– தெளிவும், கம்பீரமுமாய் நின்றாள்.

சித்ராவிற்குமே தன் தன்னம்பிக்கை ஆச்சரியம்தான்.

முன்பென்றால் ஒரு சொல் தாங்காமல் குன்றி, கண்களில் நீர் துளிர்த்திருக்கும். வாழ்வில் விழுந்த அடிகள் அவளைத் துணிவாக்கி இருந்தன.

ஆனால், அடுத்து விழுந்த அடி வெகு கனமானது!

"அறைக்கு வெளியே சத்தம் கேட்க, யாரோ ஒட்டுக் கேட்கிறாங்கன்னு நான் நினைச்சது சரிதான். அந்தச் சந்தேகத்துல பின் வழியா வந்ததால் உன்னைப் பிடிச்சாச்சு. என்ன? கேட்டது போதும்னு முடிவு பண்ணியாச்சா?"

வெகு ஏளனமான வார்த்தைகள்!

"முன்பின் அறியாத நீங்க பேசுறதை நான் ஒட்டுக் கேட்க வேண்டிய அவசியமென்ன? இது குறுக்கு வழிங்கிறதால..."

"உனக்கு குறுக்கு புத்தியும் இருந்ததால்..."

"குறுக்கே பேசாதீங்க சார்... மிஸ்டர்..."

"சரத்... சரத்மதுரன்."

அவன் போலி பவ்வியத்துடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். "குறுக்கு புத்தி உடையவளாய் இருந்தா, இப்படிப் பாதி பேச்சிலே நான் ஏன் ஓடிப் போகணும்? முழுக்கக் கேட்டு ஒரு நாவலை எழுதி இருப்பேன்."

"ஓ...? ஒட்டுக் கேட்டு அதுக்கு மேல இட்டுக்கட்டி எழுதும் எழுத்தாளரா?"

"எதுகை மோனையோடுதான் பேசுறீங்க... ஆனா, நிச்சயம் நீங்க கவிஞராய் இருக்க முடியாது" சற்று அலட்சியமாய் சொன்னாள்.

அவன் அடர்ந்த புருவங்கள் சுருங்கின.

"எனக்கு அந்த மாதிரி வெட்டிக் காரியங்களை செய்கிற அளவுக்கு பொழுதில்லை, பொறுமையுமில்லை."

"எழுத அது ரெண்டும் மட்டும் போதாது சார்" என்றாள், காட்டமாய்.

"சரி... இப்ப இப்படி வீட்டு பின்புறமாய் நுழைஞ்ச அம்மணி யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?"

அவன் குரலும் காட்டமாக இருந்தது.

இப்போது சித்ரா சற்று தயங்கினாள்.

இந்த ஜோடியின் சண்டைக்கு தான்தான் மறைமுக காரணமோ?

அப்படியானால் எப்படி அறிமுகப்படுத்திக்கொள்வது?

துணிவை மேலும் திரட்டி நிமிர்ந்தாள்.

"நான் சித்ரா செல்வம். இங்கே என் மாமாவை பார்க்க வந்தேன்."

நூறு ஓணான்களை ஒருசேர பார்த்தவன் போல மாறியது, அவன் முகம்!



# 7

வீட்டை நோக்கி நடந்தவளுக்குத் தன்னைப் பற்றி சில விவரங்களையேனும் சரத்திற்குத் தெரிவிக்க வேண்டும் எனத் தோன்றியது.

"எங்கம்மா— அப்பா அஜந்தாவிலே... இறந்ததால்தான் இந்த ஊரை பார்க்க தேர்ந்தெடுத்தோம். அம்மா கைப்பையிலே கிடைச்ச முகவரியால்தான் மாமாவுக்கு நான் கடிதம் எழுதவும் முடிஞ்சது. உங்களுக்கு என் கடிதம் பற்றி தெரிஞ்சிருக்கலாம்."

"இப்ப ஊர் முழுக்க நீயும், உன் கடிதமும் பிரசித்தம்" —அவன் வார்த்தைகளில் கசப்பு இருந்தது.

எடுத்த எடுப்பில் தன்னை ஒருமையில் அழைத்த அவன் போக்கு பிடிக்கவில்லை. என்னும், தன்னைவிட ஆறேழு வயதுக்காவது மூத்த உறவினன். அப்படி அழைப்பதில் தப்பில்லை என்று சமாதானப்படுத்திக்கொண்டாள்.

"பெரிய எழுத்தாளரான உனக்கு இப்ப எங்களிடையே நடந்த வாக்குவாதம் உன்னால்தானுங்கிறது புரிஞ்சி இருக்கணுமே?"

"நம்ப சந்திப்பு இப்படி அமைஞ்சது துரதிருஷ்டம்தான்."

"எப்படி அமைஞ்சது?"

"ஆத்திரமாய் இருக்கீங்க. அதான், அவசரமாய் பேசுறீங்க."

"உன்னை மாதிரி நிறுத்தி, நிதானமாய் உருகி எழுத எல்லாராலும் முடியாதே?" —மறுபடி அதே எள்ளல்!

"உங்க சொத்தில் பங்கு கேட்க நான் கடிதம் எழுதலை... இங்கே வரவுமில்லை. உறவுன்னு சொல்லிக்க நமக்கு யாரோ இருக்காங்க என்ற ஆர்வம், நப்பாசைதான் காரணம். வாழ்க்கையில எங்களுக்கு நிறைய வேண்டாத மாற்றங்கள் நேர்ந்திடுச்சு. இந்தப் பயணம் ஒரு நல்ல மாறுதலாய் இருக்கும்னு வந்தோம். நான் எழுதிய ஒரு பயணக் கட்டுரைக்கான சன்மானம் இந்த பயணம். மறுவாரம் நாங்க மறுபடி சாத்தூரிலே இருப்போம்... கவலைப்படாதீங்க."

நீள விசிலடித்தான்.

"ம்... எழுத்து போலவே பேச்சும் சரளமாய் வருது!"

"உங்களுக்குக் கோபப்படவும், நீள விசிலடிக்கவும் வரும் போல?"

அவன் விழிகளுக்குள் குபீரென்று ஒரு சிரிப்பு பொங்கியது. அதை அடக்கியவன்,

"கெட்டிக்காரத்தனமாய் பேசுறே, சித்ரா. ஆனால், எங்களுக்கும்

கொஞ்சம் புத்திசாலித்தனம் உண்டு. இதுவரை பார்த்தே இரா ஒரு உறவைத் தேடி ஆயிரம் மைல் பயணப்பட்டியா? அதுவும் உங் வீடும் பறிபோனதை உருக்கமாய் எழுதி மாமாவை உருக்கிட்டே களத்தைத் தயாராக்கிட்டு இப்ப நேரே வந்துட்டே... ம்?"

"உங்களுக்கு புத்திசாலித்தனத்தைவிட சந்தேக புத்தி ஜாஸ்தி தன் சொத்தை அடிச்சுட்டுப் போக எல்லாரும் முயலுறாங்கன்னு நினைக்கிற உங்ககிட்ட வேறென்ன சொல்ல?"

அவன் முகம் சற்று சுறுத்தாலும், உதடுகளில் தொற்றிய அந் ஏளனச் சிரிப்பு இறங்கவில்லை.

"உன் புத்தியைப் போல காலும் சுறுசுறுப்புதான். அதான் பெரியப்பா கடிதம் கிடைச்ச மறுநிமிடம் இங்கே வந்து சேர்ந்துட்டே! பெண்கள் பாவம்... அவங்களுக்கு இடஒதுக்கீடு தந்து கைதூக்கி விடணுங்கிறதெல்லாம் சும்மா."

இவள் குழப்பத்துடன் நின்றிருந்தாள்.

"பெண்களை வம்புக்கு இழுக்காம விஷயத்தை மட்டும் சொல்லுங்க. மாமா எனக்கு ஏதாவது எழுதினாரா?"

"அட்டா... என்னா நடிப்பு! ஆண்கள் உழைச்சு சம்பாதிக்கி காசிலே குஷியாய் குளிர்காயணுங்கிறதுதான் எல்லா பெண்களின் லட்சியம் போல. முதல்ல நிகிலா... இப்ப நீ."

"அப்ப நான் சொல்றதெல்லாம்..."

"அம்புலி மாமா கதை போல இருக்குது. இத்தனை இழப்புகள், அதனூடே நீ கட்டுரை வேற எழுதி ஜெயிச்சுடுறே. அதற்கான பரிசு, நீ இதுவரை பார்க்காத மாமா இருக்கிற ஊருக்கு ஒரு பயணம்... அடேங்கப்பா..."

"அத்தனையும் பொய்யின்னா... அதுக்கான அவசியம் என்ன?"

"காசுக்காக வந்தேன்னு நேரே சொல்ல சங்கோஜமா இருக்குமே... அதான்..."

தன் ஆத்திரத்தை நிதானமாய் 10 வரை எண்ணி அடக்கினாள். "என் கட்டுரை பிரசுரமான இதழை வச்சிருக்கேன். பாராட்டி வந்த டிராவல் ஏஜென்சி கடிதமும் இருக்குது. ஆனா, மாமா எனக்கு எழுதினதாய் நீங்க சொல்ற கடிதம் வரலை."

"வராம எந்தத் தைரியத்துலே கிளம்பினே?"

"இது பரிசாய் கிடைச்ச பயணம். அவங்க சொல்ற நாளிலே தானே கிளம்ப முடியும்?"

"உன் தம்பி வரலையா?"



"அவ... அவனுக்கு உடம்பு சரியில்லை... ஓட்டல் அறையில் படுக்க வச்சிட்டு..."

"உனக்கு கஷ்டங்கள் அடுக்கடுக்காய் வரும் போல!"

உதட்டைக் கடித்தாள். அவன் முகத்தில் ஓங்கி அறைந்தாலென்ன என்ற ஆசையை அடக்க அதிகம் முயலவேண்டியது இருந்தது!

"உங்ககிட்ட நின்னு விதண்டாவாதம் செய்றதில் அர்த்தமில்லை" என்றவள், அவனைவிட்டு விரைந்து நடந்தாள்.

அவன் அவளைத் தொடரவில்லை.

தோட்டத்தைப் போல அல்லாமல் வீடு சுத்தமாகவும், அழகாகவும் பராமரிக்கப்பட்டு இருந்தது.

கதவைத் திறந்த வேலையாள் இவளைப் பார்த்து ஊமையாய் பல கணங்கள் நின்றபின் உள்ளே ஓடினான்.

மறுநிமிடம்– நடுத்தர வயதில் கண்ணியமான தோற்றமுடைய ஒரு பெண் வந்தாள்.

"வாம்மா... சித்ராதானே?"

"ஆமா. எப்படி கண்டுபிடிச்சீங்க?"

"அப்படியே அத்தை ஜாடையிலே இருக்கீங்களே... தவிர, எப்ப வருவீங்கன்னு எல்லாரும் காத்திருந்தாலும், இத்தனை சீக்கிரம் எதிர்பார்க்கலை. உங்க மாமாவை வரச்சொல்றேம்மா. இருங்க."

பெரிய புன்னகையுடன் படபடத்தாள், அப்பெண்.

"நீங்க?"

"மகிழம்மா. ஏறக்குறைய இருபது வருடமாய் இங்கே வேலைக்கு இருக்கேன். அம்மாவுக்கு, அதான் உங்க அத்தைக்கு வீட்ல தமிழ் பேச்சு கேட்கணும்னு ஊரிலேருந்து என்னைய கூட்டிட்டு வந்தாங்க. அம்மாவின் கைப்பக்குவத்துக்கு சமையல் கத்துட்டு, இங்குள்ளவங்களுக்கு தமிழ் பேச சொல்லி கொடுத்துட்டேன்."

"அப்ப இங்கே மொழிப் பிரச்சினை இருக்காது" –லேசாக சிரித்தாள், சித்ரா.

"சிரிப்புகூட அப்படியே அம்மா மாதிரிதான். என்னம்மா குடிக்கிறீங்க?"

வந்ததும் வராததுமாய் சரத்திடம் கிடைத்த வரவேற்பில் வயிறும், மனதும் அடைத்துப்போயின. இனி அங்கே வேறு எதற்கும் இடமில்லை.

"எதுவும் வேணாங்க."

"இதோ பெரியவர் வந்திடுவார். புரிச்சுப்போயிடுவார்ல?"

தனியே விடப்பட்டவளுக்குள் மறுபடி சரத்தின் வார்த்தைகள் குதித்து ஆடின. இவருக்குப் பணம் இருந்தால் அது அவரோடு. இவர் காசிற்காக எல்லாரும் முக்கியமாய் பெண்கள் அலை பாய்வதாய் என்ன ஒரு அகங்கார நினைப்பு?

'இதே மாமா ஏழையாய் இருந்து இருந்தாலும், தான் வந்து பார்த்திருப்பேன் என்றாலும் நம்புவார் யார்?'

எத்தனை சந்தேகங்கள்... இடக்கான விசாரணை?

தணல் மேல் அமர்ந்த அவதியுடன் இருந்தாள், சித்ரா.

அறையுள் வந்த பெரியவரைப் பார்த்ததும் தானாய் எழுந்தாள். தூய வெள்ளை ஜிப்பாவும், தார்பாய்ச்சி கட்டி இருந்த வேட்டியிலுமாய் நெடுநெடுவென்று நிற்பவர்தானா தன் மாமா?

கரம் குவித்தவளை நெருங்கித் தோள் பற்றினார்.

"வாம்மா குழந்தே" சற்று நேரம் உணர்ச்சி பெருக அவளை ஆழப்பார்த்தவர், குழைவாய் இழுத்து உச்சியில் முத்தமிட்டார்.

"மதுரம் உன்னைப் பார்க்க கொடுத்து வைக்கலை."

"எனக்கும்தான் மாமா."

"எனக்கு இந்த பாக்கியம் இருக்குது. உட்காருடா."

அவளுக்குள் உணர்வு பெருகி, தொண்டை அடைத்தது. தான் எதிர்பார்த்து வந்தது கிடைத்துவிட்ட ஆனந்தமோ?

சிலிர்ப்புடன் மாமாவைப் பார்த்தாள்.

மேல்நோக்கி வாரிய கேசம்– அவரது விசால நெற்றியும், கூர்மூக்கை எடுத்துக் காட்டியது. மூக்கு, முழியின் கூர்மையை மீறிய கனிந்த பாவனை.

அந்நேரம் வீடு நுழைந்த சரத், இவர்களிடமாய் தான் நிற்பதா... இல்லை பார்க்காதது போல நகருவதா? என்று தயங்க, பெரியவரின் குரல் அதற்கான தீர்வைச் சொன்னது.

"உனக்குள்ளே நூறு கோப தாபம் இருக்கலாம்ப்பா. எங்கோ யாரோ நம்ப மூஞ்சியில கரியைப் பூசிட்டாங்க என்பதுக்காக தேடி வந்து பார்த்தவங்களை விழுந்து பிடுங்கலாமா? அதுவும் நம் வீட்டுப் பொண்ணு வந்திருக்கா... அவகிட்ட நீ பேசின முறை சரியே இல்லை. முதல்ல சித்ராகிட்ட மன்னிப்பு கேளு நீ."

சரத் மட்டுமல்ல, சித்ராவுமே விக்கித்துப்போனாள்.

"என்ன... பெரியப்பா?"

"பொண்ணு அத்தனை தூரம் எடுத்துச்சொல்லியும் குதர்க்கம்



[illegible]யே... ம்?"

"நீங்க எங்கே... எப்படி?"

"தூண், துரும்பு எல்லாத்திலேயும் இருப்பேன்டா, ராஜா. இது என் ராஜ்ஜியமில்லையா? சாரி சொல்லிடு."

"சாரி... வந்து... ஏதோ சந்தேகத்துல ரெண்டு வார்த்தை அதட்டலாய் கேட்டது உண்மைதான்" மென்று விழுங்கினான்.

"ரெண்டா? நம்ப வீட்டுப் படி ஏறினதுமே அவளை வறுக்க ஆரம்பிச்சுட்டியே? இன்னொரு பொண்ணா இருந்தா அப்படியே திரும்பிப் போயிருப்பா."

சித்ராவிற்கும் நம்பத்தான் முடியவில்லை. தனக்கும், சரத்திற்கும் இடையே நடந்த பேச்சை பெரியவர் கேட்டாரா?

அப்படியானால் எங்கிருந்து கேட்டார்? ஏன் குறுக்கிடவில்லை? கேள்விகளை அடக்கமுடியாமல் மெள்ள வினவினாள்.

"நீங்க எங்கே... மாமா?"

"பின்பக்கத் தோட்டம் காடாட்டம் கிடக்குதும்மா சித்ரா. சுத்தம் செய்யலாமா, இல்லை 'பிளாட்' போட்டு வித்துடலாமா என்ற யோசனையோடு 'சர்வே' பண்ணிட்டு இருந்தேன். படிக்கட்டின் கீழே மரத்தை வெட்டி, விறகுக்கட்டாய் கட்டி வச்சிருந்துச்சு. அது நம்ப வீட்டுக்காகவா இல்ல, வெளியே கடத்தப்படுமான்னும் பார்த்திடலாம்னு புகுந்த நேரம்– இவனும், நிகிலாப் பொண்ணும் 'பைக்'ல புயலாய் வந்தாங்க. 'பைக்'கை முறையா ஷெட்டிற்குள் நான் நினைச்ச நேரம் நிறுத்துறதுக்குப் பதிலாய், ரெண்டு பேரும் அதுக்குள்ளே புகுந்து சண்டை போட ஆரம்பிச்சாங்க. இது நமக்கு எதுக்குப்பான்னு நகரலாம்னு நீயும் அங்கே வந்து முள்ளிலே சிக்கினே... இந்தப் புயல்ல நம்பக் குழந்தையும் அலைக்கழியுதே என்று பதட்டம்தான். ஆனா, நீ பதறாம சமாளிச்சம்மா. பார்க்க மட்டுமல்ல, குணத்துலேயும் நீ உங்க அத்தை மதுரம் மாதிரிதான்." கண்சிமிட்டினார்.

"என்ன பெரியப்பா... என்னைத் திட்டுவீங்க... இப்ப நீங்களே கண் அடிக்கிறீங்க?"

"உற்சாகமாய் இருக்கேன்டா பயலே."

சித்ராவை மறுபடி ஆர்வமாய் பார்த்தவர், அவளது தலையைத் தடவினார். "மதுரமும் லேசுல கண்ணைக் கசக்கி மூக்குறிஞ்சமாட்டா. தான் என்ன நினைக்கிறோம்ங்கிறதை விளக்கு விளக்குன்னு விளக்கிடுவா. ஏன்னா, அவ மனசு சுத்தமானது. பிறகுக்கு அதை வெளிக்காட்ட என்ன தயக்கம்? நீயும் அதே ரகப்

பொண்ணுடா."

சித்ராவிற்கு அவரைக் கட்டிக்கொள்ளலாம் போலிருந்தது.

"மகிழு..."

மகிழம்மாவின் முகம் பூரிப்பானது.

"குழந்தை என்ன சாப்பிட்டா?"

"ஏதும் வேணாம்னாங்க. ஆனா, மாதுளை சாறு பிழிஞ்சிட்டேன்."

"அடடா, வீம்பும். இருக்கா? இருக்கட்டும், கொண்டுவா, குடிப்பா. தம்பிக்கு உடம்புக்கு என்னம்மா?"

"ரெண்டு நாளாய் நல்ல காய்ச்சல் மாமா. இன்னைக்குத் தேவலை. ஆனா, அலைய வேண்டாம்னு நான் மட்டுமாய் வந்தேன்."

"பால் திரட்டு, ஜாங்கிரியெல்லாம் கொண்டு வா, மகிழு."

உத்தரவிட்டவர் இவள் அருகிலேயே அமர்ந்து சாப்பிட வைத்தார்.

"நீயும் எடுத்துக்கோப்பா, சரத்" என்று– நழுவ முயன்றவனையும் இருத்தினார்.

"போதும் மாமா.. இப்படி இடையிலே நான் சாப்பிடுறதில்லை."

"அப்பக் கிளம்பு. போய் வர்ணனோட உன் பெட்டியையும் மூட்டைக் கட்டிட்டு இங்கே வருவோம்."

"அதெல்லாம் எதுக்கு மாமா?"

"டேய் சரத், நீ வெறுமே சொன்ன 'சாரி'யில குழந்தையோட மனசு ஆறலை போல. ஏம்மா, இவனை மண்டி போட்டு கெஞ்சச் சொல்லவாடா?"

சரத்தின் முகக் கடுப்பைப் பார்த்தவளுக்குச் சிரிப்பு பொங்கியது. "அதெல்லாம் வேணாம் மாமா. வருக்கு உடம்பு தேறினதும் ஒருநாள் கண்டிப்பாய் சாப்பிட வர்றோம். ஒரு வாரத்துக்கு எப்படியும் ஓட்டல் 'பில்' கட்டியாச்சே... சுற்றுப்பயணம் முடிச்சு பயணக் கட்டுரைக்கான குறிப்பெல்லாம் தயார் பண்ணணும்."

"அப்ப சரி. நான்தான் மண்டியிட்டுக் கெஞ்சணும் போல" குனிய முயன்றவரை பதறி தடுத்தாள்.

"என்ன மாமா... இப்படி வாஜ்பாய் பாணியில் இறங்கிட்டீங்க?"

"பின்னே என்னம்மா? நெருங்கிய சொந்தக்காரங்க இருக்கையிலே ஓட்டல்ல தங்கி கட்டுரை எழுதுவேன்னா, சரியா? இங்கே இருந்து நாவலாய் எழுதித் தள்ளு... யாரு கேட்கிறது உன்னை?"

ஓரக்கண்ணால் அவர் சரத்தைப் பார்த்தபடி பேச– இவளுக்கு



மறுபடி சிரிப்பாய் வந்தது.

"ஆகட்டும் மாமா" ஒத்துக்கொண்டாள், மகிழ்ச்சியாக!

## 8

"எத்தனைப் பெரிய வீடு, இல்லக்கா? நம்ப அப்பாவுடைய மேசை போல பத்தைக்கூட இந்த அறையில் போடலாம் போல."

வியப்புடன் வீட்டைச் சுற்றி வந்தான், வர்ணன்.

ஒருவழியாய் கால்கள் கடுக்கவும் உட்கார்ந்தான். 'வரு, வரு' என்று அனைவரும் பிரியமாய் விளிக்க, அத்தனை பேரிடமும் ஒட்டிக்கொண்டான். ஜாங்கு, மாலிக், சங்குரு என்று அங்கிருந்த வேலையாட்களுடன் மாலை நேரம் கிரிக்கெட் ஆட்டம் நடந்தது.

"காய்ச்சல் வந்த உடம்போடு ரொம்ப ஆட வேணாம்ப்பா" என்று மகிழம்மா அவனைக் கருத்தாய் கவனித்துக்கொண்டாள்.

மாமாவும் சித்ராவை சும்மா இருக்க விடவில்லை.

"வாம்மா வந்து நம்ப நெசவு ஆலையைப் பாரு" என்று கூட்டிப்போனார். தறியில் பலர் மும்முரமாய் இருக்க– அப்பெரிய கூடத்தைச் சுற்றி வந்து, ஒவ்வொரு சேலையின் நிறத்தை வேலைப்பாட்டை ரசித்தாள்.

ஒரு பக்கம் சேலைகளும், மறுபக்கம் சால்வைகளும் உருவாகிக் கொண்டிருந்தன.

"அவுரங்காபாத்ல உங்க நெசவுக் கூடத்தை உங்களோடு பார்க்கணும்னு இருந்திருக்குது மாமா."

"நம்மளதுன்னு சொல்லுடா."

"ம்... முதல்நாள் சுற்றுலாப் பயணிகளை இப்படி ஒரு கூடத்திற்கு அழைச்சுப் போறதாய் இருந்தது. ஆனா, பாதியிலே வரு வாந்தி எடுத்ததால் அறைக்குத் திரும்பிட்டோம். ஒருவேளை எங்களை இங்கேதான் அழைச்சுட்டு வந்திருப்பாங்களோ?"

"இல்லம்மா. அதெல்லாம் சின்ன இடங்க. அங்கே சேலை, சால்வைகளை விக்கிறதும் உண்டு. சுற்றுலா ஏஜெண்டுகள் கமிஷனுக்காக அங்கே கூட்டிட்டுப் போவாங்க."

"அப்ப இங்கே பார்க்க வர்றவங்க, ஆசைப்பட்டாலும் ஏதும் வாங்கிக்க முடியாதா?"

"வந்து பாருங்கன்னு நாம யாரையும் அழைக்கலையேடா.

பிறகென்ன விற்பனை?"

"ஆனா... இத்தனை அழகான துணிகளை பார்வையாளர்கள் பார்த்து பாராட்டுறதும், ஆர்வமாய் வாங்கறதும் தொழிலாளர்களை உற்சாகப்படுத்துமே மாமா? அது அவங்களைப் பெருமைப்படுத்தும்னு நினைக்கிறேன்."

பெரியவர் சற்று வியப்புடன் இவளைப் பார்த்தார். "அப்படீங்கிறே? சரத்தும் இதையேதான் சொன்னான். ஆனா, நான் அதை காதிலே ஏத்திக்கலை."

தறி வேலையை நிறுத்திவிட்டு பலர் தன்னையே பார்ப்பது புரிய, சற்று சங்கடமாய் சிரித்தாள், சித்ரா.

"புது எஜமானியைப் பார்க்கிற ஆவல்" நகைத்தார், சரூநாத்.

"மாமா... வந்து இந்த விஷயத்தைத் தெளிவுபடுத்தணும், நான் அதாவது நாங்க இங்கேயே தங்கிட முடியாது. அந்த நோக்கத்திலேயும் வரலை."

"ம்... கணக்காய் ஆளுக்கொரு பெட்டியோடு கிளம்பி இருக்கீங்களே..."

"ம்... சாத்தூர் பள்ளியில் அம்மாவின் வேலையை எனக்குத் தந்திருக்காங்க. பள்ளிக்கூடத்தை ஒட்டியே வீடும் ஒதுக்கியாச்சு. ஒரு மாசமாய் அங்கேதான் தங்கி இருந்தோம். நல்ல மாற்றமா இருந்துச்சு. வரூவும் அதே பள்ளியில் படிக்கிறதால் பிரச்சினை இல்லை. உங்களைப் பார்க்க ஆசைப்பட்டேன் மாமா. அத்தை இருந்தப்பவே நம்மிடை இப்படி பரிச்சயம் ஏற்பட்டிருந்தா நல்லா இருந்திருக்கும். ஆனா, இப்பவாவது..."

"மதுரத்துக்கோ எனக்கோ, நம்மை ஒதுக்கினவங்களை ஏன் போய் பார்க்கணுங்கிற வீம்பு கிடையாதும்மா, சித்ரா. அதை நீ புரிஞ்சுக்கணும். இளமையிலே, கல்யாணமான புதுசிலே உறவோட அரவணைப்பு இல்லாதது பயமாய், ஆதங்கமாய்தான் இருந்துச்சு. ஆனா, நாளாக நாளாக அதுவும் பழகிடுச்சு. தன் சின்னத் தம்பியைப் பற்றி– அதான் உங்கப்பாவைப் பற்றி அடிக்கடி பேசுவா மதுரம். கொஞ்சம் தலையெடுத்ததும் எல்லாரையும் தேடி வந்தோம். ம்ப்ச்... உங்க தாத்தா – பாட்டி கோபம் அப்பவும் ஆறலை. என் தம்பி, தங்கைக் குழந்தைங்க மெல்ல எங்களோடு ஒட்டிகிச்சுங்க. விடுமுறையெல்லாம் எங்களோடுதான் இருக்கிடுச்சுங்க... ஆக, நாங்க பயணப்படுறதே இல்லை. சதா ஒண்ணு மாத்தி ஒரு குட்டி எங்களோடு இங்கே இருக்கும். எல்லாரையும் சென்னைக்கு



அனுப்பி படிக்க வச்சோம்.

தமிழ்நாட்டில் கிடைக்கிற கல்வி, பண்பாடெல்லாம் உசத்திங்கிற கருத்து, எனக்கு. அங்கிருந்தபோதே காஞ்சி, திருப்புவனமெல்லாம் போய் அந்த நெசவு முறைகளைக் கத்துகிட்டவன், மூதாதையர் தொழிலையே தொடருவோம்னு இங்கே வந்துட்டேன். புதுப்புது வடிவங்கள் தொழில்நுட்பத்தைப் புகுத்த தொழில் வளர்ச்சி அடைந்தது.

"தொழில் நேர்த்தியாய் இருக்குது மாமா. ஆனா, கட்டடம் ஏன் இப்படி பராமரிப்பு இல்லாம இருக்கணும்?"

பெரிதாய் நகைத்தார், சரூநாத்.

"நீயும், சரத்தும் பேசறது ஒண்ணு போல இருக்கிறதம்மா... இளவயசுக்காரங்க... ஒத்த சிந்தனை..."

"முதல்ல வெளிப்புறமாவது வண்ணம் தீட்டலாம் மாமா. அப்படியே தோட்டத்துக்கு முன்புறம் ஒரு 'ஷோகேஸ்'ம் போட்டா நல்லது."

"அது எதுக்குடா?"

"நெற்றிக்குப் பொட்டு எதுக்கு வைக்கிறோம்? ஒரு களை ஏற்படத்தானே? உள்ளே நெய்யற துணி தினுசுகளை வெளியே காட்டணும் மாமா. சுற்றுலா பயணிகள் வந்து பார்க்கணும். அவங்களை வாங்கத் தூண்டுற வகையிலே காட்சியில் வைக்கணும்."

"சுற்றுலாப் பயணிகளை கூட்டிட்டு வர்றவங்க 'கமிஷன்' எதிர்பார்ப்பாங்க. அதுக்குமேல ரெண்டு சேலைகளை இலவசமாய் எடுத்துக்குவாங்க... வேண்டாத தொல்லை."

அவரது பரந்த நெற்றி சற்று சுருங்கியது.

"எத்தனையோ சவால்களைத் தாண்டிதானே மாமா இந்நிலைக்கு உயர்ந்து இருக்கீங்க? இதெல்லாம் உங்களுக்குத் துச்சம்... உங்க பெயர் இதைவிடப் பிரபலமாகணும்."

"அதாவது 'மதுரா வீவர்ஸ்'ங்கிற உன் அத்தை பெயர் பிரஸ்தாபப் படணுங்கிறே?" கண்சிமிட்டினார்.

"அப்பாடா.... அதிகம் பேசிட்டேனோன்னு பயந்தேன். ஆனா, நீங்க உற்சாகமாக இருக்கிறதைப் பார்த்தால் பேசினது பரவாயில்லைன்னு படுது."

"ஓ... கண்சிமிட்டினதைச் சொல்றியா? என்ன வேணும்னாலும் சொல்லுடா, ராணி. இனி இது உன் ராஜ்ஜியம். உன் பள்ளிக்கூட வேலை இருக்கட்டும். இப்ப விடுமுறை நேரம்தானே? ரெண்டு மாசம் எங்களோடு இரு. நீ சொல்ற மாற்றங்களைத் தலைமேற்

கொண்டு செய்றேன். அதிலே மனமிரங்கினால் சரி... இல்ல, என்வாழ்க்கை சாத்தூரிலேதான்னாலும் நான் தடை சொல்லலை. என்ன சரியா? சரியான முடிவுதானே இது?"

"கச்சிதமான முடிவு."

தலையாட்டினாலும், சித்ரா விற்கு நிச்சயமாக தான் அடுத்த மாதம் சாத்தூரில் இருப்போம் என்ற நிச்சயமிருந்தது. ஆனால், அதை இப்போது சொல்லி மாமாவின் ஆசைத் திரியை வெட்ட மனம் இல்லை.

"அன்று மாலையே தான் கண்ட ஆலையை, தொழிலாளர்களைப் பற்றிய குறிப்பு எழுதிக் கொண்டிருந்தபோது வரு ஓடி வந்தான்.

"அக்கா, சீக்கிரமா வாயேன்... எத்தனைப் பெரிய யானை, குதிரை நிக்கிது வா."

"நிஜ யானையா?"

"வந்து பாருக்கா."

தம்பியின் இழுப்பிற்கு இயைந்து ஓடினாள்.

சமையல்கட்டினைத் தாண்டிய பகுதிக்குக் கூட்டிச்சென்றவன், "மகிழா மாமி, அக்கா வந்தாச்சு" –அறிவித்தான்.

"என்னம்மா... ஏதோ யானை குதிரைங்கிறான்?" என்றபடி 'அவுட் அவுஸ்' போன்று வீட்டைவிட்டு, சின்ன இடைவெளிக்கு அப்பால் நின்ற அறைக்குள் நுழைந்தவளின் வாய் திறந்தபடி நின்றது.

"எப்படி இருக்குது?"

ஏதோ தானே அப்பெரிய மரச் சிற்பங்களைச் செய்துவிட்டாற் போல எக்களித்தான், வரு.

அந்த உயர்ந்த அறையை அடைத்தபடி நின்ற யானை, குதிரைச் சிலையைப் பார்த்தவள் மெள்ள சொன்னாள்.

"நல்லவேளை... பகல்ல இங்கே வந்தேன், ராத்திரி தனியே வந்திருந்தா நிஜ மிருகங்க நிற்குதுன்னு பயந்து அலறி இருப்பேன்."

"அதெல்லாம் நம்ப சரத்துடைய அப்பா கைப்பட செய்ததும்மா."

"எதுக்காக?"

"பிள்ளைங்க விளையாடத்தான். அவர் பிள்ளைகளோட அக்கா குழந்தைகளும் எல்லா விடுமுறைக்கும் இங்கேதான் வந்தாங்க. ஊஞ்சல், சொன்னு செய்து வச்சவர். பிறகு இதையும் செஞ்சாராம். கோடை காலத்துல, வெளியே பந்தல் வேய்ஞ்சு இதையெல்லாம் அதற்கு கீழே வச்சிடுவார். குழந்தைங்க மேலே ஏறி யானை, குதிரை சவாரி செய்றதாய் நினைச்சு குஷிப் பட்டுக்குவாங்க."

"ஓ... மர வேலை தெரிஞ்சவர் போல..."

"ஆமம்மா... ஆனா, பலகீன உடம்பு. சிறுவயசுலே மனைவி இறந்த பிறகு வாழ்க்கையிலே அவருக்குப் பிடித்தமில்லை. உடம்பையும் கவனிக்கிறதில்லை. நம்ப அம்மாதான் அதட்டி, உடம்பைத் தேத்திவிடுவாங்க. அவர் பிள்ளைகளையும் பெரியவர்தான் படிக்க வச்சது. ஆனா, வரும்போதெல்லாம் தன் கைப்பட ஏதாவது செஞ்சு எடுத்துட்டு வருவார். பொம்பளைங்க பிரியமாய் பலகாரம் செய்து தர்றது போல."

"இப்ப அவங்க?"

"அம்மா இறந்த முந்தின வருடமே அவர் இறந்துட்டார். சரத்தோட அண்ணனுக்கு அப்பாவைப் போல கைவேலையில திறமை. ஏதேதோ செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்றார். போக வர இருப்பார். சரத் தம்பி நம்ப ஐயாவுக்கு ஒத்தாசையா இங்கேயே இருந்துட்டார்."

"ரெண்டே பசங்கதானா?"

"ஆமங்கம்மா... பெரியவரோட தங்கைப் பொண்ணும் கல்யாணமாகி வெளிநாட்டுல இருக்குறாங்க... பெண் குழந்தையா நீங்க வந்ததுல ஐயாவுக்கு ரொம்பத் திருப்தி. அவரு குணத்துக்கு தெய்வம் குறை வைக்காதம்மா."

அறையில் இருந்த சிற்பங்களைப் பார்த்தவளுக்கு உள்ளே மின்னல் அடித்தது.

"என் மகிழம்மா- இந்த சின்ன மான், பாவை பொம்மைகளைத்


## சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.

துடைச்சு, 'வார்னிஷ்' செய்து வீட்ல அங்கங்கே அலங்காரமாய் வச்சா என்ன?"

"செய்யலாம்மா. நீ வச்சா ஐயா 'நல்லா இருக்குடா' என்கிறதைத் தவிர மறுவார்த்தை சொல்லமாட்டாரே."

வரும் இரு நாட்களுக்கு அந்த வேலையில் மூவரும் மும்முரமானார்கள். யானை, குதிரை போன்ற பெரிய சிற்பங்கள் ஆண்களின் துணையோடு வெயில் காண புறப்பட்டன.

ஆளுக்கொரு உப்புத் தாள் துண்டத்தைக் கையில் தந்து, "தேய்ச்சு, பழைய வர்ணங்களை சுரண்டுங்க" என உத்தரவிட்டாள்.

திட்டு திட்டான பழைய சாயம் உதிர்ந்துவிட, சிற்பங்களின் கம்பீரம் மீண்டது.

அதேநேரம்– தறிக்கூடத்து மராமத்து வேலையும் ஆரம்பமானது. இவள் சொன்ன அளவில் கண்ணாடி பேழை ஒன்றும் உருவாகத் தொடங்கியது.

சிற்பங்கள் வெளியேறிவிட்ட அறையை மேலும் சித்ரா குடைய– பழைய பாசிமணி மாலைச் சரங்களும், முத்துச்சரங்களும் கிடைத்தன.

"இதென்ன இத்தனை நீளமாய் இருக்குது, மகிழம்மா?"

"கதவுக்குப் போடுற பாசித் திரைம்மா. சிலது அறுந்ததும் குழந்தைங்க விளையாடன்னு அம்மா இங்கே அனுப்பிட்டாங்க."

அவற்றை எடுத்துக்கொண்டாள், சித்ரா.

அழகிய இரு சால்வைகளை இணைத்தவள், அவற்றின் ஓரத்தில் முத்துகளை வைத்து தைப்பதைப் பார்த்த பெரியவர் கேட்டார்–

"என்னடா.. இத்தனைப் பெரிய 'ஷால்' யாருக்கு?"

"யானைக்கும், குதிரைக்கும் மாமா."

"புரியலையேடா ராணி."

"சீக்கிரமே புரியும்."

அவரைப் போலவே கண்சிமிட்டிச் சிரித்தாள், அவள்!

## 9

**மா**மா ஒரு இளைஞனின் உற்சாகத்துடன் வளைய வருவதைக் கண்டு மகிழ்ந்தாலும், சரத் கண்ணிலேயே படாதது சித்ராவை வருத்தியது. 'உன் சொத்தைப் பகிர நான் இங்கு வரவில்லை' என்று அவனிடம் வீம்பு பேசினாலும், அவன் இத்தனைக் காலம் இந்த வீட்டில் அனுபவித்து வந்த பாசத்தை, முக்கியத்துவத்தைத்



தான் பிடுங்கிக்கொண்டோமோ என்ற குற்ற உணர்வு அவளுக்குள் [illegible].

அன்றிரவு உணவு நேரம் சரத் சாப்பிட வந்து அமர, முகம் மலர அவனைப் பார்த்து சிரித்தாள்.

சற்று குழப்பத்துடன் விழித்தான்.

"இப்பக்கூட யோசிச்சேன். உங்களைக் கண்ணுலேயே காணோமேன்னு."

"அடிக்கடி கண்ணுல பட்டா, இவன் ஒழியமாட்டானான்னு சாபம் வரும்."

"ஐயா சின்னவரு 'பிசி'யா இருக்காரும்மா சித்ரா. அதுவும் உன் உத்தரவை நிறைவேற்றுற மும்முரந்தான்."

புரியாமல் மாமாவைப் பார்த்தாள்.

"சுற்றுலா ஏஜெண்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கான்."

"வெற்றிகரமாய் ஒரு வார்த்தை சேர்த்துக்கோங்க பெரியப்பா."

"ஓ.. வாழ்த்துகள்" –உற்சாகமாய் பாராட்டினாள், சித்ரா.

"நானும் மகனை வேறு காரியத்துக்காக வாழ்த்திட்டுதான் இருக்கேன்."

சப்பாத்தியைப் பிய்த்து, கோழிக் குருமாவில் தோய்த்து வாயிலிட்ட சரத்தின் புருவங்கள் உயர்ந்தன.

"என்ன எப்ப வாழ்த்தினீங்க?"

குரலைத் தணித்தார், பெரியவர்.

மனசார வாழ்த்தி, கடவுளை வணங்கிட்டு இருக்கேன்டா ராஜா.. அந்த நிகிலாப் பொண்ணு எப்படிங்கிறதை இப்பமாவது உணர்ந்தியே.. தப்பினே போ.."

சரத்தின் முகம் இறுகியது.

அலைந்த களைப்பை மீறி மலர்ந்திருந்த அவன் முக மாற்றத்தைக் கண்ட சித்ராவிற்கு முதன்முறையாய் மாமாவின் மீது கோபம் வந்தது.

'ஓய்ந்து வந்தவரைச் சாப்பிடவிடாமல் இதென்ன இங்கிதம் இல்லாத பேச்சு?'

"இப்ப நான் வெற்றிகரமாய் முடிச்சு வந்த விஷயத்தைப் பற்றிப் பேசலாமே பெரியப்பா."

இவர்கள் பேச்சு புரியாத வர்ணன், தன் சாப்பாட்டு தட்டுடன்

சாத் அருகே போய் உட்கார்ந்து கேட்டான்.

"அத்தான், நான் கேட்டதை வாங்கிட்டு வந்தீங்களா?"

"மறப்பேனா... பாக்கெட்டில் இருக்குது. எடுத்துக்கோ."

"நிஜமா?"

வரூ, சரத்தின் சட்டைப் பையைத் துழாவ, சித்ரா கண்டித்தாள்.

"ஷ்... வரூ... அவர் சாப்பிட்ட பிறகு எடுத்துத் தருவார்."

"சரி, சாப்பிட்டதும் நானே எடுத்துத் தர்றேன்."

கைகழுவியபின் சரத் எதையோ எடுத்து நீட்ட - ஆர்வமும், சிரிப்புமாய் வரூ அவனுடன் இழைவதை வியந்து பார்த்தாள்.

அத்தான் என்று சகஜமாய் அழைத்து, உரிமையாய் பொருள் வாங்கிவரச் சொல்லுமளவுக்கு தம்பிக்கும், இவருக்கும் பழக்கம் எப்போது ஏற்பட்டது?

"என்னம்மா அப்படி பார்க்கிறே?" இனிப்பு சோம்பை மென்றபடி கேட்டார், சரூநாத்.

"இல்ல... முறை வச்சு கூப்பிடுறானே... எப்படின்னு?"

"நான்தான்டா சொல்லித் தந்தேன். அப்பத்தான் உறவு பலப்படும். உனக்கும்கூட சரத் அத்தான்தான். ஆனா, அப்படிக் கூப்பிடுற அளவுக்கு உன் கோபம் ஆறி இருக்கான்னு தெரியலை" –நகைத்தார்.

"அதெல்லாம் மறந்துட்டோம் மாமா. அவர் நிலையிலே நான் இருந்தால் இன்னுங்கூட முரட்டுத்தனமாய் பேசி இருக்கக் கூடும்."

"ஏமாந்த கோபம்டா. நிகிலா அழகான பொண்ணு. சென்னையிலே படிச்சதால் சரளமாய் தமிழ் பேசுவா. சரத்துக்குக் கல்யாண நோக்கம் இருந்ததிலே தப்பில்லை. எனக்கே சபலந்தான்."

"என்ன மாமா இது... இந்த வயசிலே?" –போலியாய் தலையில் தட்டிக்கொள்ள,

"வீட்டின் மருமகளாய் இந்தக் குட்டி வந்தால் என்னன்னும்மா" விளக்கினார்.

"புரியுது, சொல்லுங்க."

"அவ சுயரூபம் தெரிஞ்சுபோச்சே. சரத்தைவிட அவனது சொத்து அதிமுக்கியம்னு அவ நினைச்சதுல அவனுக்கு அதிர்ச்சி. நான் முன்னமே அந்தக் குட்டியை அழகான ராட்சசின்னு கண்டுட்டேன். இவன் சின்னப்பயல்தானே... ஏமாந்த கோபம்... அதுல உம்மேல பாய்ஞ்சுட்டான்."

"அதை மறந்துட்டேன் மாமா."



"நல்லதுடா கண்ணு. அப்ப நாம எல்லாரும் நாளைக்கு அஜந்தா போலாமா?"

"ஆகட்டும் மாமா."

அவள் உதடுகள் விரிந்தாலும், கண்கள் கலக்கம் காட்டின.

"நீயும், வரூவும் அங்கே தனியாப் போக வேணாம். ஏன், எங்கேயுமே தனியாப் போக வேணாம்."

"ஏன் வேண்டாம்?"

சீதாப்பழத்தை மென்று, கொட்டைகளைச் சிறு கிண்ணமொன்றில் போட்டபடி சரத் கேட்டான்.

"அவங்க அஜந்தா பார்க்கணுமே... தனியாப் போக வேணாங்கிறேன்ப்பா."

"முதல்ல நாம எல்லோரா போலாம் பெரியப்பா. ஏன்னா, அங்கே நீங்க ஏற தேவையில்லை. தவிர, வழியிலே உங்களுக்குப் பிடிச்ச தவுலதாபாத் கோட்டை."

"ஆமடா ராஜா. பார்த்து நாலைஞ்சு வருடமிருக்கும். முதல்ல அங்கே போவோம்."

**கா**ரில் போகும்போது அக்கோட்டையின் சிறப்பை மாமா விளக்கினார். அக்கா செய்த சீடைகளை நொறுக்கியபடி உற்சாகமாக தலையாட்டியபடி வந்தான், வரூ.

"பிரமாண்ட மலையைத் தகர்த்து, குடைஞ்சு உருவாக்கினதுடா இந்தக் கோட்டை. எஞ்சிய மலை இயற்கை அரணாய் நிற்பது பெரிய பாதுகாப்பு என்றாலும், அதுவே இந்தக் கோட்டைக்கு ஆபத்துமாச்சு. 12-ம் நூற்றாண்டு மன்னர்களுக்கெல்லாம் இதுமேல ஒரு கண்ணுதான். இங்கே வந்து உட்கார்ந்துட்டா யாரும் தன்னை ஜெயிச்சுட முடியாதுங்கிற எண்ணம்."

"அப்படின்னா இதைக் கட்டி 800 ஆண்டுகளுக்கு மேலாச்சுதா?"

"முதல்ல இதை உருவாக்கினது யாதவ அரசர்கள்தான். ஒரு நூற்றாண்டுக்கு அவங்கதான் இங்கே ஆட்சி. பிறகு, அலாவுதீன் கில்ஜி... 14-ம் நூற்றாண்டில் ஒரு பிரபலமான ராஜா இதைப் பிடிச்சுட்டான்.

"யாரது?"

"துக்ளக், அவர் தன் தலைநகரையே டெல்லியிலே இருந்து தவுலதாபாத்துக்கு மாத்திக்கிற அளவுக்கு பிடிச்சுப்போனதுக்கு இந்தக் கோட்டைதான் காரணம். அவருக்குப் பிறகு பாமினி, நிஜாம், முகலாயர்னு பலர் ஆட்சி கண்ட இடமிது."

நெருங்க நெருங்க இவர்களது ஆவல் கூடியது.

"தேவகிரிங்கிற மலைதான் இப்படி கோட்டையா உருவானது" விளக்கிய சரத், காரை ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டு, நுழைவு சீட்டு வாங்கப் போனான்.

நிழலில் நின்று, உறைந்துபோன ஒரு யானைப் படை போலத் தோன்றின கோட்டையைப் பார்த்தாள், சித்ரா. காலம் தின்று போட்ட மிச்சங்கள் மட்டுமே எஞ்சி இருந்தன. மதில்களைக் காணோம். மிரட்டும் அரண்கள் இருக்க வேண்டிய இடத்தில் அஸ்திவாரம் மட்டுமே பொக்கைவாய் போன்ற பரிதாபத்துடன் குழிந்திருந்தன. அழியாத ஸ்தூபியும், பீரங்கி மேடையும், உச்சி மாளிகையும் ஏன் இது அக்கால மன்னர்கள் அத்தனை பேரையும் ஆசை காட்டியது என்பதற்கான சான்றுகளாய் எஞ்சி இருந்தன.

நுழைந்து படிகளும், மேடுகளுமாய் நடந்ததில் சித்ராவிற்கு மூச்சிரைத்தது.

"அவ்வளவுதாம்மா... இங்கே உள்ள சுரங்கப் பாதையைப் பார்த்த பிறகு திரும்பலாம். இனி இறக்கந்தான். சுளுவாய் நடந்துடலாம்."

"யப்பா... எவ்வளவு பெரிய கோட்டை... ராஜாவுக்குப் பாதுகாப்பான நகரம், இது. இல்லையா மாமா?"

"பிற்காலத்துல சிறைச்சாலையாகவும் பயன்பட்டது."

இவளுக்கு தான் வாசித்த 'கல்கி'யின் சரித்திர நாவல்கள் நினைவிற்கு வந்தன. பாறைகளின் மத்தியில் வடித்திருந்த படிகளில் இறங்கினர்.

இவர்களுக்கு முன்பே சுரங்க வாசலில் மாணவர் கும்பல் ஒன்று திரண்டிருந்தது. வழிகாட்டி போலிருந்த ஒரு இளைஞன், கையில் துணி சுற்றிய தீப்பந்தத்துடன் அவர்களிடம் சொல்லியதை மாணவர்கள் கவனித்ததாய் தெரியவில்லை.

"நாமும் இந்தப் பிள்ளைகளோடு போய் சுரங்கத்தைப் பார்த்திடலாம்டா ராணி."

வழிகாட்டி, மறுபடி ஆங்கிலத்தில் விளக்க ஆரம்பித்திருந்தான்.

"இச்சுரங்கம், கோட்டை பிடிபட்டால் அரசர் தப்பிப்பதற்காக கட்டப்பட்டது. இதன் பாதை ஒரு சிலருக்கே தெரியும். மற்றவர்கள் யாரும் இதில் நுழைந்து உயிரோடு வெளியேற முடியாது. உள்ளே நுழைந்து பத்து அடிகள் நடக்கவும், மேலே இருந்து வெளிச்சம் தெரியும். எங்கிருந்து வெளிச்சம் வருகிறது என்று நிமிருவது மனித இயல்பு. மேலிருந்து கொதிக்கும் எண்ணெய் அல்லது நீர்



கொட்டப்படும். முகம் வெந்து..."

வழிகாட்டி விளக்க, ஒரு ஆள் மட்டுமே நுழையும் அக்குகை வாசல் அவளுக்கு மரண வாசல் போல தோன்றியது.

வருவின் கைகளைப் பற்றியபடி மாமாவையொட்டி நின்று கொண்டாள்.

"இப்ப உள்ளே போகலாம்... கவனமாய் என்னைத் தொடருங்க" இளைஞன், குகைக்குள் நுழைந்து மறைய– மாணவர்கள் ஆரவாரமாய் தொடர்ந்தனர்.

வழிகாட்டி சொன்னது போல, குகையின் இருட்டு பழகிய சில நொடிகளுக்குள் உச்சியில் இருந்து 'சுள்' வெயிலின் ஒரு ரேகை உள்ளே பாய்ந்தது. நிமிர்ந்து பார்த்தவளுக்கு வழிகாட்டி சொன்னது புரிய, பிடரி குறுகுறுத்தது. மேலும் பத்து அடி போக, இடப்புற சுவரின் ஒரு சரிவுப் பொந்து வழியே வெளிச்சமும், காற்றும் கசிந்தன.

"இச்சுரங்கத்தில் இறக்கும் மனித சடலங்களை இதன் வழியே தள்ளிவிட்டால் அவை நேரே அகழிக்குள் விழுந்து, முதலைகளுக்கு இரையாகும்."

மேலெல்லாம் புல்லரிக்க– இவளது ஒண்டிய உடல், திண்ணென்று இருக்க, தான் உரசுவது சரத் மேல் என்பது புரிந்து அவசரமாய் விலகினாள். இருட்டில் யார் முகமும் தெளிவாயில்லை.

இப்படி ஒட்டி உரசி தன் மனதை சலனப்படுத்த முயலுகிறாள் என்று அவன் தன்னைத் தவறாய் கணித்துவிடுவானோ என்ற அச்சம், இறுகிய ஆணுடல் தன் மீது உராய்ந்ததால் ஏற்பட்ட தன் சலனம்... என்று அல்லாடினாள்.

அதற்குள் கூட்டம் நகர்ந்திருந்தது. தனியே அச்சுரங்கத்துள் மாட்டிக் கொண்டால் கஷ்டமே என்ற அச்சம் உந்த, இவர்களும் கூட்டத்தை எட்டிப் பிடித்தபோது, இத்தனை நேரம் அனைவரது திகிலையும் தன் ஒளியால் விரட்டி இருந்த தீப்பந்தம் அணைந்தது.

இதற்காகவே காத்திருந்தது போல அத்தனை மாணவர்களும் கூச்சலிட, சித்ரா அலறலுடன் கைக்கு அகப்பட்ட உடலைக் கட்டி இறுக்கினாள். உடனே இவள் தோளைச் சுற்றிய கை, அவள் தலையையும் கோதியது.

"வேணும்னுதான் வழிகாட்டி தீப்பந்தத்தை அணைச்சி இருக்கான். இப்ப மறுபடி பற்ற வச்சிருக்கான். வெளிச்சம் இல்லாம சுரங்கத்துக்குள்ளே நடக்க, ஏன்... நகரவும்கூட முடியாதுங்கிறதைக் காட்டத்தான் இது."

சரத்தின் விளக்கம் அவள் காதுக்குள் கேட்டது. மிக அருகே கேட்ட அவன் குரல் அவளை அமைதிப்படுத்தியது. அந்நேரம் மறுபடி குப்பென்று பற்றிய தீ இருமருங்கு பாறைகளில் தங்கமாய் படர்ந்தது. தான் சரத்தின் வலது மார்பிலும், வரு அவனது இடப்பக்க அணைப்பிலும் இருக்கக் கண்டவள் கூச்சத்துடன் விலகினாள்.

அந்த அணைப்பு தனக்குள் சில வர்ணங்களை இழைத்தது அவளுக்குப் புரிந்தது.

'உங்களுக்கு நானிருக்கிறேன்' என்பது போன்ற அவனது பாதுகாப்பான அணைப்பு தொடராதா என்ற ஏக்கம் தன்னுள் நுழைந்து, நெளிவதைத்தான் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

## 10

மகிழம்மா கட்டி அனுப்பி இருந்த உணவை ஒரு மரநிழலின் அருமையை அனுபவித்தபடி சாப்பிட்டனர்.

"தேங்காய் சாதம் இன்னும் ஒரு கரண்டி தான் இருக்குது மாமா. உங்களுக்கு வைக்கிறேனே?"

சித்ரா பார்த்துப் பரிமாறினாள். பெரியவரும், சரத்தும் புன்னகையைப் பரிமாறிக்கொள்வதைக் கவனித்தவள் கேட்டாள்.

"என்ன சிரிப்பு?"

"உங்க அத்தையும் இதே போலத்தான்டா. கொண்டுவந்த எதையும் திரும்ப எடுத்துட்டுப் போக அவளுக்குப் பிடிக்காது. அத்தனையையும் எங்க வயித்துல இறக்கிடுவா..."

"உங்களை அன்பாய் கவனிச்சா இப்படியொரு பழியா?"

"அன்புதான்..." சிரிப்பை அடக்கியபடி இழுத்தார், மாமா..."

"கூடவே கொஞ்சம் அறிவும் இருக்கலாம், தப்பில்லை. ஆனா ஒண்ணுடா... நீ சூட்டிகை. உங்க அத்தைக்கு தன்போல ஒரு கம்பெனி இருக்குதே... அங்க என்னதான் நடக்குங்கிறதை விசாரிக்கக்கூட தெரியாது. ஆனா, நீ வந்த முதல் வாரமே ரொம்ப ஆர்வமாய் எங்கூட வந்து நெசவு இடத்தைப் பார்த்தே... பார்த்ததோடு உற்சாகமாய் நூறு யோசனை சொல்லி இருக்கே... வீடும் 'பளிச்'சுனு இருக்குதுடா..."

இவளுக்கு 'திக்'கென்றது.



தான் செய்தது அதிகப் பிரசங்கித்தனமோ? விருந்தாளியாய் வந்தேன் என்பவள் அதுபோல நடந்துகொண்டால் போதாதா?

சந்தித்த அன்று சரத் குற்றம்சாட்டியதை உறுதிப்படுத்துவது போல தன் செய்கை அமைந்துவிட்டதா?

இதை இப்போதே தெளிவுபடுத்திவிட வேண்டும்.

"மாமா... நாங்க அதிகம் போனா இன்னும் ஒன்று இல்ல ஒன்றேகால் மாசம் இருக்க முடியும்– அதுக்குள்ளே ஏதாவது செய்யணுங்கிற பரபரப்பில்... ஏதோ சொல்லிட்டேன்... செய்றேன்– அவ்வளவுதான்."

சரத்தின் முகத்தில் சன்னமான நிம்மதியும், பெரியவர் முகத்தில் பெரிய ஏமாற்றமும் படர்ந்ததை அவள் கவனிக்கத் தவறவில்லை.

மாமா வீடு வந்த முதல் வாரமே அவர் வற்புறுத்தலுக்கு இணங்கி, தன் பயணத்தை நீட்டிப்பது குறித்து பள்ளித் தலைமை ஆசிரியருக்கும், பத்திரிகை ஆசிரியருக்கும், பயண கம்பெனிக்கும் முறையாய் தெரிவித்துவிட்டாள்.

"யம்மா ராணி, சரத்தும் எதை எதையோ மாற்றணும் கொள்ளணும்னு சொல்லுவான். ஆனா, நா எதையும் காதிலேயே போட்டுக்கிட்டதில்ல. நீ என்னன்னா எல்லாம் எண்ணெயாய் வழியறதுக்குக் காரணம், மனசு மாறி நீ இங்கே எங்களோடு இருந்திடமாட்டியான்னுதான்."

சரத் இந்த சம்பாஷணையில் இருந்து ஒதுங்கி வருவுடன் விளையாடியபடி இருந்தான்– குச்சிகளும், மணலில் போட்ட கட்டங்களுமாய் ஏதோ எளிய விளையாட்டு.

மரியாதை நிமித்தமாகிலும், 'ஆமா சித்ரா, மாமா சொல்றது போல நீயும், வருவும் இங்கே இருக்கிறதுதான் நல்லது' என்று ஒத்து ஊத நேர்ந்துவிடுமோ என்ற அச்சத்தில் அவன் ஒதுங்கி இருப்பது புரிந்தது. தன்னை எத்தனைக் கேவலமாய் மதித்துவிட்டான்.

பணம் இருக்கும் இடம் தேடிவந்து ஒட்டிக்கொள்ளும் பஞ்சப்பராரி– தந்திரப்பிசாசு என்பதாய்...

ஆனால், அவன் மட்டும் என்ன?

தன் பெரியப்பா ஏமாற்றப்பட்டுவிடக் கூடாதே என்ற நல்லெண்ணத்திலா தன்னை வெறுக்கிறான்? பெரியவரின் சொத்து முழுதும் விள்ளாமல் விரியாமல் தனக்கு வரவேண்டும் என்ற சுயநலம்தானே காரணம்? விளையாட்டின் ஊடே வாய்விட்டுச்

சிரித்தவளைப் பார்த்தவளுக்குள் ஏதோ நெருடல்... சரத்தைப் பார்த்தால் பேராசைக்காரனாய் தோன்றவில்லையே...?

"என்ன, கேட்கிறியாம்மா?" மாமாவின் குரல் உலுக்க ஒருமாதிரி தடுமாறிக் கேட்டாள்.

"என்ன மாமா?"

"கடைசியா நான் உங்க அத்தையோடு தெற்கே வந்தது பற்றி சொல்லிட்டிருந்தேன். அப்ப உங்க அப்பாவுக்கு 12 வயசிருக்கும். எங்களுக்குக் கல்யாணமாகி நாலு வருடமாகியும் குழந்தை பாக்கியமில்லை. மதுரத்துக்கு அது மனசுக்கு ஆறலை..."

"எங்கப்பா- அம்மா ஆசிர்வாதம் இல்லாம சேர்ந்தோம்ல... அந்த சாபந்தாங்க. இப்ப நாம செயலா இருக்கோம். அவங்க மனசும் ஆறி இருக்கும். போய் ஆசிர்வாதம் வாங்கிட்டு வந்திருவோம்னு, சொன்னா- நான் மறுக்கலை அந்த நாலு வருடத்துல நாங்க தொழில்ல நிமுந்து இருந்தோம். அதுக்கு எந்த சாபமும் தடையாயில்லையே... ஆனாலும், அவ மனசு கோணக்கூடாதேன்னு கிளம்பினேன். முதல்ல சென்னையில் அவ அக்கா முறை உறவுக்காரங்க வீட்டுக்குப் போக, மதுரையில உறவுக் கல்யாணம் ஒன்று வர்றது தெரிஞ்சது."

மற்ற சிந்தனைகள் ஒதுங்க, மாமா சொல்வதில் மனம் ஒன்றினாள், சித்ரா.

இதான் சரியான சந்தர்ப்பம்னு, கொண்டுவந்தது போதாதுன்னு மேலும் நகை- பொருளுன்னு வாங்கினா, மதுரம். அவங்க அம்மாவுக்கு வளையல், தம்பிக்கு செயின், அப்பாவுக்கு தங்கக் கண்ணாடி பிரேம்னு மதுரத்துக்கு நேரே வீட்டுல போய் இறங்க பயம்- படியேறக்கூடாதுன்னு அவங்கப்பா உத்தரவு போட்டிருந்தார்..."

"கோபத்துல எல்லாரும் சொல்ற வசனம்தானே மாமா அது?"

"அப்படி நினைச்சுத்தான்டா ஏமாந்துட்டோம். மதுரைக் கல்யாண மண்டபத்துல உயிரையே கண்ணுல வச்சிகிட்டு தாய்- தகப்பனைக் காண காத்திருந்தா மதுரம்..."

"நீங்க?"

"நானுந்தான்டா- கல்யாணத்துக்குப் பிறகு தம்பதி நாங்க பிரிஞ்சே இருக்கிறதில்லைன்னு உறுதியாய் நினைச்சுகிட்டோம்."

"வந்த அவ அப்பா எங்களைப் பார்த்ததும் திகைச்சுட்டார். பிறகு, அப்படியே திரும்பிட்டார். அவ அம்மா, அதாவது உம்பாட்டி,



அழுதாங்க... அப்புறம், 'உன்னாலதான்டி உந்தங்கச்சி செத்தா... எங்க எல்லார் வயித்தெரிச்சலும் சேர்த்து வாங்கியும் நல்லாவா வாழுறே?"ன்னு புலம்பினாங்க.

"துக்கத்திலே என்ன பேசுறோங்கிறது பல நேரம் புரியாம போயிடுது."

"ம்... நல்லா எங்கே வாழுறா? கழுத்தும் காதும் நிறைஞ்சமாதிரி வயிறு நிரம்பலியே... நம்ப சாபம் வெறுமனே போகாதுடி"ன்னு அவ அப்பா உறும- நிறைய வேண்டாத பேச்சுகள்.

சித்ரா கண்களை மூடி நீள பெருமூச்செறிந்தாள்.

சில அனுபவங்கள் கசப்புதான்.

ஆனால், மனிதன் ஏன் அவற்றையே மென்று மென்று முழுங்குகிறான்? துப்பப் பழக வேண்டாமா?

ரணங்களை நோண்டாமல் விட்டாலே ஆறிப்போகும். அதைச் சொறிந்து, குடைந்து ஏன் வலியை அனுபவிக்கிறீர்கள்?

அதிலும் ஒரு சுகம் போலும்... வக்கிர சுகம்.

"அதுக்கப்புறம் மதுரம் ஊர் வரணுங்கிற பேச்சையே எடுக்கலை. அவளுக்கும் வெறுத்திடுச்சோ, இல்லை உறவுக்காரங்க வெறுப்பைக் கண்டு பயந்துட்டாளோ... ஏதோ ஒண்ணு..."

"அதனாலயே நான் அத்தையைச் சந்திக்க முடியாம போச்சு."

"எல்லாத்துக்கும் காலம், கடவுள் சித்தம்னு இருக்கேம்மா இல்லைன்னா இறந்த உங்கம்மா பையில் ஏன் என் விலாசம் இருக்கணும்? அதுவும் போலீஸ் கண்ணுக்குத் தப்பி உங்கைக்கு பத்திரமாய் ஏன் வந்து சேரணும்? இப்படி நம்மை சேர்க்கத்தானே?"

"அத்தை இறந்ததையேனும் எங்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கலாமே மாமா?"

ஆதங்கத்துடன் கேட்டாள்.

"விலாசம் தெரியலையேம்மா... தொடர்பு சுத்தமாய் விடுபட்டிருச்சு. இந்தியா முழுக்க உங்கத்தை இறந்த மறுநாள் காலையில பத்திரிகையில் படத்தோட அவ மறைவு செய்தி வந்ததும்மா. பார்த்துட்டு வந்திடுவீங்கன்னு எதிர்பார்த்தேன்."

"செய்தியைத் தவற விட்டுட்டோம் போல..."

"ம்... முதமுதல்ல அக்கா இறந்துட்டாங்கிறது தெரிஞ்ச அதிர்ச்சியிலகூட உங்க அப்பா தளர்ந்திருக்கலாம்... அதான்

தடுமாறிட்டார். எல்லாம் விதிடா... வேறென்ன சொல்ல?"

"ஆனா, அதுவேதான் நீங்க சொன்னதுபோல நம்மையும் சேர்த்திருக்குது. ஆக, நாம ரொம்ப முணங்கக்கூடாது மாமா..." புன்னகைக்க முயன்றாள்.

"ஆமான்டா தங்கம்."

மருமகளை இழுத்து அணைத்துக்கொண்டார்.

"மாமா, என்ன அக்காவை மட்டும் கொஞ்சுறீங்க?" வரூ மிரட்ட–

"அவதானேப்பா என் கதையைப் பொறுமையாய் கேட்டாள்" நியாயம் பேசினார், பெரியவர்.

"ம்... எங்கம்மா வெல்லம் தர்றமாதிரி."

"அதென்ன?"

"நாங்க மாசத்துக்கு ஒருதரம் குமட்ட குமட்ட அரைச்ச வேப்பிலையை விழுங்கணும். முழுக்க விழுங்கிட்டா, ஒரு அச்சு வெல்லம் தருவாங்க. உங்கக் கதையைச் சகிச்சு கேட்டாபிறகு கொஞ்சுவீங்களாக்கும்?"

கன்றுபோல தன்னை உரசி முட்டிய இளம் மருமகனையும் சேர்த்து அணைத்தார். "வரூ பயலே வா, நாம ரெண்டு பேரும் காரில் பின்னால உக்கார்ந்துக்குவோம்– கதையே சொல்லாம வெறுமே உன்னைக் கொஞ்சிட்டே வர்றேன்."

"வெல்லம் மட்டும் போதும். வேப்பிலை வேண்டாம்" என்றான்.

இயல்பாய் இருவரும் பின்னால் ஏற, சித்ரா சரத்துடன் முன்னே உட்கார நேர்ந்தது.

"ஆகா... இப்படி ஒரு சந்தர்ப்பத்துக்காகத்தான் காத்திட்டிருந்தேன், சித்ரா" என்று அவன் சொல்ல, சற்று மிரண்டு விழித்தாள்.

"எதுக்கு?"

"நான் சுற்றுலா ஏஜென்டுகளைப் பார்த்தது பற்றியும், பேசியது பற்றியும் உங்கிட்ட சொல்லணுமே?"

"ரொம்ப அலைச்சலாயிடுச்சு, உங்களுக்கு. ஒரு வாரமாய் உங்களை வீட்ல காணவேயில்லை."

"நான் விரும்பிச் செய்த வேலை, இது. முன்னே நான் இதுபற்றி மாமாகிட்ட சொன்னதை அவங்க சிரத்தையாய் கேட்டுக்கலை. சித்ரா சொன்னதும் சிரத்தை தானாய் வந்திடுச்சு...

உங்களுக்கு நன்றி."

"இவ கொஞ்ச நாளாதான் இங்கே நம்மோடு இருக்கப் போறாங்கிறதில வந்த சிரத்தைதான், அது..."

"கொஞ்ச நாளிலியே நிறைய மாற்றங்கள் செய்திருக்கே சித்ரா– நேற்றுதான் தறிக்கூடத்தைப் போய் பார்த்தேன்– இத்தனை நாள் பரட்டையாய் கிடந்த தோட்டம் இப்ப தலைவாரினாப்பல பளிச்சின்னு தெரியுது."

"இன்னும் நாலு மாசம் பொறுத்தா அது தலை நிறைய பூவும் இருக்கும்."

சிரித்தார்கள்..

பின்னால் இருந்த இருவரும் மெள்ள ஏதோ பேசியபடி வந்ததால், இவர்களது பேச்சும் தணிந்த குரலில் தொடர்ந்தது.

சற்று நெருங்கி அந்நியோன்னியமாய் பேசியது இருவருக்குமே பிடித்திருந்தது.

"அப்புறம்... இன்னொரு விஷயத்துக்கும் உன்னை நான் பாராட்டணும். நன்றி சொல்லணும்."

"இதென்ன நன்றி நவிலும் படலமா?"

"நன்றி கொல்லக்கூடாதில்லையா?"

தலையை சற்றே இவள் பக்கமாய் சாய்த்து, சாலை மீதுள்ள கவனம் குறையாமல் சரத் பேசியதை ரசித்தாள்.

தமிழ்நாட்டைப் போல வேகமும், அவசரமும் வாகன ஓட்டிகள் இங்கு காட்டாததையும் கவனித்திருந்தாள்.

"கொல்ல வேணாம்– சொல்லுங்க..."

"அந்த யானை, குதிரை பொம்மையெல்லாம் வெளியே புது உடை, 'வார்னிஷ்'ல பளபளன்னு நிக்கிறதைப் பார்க்க சந்தோஷமா இருக்குது."

"ம்... அதெல்லாம் உங்க அப்பாவே செய்ததாய் மகிழம்மா சொன்னாங்க."

"சின்ன சிற்பங்கள் வீட்டுக்குள்ள அலங்காரமாய் நிற்குது– பெரிசுகளை என்ன செய்ய? அதாவது, எப்படி பயன்படுத்தப் போறேன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"சாரி.. இப்ப சொல்றதுக்கில்லை– உங்களுக்கும், மாமாவுக்குமே கூட அது ஒரு ஆனந்த அதிர்ச்சியா இருக்கட்டுமே?"

"ம்... இருக்கட்டுமே" அவன் தோளை மெள்ள உயர்த்திக்



குலுக்கினான். "'ஷோ-கேஸ்' வேலையும் மும்முரமாய் நடக்குது– எப்ப திறக்கலாம்?"

"எப்ப முதல் சுற்றுலா குழு நம்ப தறிகளைப் பார்வையிட வர்றாங்களோ... அன்னைக்குக் காலமே திறக்கலாம்– அவங்களை அது வாங்கத் தூண்டுமில்லையா?"

"சீக்கிரம் வருவாங்க... ஆனா, 'ஷோ-கேஸ்'க்கு கண்ணாடி கூட அளந்து அறுக்கலியே?"

"நீங்க நாள் சொல்லுங்க. அங்கேயே நின்னு வேலையை முடிக்க வேண்டியது என் பொறுப்பு. மொழிதான் கொஞ்சம் இடிக்குது. அதனால மகிழம்மாவைக் கூட்டிட்டுப் போயிடுறேன். 'அவங்க இந்தி, உருதுல்ல நான் சொல்றதை மொழி பெயர்த்துடுறாங்க..."

"'மேன்-பவர்'னு கேள்விப்பட்டதுண்டு. இப்ப 'விமன்-பவரை' பார்க்கிறேன்."

அவன் வார்த்தையிலும், பார்வையிலும் இருந்த பாராட்டு அவளை வெதுவெதுப்பாக்கியது.

'எல்லோரா' குகைகளை 'யுனெஸ்கோ' உலக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக அறிவித்துள்ளது.

இங்குள்ள 34 குகைகளில் முதல் 12 புத்த மதத்திற்கும், மற்றவை இந்து, ஜைன மதங்களுக்குமானவை. அறுநூறு ஆண்டுகளுக்கு முன் இக்குகைகளும் அவற்றில் உள்ள சிற்பங்களும் உருவாக்கப்பட்டன. 640 மைல் நீளத்தில் ஆயிரத்து 200 குகைகள் இங்கு இருந்ததுண்டு."

வழிகாட்டி சொன்னதை ஆர்வமாய் கேட்டு, குகைகளில் போய்ப் பார்த்து, தொட்டு குறிப்பெடுத்த சித்ராவின் கால் ஓய்ந்து போனாலும், மனம் ததும்பியது.

தன்னுடன் சரத் இயல்பும், இதமுமாய் பேசியதும் அதறகு ஒரு முக்கிய காரணம் இருந்தது. அவளுக்குப் புரியாமலில்லை.

பல பிட்சுகள் வாழ்ந்த இடத்தைப் பார்த்தவள் சந்தேகமாய் கேட்டாள்.

"சமைக்கிற அடுப்போ, கல்லோ கண்ணுல படலையே மாமா?"

"ஏன்னா இத்தனை நுட்பமாய் கல்லைச் செதுக்கிய புத்த பிட்சுகள் சமைக்கவே இல்லைப்பா..."

"அப்ப சாப்பாடு...?"

"ஊரில் இருந்து இத்தனைத் தள்ளி இவங்களுக்கு யார் உணவு தருவா?"

"ஊருக்குள்ளே போய் பிச்சை எடுத்துக் கிடைக்கிற ஒரு வீட்டு உணவுதான் இவங்களுக்கு அந்த நாளைக்கான சாப்பாடு."

"ரொம்ப வித்தியாசமான வாழ்வில்லையா? இதுபற்றி மேலும் தெரிஞ்சுக்கணும்."

"நம்ப வீட்ல இதுபற்றி நிறைய புத்தகங்கள் உண்டு. சாப்பாட்டு அறையின் இடப்பக்க மூலையில் உள்ள புத்தக அலமாரியிலே..."

"என் கட்டுரைக்கு உதவியா இருக்கும். நான் பார்த்ததோடு பின்னணியையும் சரித்திரத்தையும் கலந்து எழுதினால் சுச்சிதமாய் வரும்."

"மேல்தட்டிலே 'புத்த பிட்சுகளின் வாழ்க்கை'ன்னே ஒரு புத்தகம் உண்டு."

"நன்றி சரத்..."

"இது உடனடி நன்றி நவிலல்" என்றான் அவன், குறும்பாய்.

## 11

ஒரு சில வாரங்களில் இத்தனை மாற்றங்கள் சாத்தியமா என்று வியக்க வைக்கும் அளவில் தறிக்கூடம்மாறியிருந்தது. அதைப் பார்வையிட்ட முதல் நாளே தன் அபிப்ராயங் களை சித்ரா சொல்லிவிட்டாள்.

"இத்தனை பெரிய கூடத்தில போதிய வெளிச்சம். காற்று இல்லியே மாமா?"

"நம்ப ஆட்கள் அதுபற்றி எதுவும் சொல்லலியேடா?"

"ஆனா, மேலே கூரையிலே சூரிய வெளிச்சம் வர்றவகையிலே ஏற்பாடு பண்ணினா நிச்சயம் இன்னும் வசதியாய் வேலை பார்ப்பாங்க.. அது நல்லதுதானே?"

'அப்படீங்களா? சரத்கிட்டே சொன்னா அவனுடைய என்ஜினீயர் நண்பர்கள்கிட்ட அபிப்ராயம் கேட்டு வேலையை முடிப்பான்- ஆனா, தினப்படி வேலை கெடுமேம்மா?'

"தொழிலாளர்கள் ஆரோக்கியம் நல்லா இருக்கிறது அதைவிட முக்கியமில்லையா? அதனுடைய பலனையும் பார்ப்பீங்க.."

மாமா யோசனையுடன் தலை அசைத்தார்.



சேலை வடிவமைப்பாளர்களுடனும் அமர்ந்து ஆர்வத்துடன் பேசினாள்.

இவளின் உற்சாகம் அவர்களையும் தொற்றிக்கொள்ள, சற்று வித்தியாசமான ரகச்சேலைகள் தனிக் கொட்டடியில் நெய்யப்பட்டன. கூடத்தின் கூரை மாற்றப்பட்ட கையோடு தரையிலும் முத்துநிற 'டைல்'கள் பொருத்தப்பட- அறை வெளிச்சமும், விசாலமுமாய் விரிந்தது.

ஒவ்வொரு தறிக்கும் முன் சின்ன சிவப்புக் கம்பளங்கள் விரிக்கப்பட- அந்தஸ்து கூடியது. சில தொழிலாளர்கள் பார்த்து வாயெல்லாம் பல்லானாலும், மாமாவை வந்து மாற்றங்களைப் பார்க்கவிடவில்லை, சித்ரா.

முடிஞ்சு இன்னும் மூணு, நாலு நாட்கள்ல பார்த்திடுவீங்களே மாமா- அதுவரைக்கும் பொறுங்க."

மூன்று நாட்கள் நிமிடமாய் கழிந்துபோனது. மறுநாள் காலை கர்நாடகாவில் இருந்து முதல் சுற்றுலா பயணக்குழு வருவதாய் இருக்க- கடைசி கட்ட வேலைகளில், அலங்காரங்களில் எல்லாரும் மும்முரமானார்கள்.

நள்ளிரவு தாண்டியும் கறுப்பு பிளாஸ்டிக் காகிதத்தால் மூடப்பட்ட 'ஷோ-கேசில்' அடைபட்டிருந்தாள், சித்ரா.

வரு, சரத்துடன் ஒட்டித் திரிந்தான்.

சில இரவுகளாய் தன்னுடன் படுக்கவும் வராத தம்பியைப் பற்றி சித்ரா கவலைப்படவில்லை. அது, கூட்டுக்குடும்பத்தில் அனுபவிக்கும் ஒரு சவுகர்யம்.

செய்வன திருந்தச் செய்யும் முனைப்பில் மூழ்கியிருந்தாள், அவள்.

மகிழம்மாவும் அத்தனைக்கும் ஈடுகொடுக்க, வாசலில் மாவிலைத் தோரணம், கோலம் முதற்கொண்டு எல்லாம் தயார்.

இளநீலமும், மஞ்சளும் கலந்த புது ஹிம்ரு பட்டில் தயாராகி விட்டாள், சித்ரா.

சரத்தின் அறைக் கதவை இருமுறைத் தட்டிவிட்டு குரல் கொடுத்தாள்.

"எழுந்தாச்சா..? சீக்கிரம் தயாராகுங்க."

"அக்கா... காப்பி..."

"கீழே வா- வந்து எடுத்துக்கோ..."

பன்னீர்செம்பில் பன்னீரை நிரப்பி, சந்தனத்தை அவள் குழைத்த நேரம்– இரு ஆண்பிள்ளைகளும் வந்தனர். கண்கள் நிறைய தூக்கம் மிச்சமிருந்தது.

"காப்பி என்ன இப்படி மணக்குது?"

"இது சந்தனம். காப்பி பிளாஸ்க்குல இருக்குது. அத்தானுக்கும், உனக்குமாய் ஊத்திக்கோ."

"எப்போ படுத்தே, சித்ரா?"

கொட்டாவியை மென்றபடி கேட்டான், சரத்.

"ரெண்டு மணி இருக்கும். நீங்க?"

ஆண்பிள்ளைகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக்கொண்டனர்.

"அதிலேயும் ஒரு சஸ்பென்சா?"

"பின்ன, நீ மட்டும் அந்த 'ஷோ–கேசு'க்குள் மூடிட்டு குடையலாமா? நாங்களும்..."

"ஷ்..." சரத் கண்களை உருட்டி, இளையவனை அடக்கினான்.

"நல்ல போட்டிதான் போங்க" காப்பி தம்ளர்களை எடுக்கவந்த மகிழம்மா பெருமிதத்துடன் சலித்தாள்.

"எல்லா ஊழியர்களும் அவங்க குடும்பத்தோடு வருவாங்க இல்லியா சரத்?"

"சொல்லி இருக்கேன். தவிர, என்ஜினீயர், அவருடைய குடும்பத்தார்– இப்படி முந்நூறு சாப்பாடாவது தேவைப்படும்."

"எல்லாரும் ஒரே குடும்பமாய் உட்கார்ந்து சாப்பிடணும்... அவ்வளவுதான்."

"செய்திடுவோம்... இன்னும் அஜந்தா குகைகளைக்கூட போய் பார்க்க முடியாதபடி இந்த வேலை உன்னைப் பிடிச்சிருச்சு... இல்ல?"

"அஜந்தாவை ஆற அமர பார்க்கணும். அதைப்பற்றி ரெண்டு புத்தகங்களைப் படிச்சுட்டேன். 15 நூற்றாண்டுகளுக்கு முன்னே ஹினாயனா, மகாயனா காலத்துல உருவான குகைகள். மின்சாரம் இல்லாத அந்நாட்கள்ல எப்படி குகைகளுக்குள்ளே அத்தனை நுணுக்கமாய் வரைஞ்சாங்க, வர்ணம் குழைச்சாங்க என்பதை எல்லாம் படிக்க பரவசமா இருந்துச்சு. இனி போனா அனுபவிச்சுப் பார்ப்பேன்."

"நல்லா பாரு... பெண்களுக்கு ரொம்ப உபயோகமா இருக்கும்."



"அதென்ன பெண்களுக்கு?"

"இருநூறு வகையான கூந்தல் அலங்காரங்களை பிட்சுகள் வரைஞ்சி இருக்காங்க, குதிரை வால் உள்பட..."

"ம்... இப்ப நீங்க ரெண்டு பேரும் கொஞ்சமேனும் அலங்காரம் பண்ணிட்டுக் கிளம்புங்க. ஒன்பதுக்குள்ளே விழாவை ஆரம்பிக்கணும்..."

"நிகழ்ச்சிநிரல் என்ன?"

"சின்னதாய் ஒரு பூஜை. மாமா கூடத்தைத் திறந்து வைப்பார். பிறகு எல்லாரும் சாப்பிட உட்காரணும். பத்தரைக்கு சுற்றுலா பயணிகள் வந்திடுவாங்க. அதுக்கு முன்னே புது விற்பனையில் முதல் சேலையை வாங்கப்போறது மகிழம்மாதான். அவங்களுக்காக ஒரு சேலை எடுத்து வச்சிட்டேன். காசையும் அவங்க கையில தந்தாச்சு."

"சரி."

"செலவு இருக்கும்மா– பிடி" என்று அதட்டி மாமா, இவள் கையில் கொடுத்திருந்த பணம் கணிசமானது என்பதால் பணம் பிரச்சினையாக இல்லை."

"நான் முதல்ல போயிடுறேன். நீங்க மாமாவை அழைச்சிட்டு வர்றீங்களா?"

சித்ரா கேட்க, ஆண்கள் மறுத்து முந்திக்கொண்டனர். "இல்ல... பத்தே நிமிடத்துல நாங்க கிளம்பிடுவோம். மாமாவும் நீயும் சேர்ந்து வாங்க."

வீட்டைப் பூட்டிவிட்டு மாமாவுடன் காரில் ஏறியவளின் மனம் சொல்லொண்ணா மகிழ்வில் நிரம்பியிருந்தது. அனைவர் முகங்களிலும் கல்யாண வீட்டாரின் பரபரப்பும், பரவசமும்.

மிருதுவான பட்டுஜிப்பா– வேட்டியில் ஹிம்ரூ அங்கவஸ்திரத்தில் மாப்பிள்ளையின் மிடுக்குடன் இருந்தார், மாமா.

நினைத்ததைச் சித்ரா சொல்ல– வாய்விட்டு சிரித்தார், சரூநாத்.

"நீ வந்ததிலே இருந்து நம்ப வீட்டுக்குக் கல்யாணக் களை வந்திருச்சேடா... எனக்கு மாப்பிள்ளைக்களை வராமப் போகுமா?"

சித்ரா சிரித்தாலும், வளாகத்துள் கார் நுழைந்து நிற்க– இறங்கியவள், திகைத்துப் போனாள்.

தோட்டத்து செடிகளை, புல்வெளிகளைத் தான் சீரமைத்தது உண்மைதான். ஆனால், இரவோடு இரவாக இத்தனைப் பூக்கள்

எப்படி பூத்தன– அதுவும் விதவித வர்ணங்களில்.

கோழிமுட்டையாய் உருண்ட அவள் கண்களைப் பார்த்த வருவிற்குச் சிரிப்பு தாளவில்லை.

"என்னக்கா, பூவெல்லாம் எப்படி... ஓசையில்லாம பூத்திருச்சா?"

"ஓ... இதைத்தான் நேத்து ராத்திரி முழுக்க இங்கே இருந்து ஒட்டுனீங்களா?"

"பூக்கச் செய்தோம் பெண்மணி."

பிரம்மாவின் கர்வத்துடன் அவளைத் திருத்தினான், சரத்.

"பிரமாதம். இத்தனை இயற்கைகளாய் தெரியற பூக்களை எங்கே வாங்கினீங்க?" சிறு பெண் போல ஒவ்வொரு செடியாய் போய் நீவினாள்.

அச்செயற்கை மலர்கள் தன்னுள் நறுமணம் பரப்புவதை அவளால் உணர முடிந்தது. தனக்காக சரத் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் மனம் நெகிழ்ந்தது.

**மா**மா தொழிற்கூடத்தைச் சந்தனமிட்டு திறந்து வைத்தார். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. சொர்க்கத்துக்கே வந்துவிட்ட பரவசத்துடன் மாமாவும் நெசவாளர்களும் கூடத்தைச் சுற்றி வந்தனர்.

"இப்ப நீங்க 'ஷோ-கேசை' திறந்து வைக்கணும், சரத்."

வெள்ளித்தட்டில் கத்திரிக்கோலை வைத்து அவனிடம் நீட்டினாள்.

"மாமா திறக்கட்டுமே... அதுவும் நீயே யாரையும் பார்க்க விடாமல் தயார் செய்தது."

"திறங்க... என்ன தயார் செய்தேங்கிறதைப் பார்க்க வேணாமா?"

"சித்ரா சொல்றதைச் சீக்கிரமாய் செய்யப்பா. காலை சாப்பாடு இங்கதான்– வயிற்றைக் கிள்ளுது."

"சரி, வாங்க வரு பாஸ். நாமே திறப்போம்."

வருவுடன் இணைந்து முடிச்சை வெட்டிய சரத், மூடியிருந்த பெரியதிரையை விலக்கினான். மேஸ்திரிகளும் உதவ, மறுநிமிடம் அக்கண்ணாடி கூண்டு 'பளபள'வென்று வெளிப்பட்டது.

பார்த்தவர்களின் 'ஆஹா'க்கள் ரீங்கரிக்க.

"அழகு அற்புதம்" தன்னை மறந்து பாராட்டினான், சரத்.

"சூப்பருக்கா" வரு தமக்கையை கட்டிக்கொண்டான்.



"அடடே பின் அறையிலே பூட்டிக்கிடந்த இந்த பொம்மைகளை இப்படி பயன்படுத்தலாங்கிறது எங்களுக்குத் தோணினதில்லை போடா ராணி... இங்கேயும் பெண் குழந்தைங்க இருந்திருக்காங்க... ஆனா இத்தனை அற்புதத்தைக் கொண்டுவந்தது நீதான்."

மாமா சிலாகித்தார்.

சரத்தின் தகப்பனார், குழந்தைகள் விளையாட என்று உருவாக்கிய 'ஹிம்ரு' பிரமாண்டமான யானை, குதிரை சிற்பங்கள் ...ந்தம் புதிதாய் நிற்க, அவற்றை பட்டாடைகள் அலங்கரித்தன.

"இனி சாப்பிடலாம் மாமா... அவ்வளவுதான்."

"மனசை நிரப்பிட்டே, செல்லம்."

அவள் எதிரே வந்த சரத்– கைகளை நீட்டினான்.

சித்ராவின் கைகளைப் பற்றி, "நன்றி சித்ரா... இதை நான் எதிர்பார்க்கலை... ஆச்சரியமா, ஆனந்தமாய் இருக்குது."

அந்த இதமான பிடிப்பில், வார்த்தைகளில் சீனிப்பாகில் விழுந்த எறும்பாய் தத்தளித்தாள், அவள்.

ஆனால், எதிர்பாராத வேறு பல நிகழ்வுகள் நடக்கப்போவதை அறியாமல் அந்த அறியாமையின் சவுகரியத்தில் மகிழ்ச்சியுடன் சாப்பிட உட்கார்ந்தனர் அனைவரும்.

## 12

"இத்தனை ஆரவாரம் தேவையான்னு நான் யோசிக்க... 'தர்மத்தைத்தான் மாமா விளம்பரமில்லாம செய்யணும்– வியாபாரத்தை இல்லை'ன்னு மருமக சித்ரா சொன்னது– வாஸ்தவமான பேச்சு. குழந்தைங்க மூணு பேரும் உழைச்ச உழைப்புக்கு ஏற்றாற்போல... அவங்க நல்ல மனசைப் போல வியாபாரம் தழைக்கணும்."

கண்மூடி, கைகுவித்து அங்கு கூடி இருந்தவர்களிடம், இறைவனிடமும் வேண்டினார், சரூநாத்.

சற்று கண்கலங்கியவரை தனியே அழைத்த சித்ரா பேசினாள்–

"சுவர் இல்லைன்னா சித்திரம் ஏது மாமா? நீங்க ஏற்றின விளக்கு இது. கொஞ்சம் திரியைத் தூண்டி இருக்கோம்– அவ்வளவுதான்."

"அதில்லைடா... நான் வேலை பார்த்தவங்களுக்கு 'போனஸ்' கொடுத்ததுண்டு. ஆனா, இப்படி அவங்களைக் குடும்பமாய்

அழைச்சு, கூட உட்கார்ந்து சாப்பிட்டதில்லை. நான் அந்தக் கால ஆளுதானடா.. இப்படி பரிவாய் தொழிலாளி தோளில் தட்டி, கைகோர்த்து வேலை பார்க்கிற நாசூக்கு, நாகரீகம் தெரியலை."

"கால மாற்றமிது மாமா... அவ்வளவுதான்."

"கரிசனையும் வேணும்டா– நிறைய பேர் புது மூக்குக்கண்ணாடி போட்டிருக்காங்க... அதுவும் உங்க வேலைதானே?"

"ம்... எல்லோரையும் கண் பரிசோதனைக்கு அனுப்பினோம்."

மீண்டும் பெரியவரின் கண் கலங்கியது. முதல் சேலையை மகிழம்மா வாங்கியதும், கூடி இருந்தோர் கைதட்ட, முகத்தை புதுச்சேலையால் மூடி வெட்கப்பட்டாள், அவள்.

நெசவாளிகள் புது ஆர்வத்துடன் அமர்ந்து வேலையை ஆரம்பிக்க, பிறர் கண்ணாரக் கண்டனர்.

"நீ படைப்பாளி சித்ரா. எழுத்திலே மட்டுமல்ல... செயல்லேயும்..."

"சில யோசனைகள் சொன்னேன். ஆனா, அத்தனையையும் பக்காவாய் செய்தவர் நீங்கதான் சரத்..."

வரு குறுக்கே புகுந்தான்.

"மாறி மாறி ஜால்ராவாக்கும்?"

"ஆங்... உங்களை மறந்துட்ட கோபம்... என்ன பாஸ்?"

தம்பியின் தோளைத் தட்டி சரத் சிரித்த காட்சி சித்ராவிற்கு இன்பமாக இருந்தது. இந்த ஒரு மாதத்தில் வரு தேறி இருந்தான்– உயரமும், நிறமும் கூடி... பேச்சும், சிரிப்புமாய் வளைய வருகிறானே.

அவ்வேளை அந்த கார்... சீறலுடன் உள்ளே பாய்ந்தது. அதிலிருந்து இறங்கியவளைக் கண்ட அனைவர் முகங்களிலும் சற்று சுருதி குறைந்தது.

"அழையாத விருந்தாளிதான்... அதுக்காக 'வா'ன்னு அழைக்கக் கூடாதா, சரத்?"

சரத்தின் முகம் இறுக, முதலில் சுதாரித்தது சித்ராதான்.

"வாங்க நிகிலா... நிகிலாதானே?"

சரத்தைத் தழுவிய புதியவளின் பார்வை இவளைக் கத்தியாய் கீறியது.

சரத்துடன் ஜோடியாய் சுற்றி, தன்நிமித்தம் சண்டை ஏற்பட்டு பிரிந்த அழகியை சற்று தவிப்புடன் பார்த்தாள், சித்ரா.

"அங்கிள்ஜி..." என்றபடி நிகிலா, பெரியவரின்பாதம் தொட முனைய, கொத்தவரும் பாம்பைத் தவிர்ப்பது போல இரண்டடி



...னே நகர்ந்தபடி– "நல்லா இரும்மா" என்றார், சுரத்தின்றி.

"மும்பையில என் உறவினர் கல்யாணம் ஏற்பாடாயிடுச்சு. நாங்களும் உடனே கிளம்பவேண்டியதா போச்சு."

"நல்லபடி எல்லாம் முடிஞ்சுதில்ல?"

"தனிக்குடித்தன வேலையும் இருந்ததால நானும், அம்மாவும் தங்கிட்டோம். வந்ததும் நம்ப வீட்டு விழா பற்றி கேள்விப்பட்டேன்."

அந்த வடஇந்தியப் பெண்ணின் அழகுத் தமிழை ஆச்சரியமாய் ரசித்தாள், சித்ரா.

"என்னை இங்கே, விழாவிற்குக் கூப்பிடணும்னு தோணலியா, சரத்?"

கொஞ்சலாய் கெஞ்சினாள்.

கட்டியவளைக்கூட பிறர் முன்னே அப்படிக் கொஞ்ச பல பெண்கள் கூசுவார்கள்.

"சாப்பிடுங்களேன் நிகிலா" என்ற சித்ராவின் உபசரிப்பு, அலட்சியம் பண்ணப்பட்டது.

"நீங்க சாப்பிட்டாச்சா, சரத்?"

"ஆச்சு. வந்ததுக்கு ரெண்டு சேலை வாங்கேன் நிகிலா. விற்பனை ஆரம்பிச்சி இருக்கோம். வரவு வரட்டும்."

"நான் வந்ததே பெரிய வரவில்லையா, சரத்...?"

"நான் வந்ததே பெரிய வரவில்லையா, சரத்...?"

"அதை நாங்கதாம்மா சொல்லணும்..." மாமா இடைப்புக–

நிகிலா வெளியே காட்டத் துணியாத எரிச்சலுடன் விற்பனைப் பிரிவு பக்கமாய் நகர்ந்தாள்.

"அருமையாய் பேட்டி கொடுத்திருந்தீங்க, சரத்... படத்திலேயும் கவர்ச்சியாய் தெரியறீங்க..."

"வேலை மும்முரத்தில வந்த பத்திரிகையைக்கூட பிரிச்சு பார்க்கலை– வாசிக்கணும்."

சித்ராவிற்கு உள்ளூர் பத்திரிகைக்குத் தாங்கள் அளித்த பேட்டி நினைவு வந்தது. கேள்விகளைக் கேட்ட இளைஞர்கள் தங்களைப் படம் பிடித்தப்போது சித்ராவிற்கு ஏக தயக்கம். கல்யாணம் வரை பழகிய காதலர்கள் இடையே இப்படம் மேலும் விரிசலை உருவாக்குமோ என்ற குற்ற உணர்வு.

அன்று படம் எடுத்த நேரம் சரத்திடம் கேட்டாள்.

"நிகிலா எங்கே காணும்... வந்தால் உங்களுக்கு ஓத்தாசையாய்

இருக்குமே?"

"இல்லை- அவ இங்கில்லை- மும்பை போய் இருக்கிறதாய் சொன்னாங்க."

"கேட்டீங்களா?"

"ம்... போன் பண்ணினேன்."

வாடிய அவன் முகத்தைப் பார்க்க சகிக்கவில்லை. தன் கோபம் மறந்து நிகிலாவை அழைத்திருக்கிறான். ஆனால், அவள் ஆத்திரத்தில் மும்பை கிளம்பிவிட்டாள் போலும்.

கோபம் தணிந்து திரும்பிய காதலியிடம் சரத் அதிக சிரத்தை காட்டாதது ஏன்? ஊடல் தொடருகிறதோ?

முதல் சுற்றுலா பயணிகள் குழு விற்பனை கூடத்தை மொய்க்க தொடர்ந்த காரியத்தில் கவலைகளை மறந்தாள், சித்ரா.

புதுரக சேலைகளுக்குக் கிடைத்த வரவேற்பை மகிழ்வுடன் ரசித்தாள். என்ஜினீயரின் மனைவியும் இரு சேலைகளை வாங்கிக்கொண்டு-

"முறைப்பெண் வந்ததும் எல்லாம் முறைப்படி நடக்குது. வாழ்த்துகள்" எனச் சொல்ல- சித்ராவின் கன்னங்கள் 'குப்'பென சிவந்தன.

தோளுக்கு ஒன்றாய் இரு சேலைகளைப் போட்டபடி வந்த நிகிலா கொஞ்சலாய் கேட்டாள்.

"சரத், எது எனக்கு நல்லா இருக்குது?"

"ம்... ரெண்டுந்தான்" கவனமாய் ஒப்பனை செய்யப்பட்ட நிகிலாவின் அழகு முகம் மலர்ந்தது.

"நன்றி..."

"விற்பனை தந்திரம்தான்- ரெண்டையும் வாங்கிக்கோ..."

"ஒன்றை உங்க பரிசாய் தரக்கூடாதா?"

"மகிழம்மாவே காசு தந்துதான் வாங்கிக்கிட்டாங்க" அவன் சொல்ல, நிகிலா பேச்சை மாற்றினாள்.

"மும்பையில் கடும் வெயில். நம்ம கட்டிடம் தோப்புக்கு நடுவே இருக்கிறதால டார்ஜிலிங் போல் இருக்குது. ஆங்... உன் பேர்... சித்ராதானே? உங்க ஊர் வெயில் எப்படி?"

"சுற்றி மரம் இருக்கிறதால ரொம்ப காயாது..."

"ஆங்... மறக்கிறதுக்கு முன்னே சொல்லிடுறேன். உங்க ஊரைச் சேர்ந்த உன்னுடைய நெருங்கிய நண்பர் ஒருத்தரை



பார்த்தேன்..."

சித்ரா குழப்பத்துடன் நிமிர்ந்தாள்.

"யாரை? எங்கே பார்த்தீங்க?"

"ரெயிலில் ரெண்டு பேரும் வந்திட்டிருந்தோம். அவர் என் பக்கத்து 'சீட்'டுக்கு வந்தார். 'ஒரு நிமிடம் அந்தப் பத்திரிகையைத் தர முடியுமா? அதுல இருக்கிறது என் சித்ரா மாதிரி இருக்கு'துன்னார். பிறகு, பிரயாணம் முழுக்க பக்கத்துல உட்கார்ந்து உன்னைப் பற்றியே பேச்சு."

"யார்... யாரது?"

"அவர் மும்பையிலே இருக்கிறது உனக்குத் தெரியுமே- எழுதி இருந்தாராமே- இன்னும் குழம்பினா எப்படி?"

சித்ராவுக்குள் இப்போது கலக்கம்.

"அப்படி கடிதம் எதுவுமே வரலியே?"

"எழுதிட்டதாயும், ரெண்டு நாள்ல உன்னைப் பார்க்க வர்றதாயும் அர்ஜுன் சொன்னார்."

"அர்ஜுனா?"

சித்ராவிற்கு தலைசுற்றியது!

## 13

பள்ளி இறுதிப் பரீட்சையை முடித்த பிள்ளைகளுக்கு அடித்துப் போட்டாற் போலொரு அசதி வருமே! அந்நிலையில் இருந்தாள், சித்ரா. சுவைத்து சாப்பிட்டாள்.

'அடுத்து என்ன?'

'வேறென்ன வேலை பாக்கி?' என்ற குடைச்சல் இன்றி நன்கு உறங்கினாள். நெசவு தொழிலாளர்களைப் பற்றி இதுவரைத் தன்னில் பதிவாகி இருந்த இழைகளைக் கோர்த்து கதை நெய்தாள்.

கதை மும்முரத்தில் அர்ஜுன் பற்றிய செய்தியைக் கெட்ட கனவாய் ஒதுக்க முடிந்தது. தன்னை வந்து சந்திக்கும் துணிச்சல் அவனுக்கு வருமா என்ன?

சிறுகதையாய் முடித்துவிட்ட கரு- எழுத எழுதக் குறுநாவலாய் வளர்ந்தது. குறுக்கும் நெடுக்குமாக நடந்து யோசித்தவள், மேலும் எழுதினாள்.

"சித்ராம்மா..."

கதவு தட்டப்பட்டது.

"தாழ் போடலை. வாங்க."

கையில் தட்டு, தண்ணீருடன் நுழைந்தவள் மகிழம்மா.

"என்னம்மா?"

"சாப்பாடு கொண்டுவந்தேன்."

"மணி ஒன்பதாயிடுச்சா? சத்தம் தந்தா வந்திருப்பேன்ல?"

பேனாவை மூடிவிட்டு, நெட்டி முறித்தாள்.

"தம்பி வேணாம்னுட்டார். வரு எட்டுக்கெல்லாம் சாப்பிட்டாச்சு. ஒன்பது வரை பார்த்துட்டு, சாப்பாட்டை அறைக்கே கொண்டுவர உத்தரவு."

"மன்னிக்கணும். என்னால் உங்களுக்கு தொந்தரவு."

"எழுத்தில் பரிசு வாங்கின பொண்ணு இங்கே வந்த நாளாய் இங்குள்ள வேலைகளைத்தான் இழுத்துப்போட்டு செய்தே. இனியாவது உன் வேலையைப் பாரம்மா. என்ன கதை?"

"ம்... இழை மாறாம நெய்யற இந்தக் கலைஞர்கள் தங்கள் வாழ்க்கையில தெரிஞ்சே சில தப்புகளை செய்துடறது பற்றி."

"சிவராஜ் சம்சாரத்துகிட்ட பேசிட்டிருந்தேம்மா. அவன் ரெண்டு வப்பாட்டி வச்சிருக்கிறது பத்தியா?"

"அதுவும் பதினாறு வயசு அமீனாவை 45 வயசுக்காரனுக்குக் கட்டி வச்ச அக்கரமும் உண்டு. ஒரு இழை தப்பினாலும் பொறுமையாய் பிரிச்சு சரிபண்ணுறவங்க... எப்படிக் கூசாம இந்தத் தப்பெல்லாம் வாழ்க்கையில் செய்றாங்க? புரியலை."

"அறியாமைதாம்மா. காசு ஆசை அதிகம். இழை தப்பாச்சுன்னா சம்பளம் குறையும். ஆனா, அமீனாவை அரைக் கிழவனுக்குக் கட்டி வச்சா காசு வருதே... அதான்."

மகிழம்மா மூடிய தட்டைத் திறக்க- இட்லி, சட்னியுடன் சுறாப்புட்டு மணம்.

"சாப்பிடும்மா... போய் பாலு, பழம் எடுத்துட்டு வர்றேன்."

"இன்னிக்கு டீ கிடைக்குமாம்மா? எழுதி முடிச்சுடணும்."

"இதோ..."

பத்தாம் நிமிடம் திரும்பிய மகிழம்மாவின் கையில் 'பிளாஸ்க்'

குடன் ஒரு 'வீடியோ கேசட்.'

"என்னது?" புருவம் உயர்த்தினாள்.

"புது தமிழ்ப்படமாம். அஜீத் படம் வேணும்னு வரு கேட்டதால் வரவழைச்சது. நீயும் பார்க்கணும்னு சரத் தம்பி அனுப்பிச்சது."

"இங்கே எப்படி?"

"காலையில இங்கேயே 'டெக்'கைக் கொண்டுவச்சு, போட்டு விடுவாராம், தம்பி."

சித்ரா நெகிழ்ந்தாள். முதலில் எகிறினாலும், பின்பு தன்னைப் புரிந்து, தன் அன்பை அவன் வெளிப்படுத்தும் முறையை ரசித்தாள்.

"நிகிலாப் பொண்ணும் வந்து படம் பார்த்துட்டுதான் போச்சு."

"ஓ..."

இதை அவள் அத்தனை ரசிக்கவில்லை.

ஆனால், முரண்டிய மனதை அடக்க முயன்றாள். "மகிழம்மா, கூடத்தில் வேலை முடிஞ்சதும் போய் பார்க்கணும்னு நினைச்சேன். முடியலை."

"சரத் தம்பி போனாரும்மா. முதல் நாளே நம்ப விற்பனை கூடத்துல கால் லட்சத்துக்கு வித்துச்சாம். சாயங்காலம் பெரியவர் போய் பார்த்திருக்காரு. கூடத்தை நீங்க சொன்னது போல கூட்டி, பெருக்கி வச்சதைப் பார்த்து பூரிச்சிட்டாரு... பொண்ணுங்க வேலை நேர்த்தி அலாதின்னு இப்ப சாப்பிடறப்பகூட பெருமைப் பட்டாங்க."

"தினம் நீங்களும் சாயங்காலம் போய் கூடம் சுத்தமா இருக்கான்னு இனி பார்த்துக்கணும்மா. நாம இப்படி தோள் கொடுத்தாத்தான் ஆம்பிளைங்க இன்னும் நிறைய சாதிக்க முடியும்."

"வாஸ்தவம்மா... ஆனா, வீட்டு சந்தோஷத்தை மீட்டுக் கொடுத்த நீ இன்னும் ஒரு வருடமேனும் இங்கே தங்கக்கூடாதா? ஐயாவுக்கும் ஆறுதலாய் இருக்கும்."

"ஒவ்வொரு ஏப்ரல், மே இனி இங்கே வர்றோம்."

"அம்மாவுடைய பிடிவாதமும் அப்படியே வந்திருக்குது." பெருமூச்சுடன் நகர்ந்தாள், மகிழம்மா.

படுத்து பதினைந்து நிமிடங்களாகியும் தூக்கம் நெருங்கவில்லை. வழக்கமாய்– 'இவள் எப்போது படுப்பாள்? போய் அவள் மேல்



விழுந்து இறுக்கிக்கொள்ளலாம்' என்று புது கணவனாட்டம் காத்திருக்கும் உறக்கம் இன்று ஊடல் காட்டியது.

கதைகளை உன்னிப்பாய் யோசித்து உருவாக்கி இருந்த மூளை, இன்னும் பிரகாசமாய் விழித்திருந்தது.

மூடிய விழிகளுக்குள் இவள் உருவாக்கிய கதாபாத்திரங்கள் உலவினர். இவள் எழுதிய வசனங்களைப் பேசினர்.

மனத்திரையில் கதையை ஓடவிட்டு, புலப்பட்ட ஓட்டைகளை குறித்துக்கொண்டாள். நாளை இவற்றைச் சரிப்படுத்தி, மீண்டும் செதுக்கி எழுத– குறுநாவல் பிரமாதமாய் வரும் எனப் பட– ஆனந்தமாய் புரண்டாள்.

இப்போதைக்கு தூக்கம் வரப்போவதில்லை என்பது நிச்சயமாக, எழுந்தவளின் கண்களில் 'கேசட்' பட்டது. முழுக்க மலர்ந்திருந்த புத்தியைத் தாலாட்டி மயங்கச் செய்ய படம் பார்க்கலாம். 'கேசட்'டுடன் படி இறங்கினாள்.

விளக்கைப் போட்டு, 'கேசட்'டை 'செட்' செய்து அமர, மற்றொரு காலடிச் சத்தம் அப்பெரிய வீட்டின் அமைதியைக் கலைத்தது.

"நாள் முழுதும் எழுதிக் களைச்சி இருப்பேன்னு நினைச்சேன். காலையில் உன் அறையில் போட்டுவிடலாம்னு..."

"தூக்கம் வரலை, சரத்."

"கதை முழுக்க தயாரா?"

அவன் கேட்ட விதம் பிடித்திருந்தது.

அப்பா படங்களைப் போடும்போது, அம்மாவும், 'தயார் ஆயிடுச்சா... பார்க்கலாமா?' என்று பறப்பாள்.

கடந்த சில வாரங்களாக சரத்துடன் ஒருங்கிணைந்து செய்த வேலையில் அதுபோன்ற நிறைவை சித்ராவும் அனுபவித்திருந்தாள். இவள் யோசனைகள் கச்சிதமாய் உருப்பெற்றிருந்தன. அதிகம் பேசாமலும் இருவர் அவரவர் வேலைகளைப் பிரித்து செய்ததில் புது நிறைவு.

இதே ரீதியில் சரத்தும் சிந்தித்திருந்தான் போலும். 'விழா நல்லபடி நடந்ததுக்கு கடவுளுக்கு அடுத்த நன்றி உனக்குத்தான் சித்ரா."

"வரு இருந்தால் 'ஜால்ரா'ன்னுவான். ஆனா, உங்க பங்குதான் அதில் அதிகம்."

"ரசிச்சு செய்தேன். இன்னும் பத்து நாள்ல கிளம்பறதாய் மகிழம்மாகிட்ட சொன்னியாமே?"

"ஜூன் முதல் வாரம் பள்ளிக்கூடம் திறந்திடும்."

"பெரியப்பாவுக்காகவாவது நீ தொடர்ந்து இருக்கலாம்" அவள் சிரிக்க, மின்ஒளியில் பற்கள் பளீரென தெரிந்தன.

"முதல்ல என்னை விரட்டக் குறியாய் இருந்திங்க... இப்ப தங்கணுங்கிறீங்க?"

அவளையே விழி எடுக்காமல் பார்த்தான். "ம்... இதுவே உனக்குப் பெரிய வெற்றிதானே?"

"அன்பான உறவு கிடைச்சதுங்கிற திருப்தி இருக்குது."

"இதைவிட சிறந்த உறவு அங்கே... சாத்தூரிலே இருக்குங்கிறது என் யூகம். சரியா?"

மார்போடு கைகளைக் கட்டி, விழி விலக்காமல் மறுகேள்வி வந்தது.

"என்ன திடீர் திடீர்னு இப்படி ஒரு யூகம்?" சற்று தடுமாறினாள்.

"முதல்ல இப்படி யோசிக்கலை... முதல்ல நான் உன்னை நம்பலை... ஆனா, பழகப் பழக உன் திறமைகள், குணம், உழைப்பு புரிஞ்சுது."

"போதும் சரத். வசிஷ்டர் வாயால் இத்தனைப் பட்டங்கள்... தாங்கலை."

"சாரி சித்ரா... இது மனப்பூர்வமாய் முதலில் உன்னை நான் சந்தேகிச்சதுக்கான மன்னிப்பு. ஒருவேளை அதனாலதான் நீ தொடர்ந்து தங்க மறுக்குறியோன்னு தோணுச்சு. அதான் இப்போ வெளிப்படையாய் சொல்லிட்டேன்."

"என்னால உங்க வாழ்க்கையில கூட மாற்றம்... நீங்க விரும்பாத மாற்றம். நான்தான் மன்னிப்பு கேட்கணும். மனம் மாறி நிகிலா மறுபடி வந்தது சந்தோஷமாய்..."

அந்தப் பேச்சே வேண்டாம் என்பது போல தீர்க்கமாய் கைகளை ஆட்டினான். "இப்ப அர்ஜுனைப் பற்றிப் பேசுவோமா?"

மின்விசிறியின் காற்றையும் மீறி சித்ராவிற்கு வியர்த்தது.

"அவர்... அவனைப் பற்றி என்ன?"

"ரெண்டொரு நாளிலே உன்னைப் பார்க்க இங்கே வர்றதாய் சொல்லி இருக்கார்."

'அத்தனைத் துணிவு வருமா?' –மனதுள் கறுவியவள், "இந்த விலாசத்தை நான் அவனுக்குத் தரலை, சரத்" என்றாள், அழுந்த.

"அப்ப உனக்கு எப்படி கடிதம் எழுதி இருப்பார்?"



## தாய்க்கு முதலிடம்

**பத்து ஆசிரியர்கள், ஒரு குருவுக்குச் சமம். நூறு குரு, ஒரு தந்தைக்குச் சமம். ஆயிரம் தந்தைகள், ஒரு தாய்க்குச் சமம்.**

**(மனுநீதி)**

**–வெள்ளானைக்கோட்டை பா. இசக்கிமுத்து.**

'தன்னை மறுபடி சந்தேகிக்கிறானா?' என தவித்த அவளின் முகம் பார்த்தவன், பேச்சை மாற்றினான்.

"நாளை அஜந்தா குகை போலாமா?"

"இப்பவே ஒரு மணியாச்சு."

"மெள்ள காலை பத்து மணி போல கிளம்பினால் போதும்."

"சரி."

பட்டனைத் தட்டிவிட்டு அவன் விலக– டி.வி. திரையில் படம் ஓடலானது. மனம் படத்தில் லயிக்கவில்லை.

"இந்தா சித்ரா..."

"என்ன?"

"பால் குடிச்சா தூக்கம் வரும்."

"நன்றி."

அவன் முதுகு மறைய– இவள் கண்கள் ஈரமாயின. இந்தக் கனிவு, கரிசனை எல்லாம் இன்னும் ஒரு வாரம்தான் என்ற ஏக்கம் உள்ளே அரும்பியது.

## 14

**அ**ஜந்தா குகைகளின் அடிவாரத்தில் கால் பதித்ததுமே அவளுக்குள் சில மாற்றங்கள்...

ஒரு இரும்புக் கை தன்னை நெருக்குவதாய் மூச்சடைத்தது.

கால்கள் துணியாய் துவண்டன.

சுற்றிலும் கேட்ட உள்ளூர் இந்திக் குரல்கள், சுற்றுலா பயணிகளின் கலவை மொழிகள், சிரிப்பு, பரபரப்பு எல்லாமாய் உச்சந்தலையில் குட்டின.

"என்னக்கா... என்னாச்சு?"

"ஒன்றுமில்லை."

இதே சூழலில் சென்ற ஆண்டு, தன் பெற்றோர்கள் இருந்திருப்பார்கள் என்ற நினைப்புதான் இந்த உணர்ச்சி

பெருக்கிற்கு காரணம் என்பதை யூகித்தாள்.

அவர்கள் கடைசியாய் கண்ட உலக அதிசயத்தைத் தானும் காணப்போகிறோம்.

அந்த நெகிழ்ச்சி உடம்பெங்கும் பரவியது.

இவள் தடுமாற்றத்தை அனுமானித்த சரத், "உட்காரேன் சித்ரா. ஒரு பழச்சாறு குடிச்சுட்டு படி ஏறலாம்" என்றான், இயல்பாய்.

"ம்..."

"இந்த ஓவியங்களைப் பார்க்கத்தான் நீங்க இத்தனை தூரம் பயணப்பட்டதே. ஒரு வழியாய் ஒரு மாசம் கழிச்சு பார்க்கவும் போறீங்க. சரித்திர பின்னணி பற்றி நிறைய தெரிஞ்சபின் இதைப் பார்க்கிறது அதிருஷ்டம்."

"ம்..."

தனது தடுமாற்றத்தில் வெளிறி இருந்த தம்பியின் முகத்தைப் பார்த்தவள், தறிகெட்டுப் பாயும் தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றாள்.

"எனக்கே– அதாவது உங்கப்பாவைப் போல ஓவியத்திலோ, உன்னை மாதிரி எழுத்திலோ திறமை இல்லாதவனுக்குக்கூட இந்தக் குகை ஓவியங்கள் உற்சாகம் தந்தன. குகை முழுக்க நூற்றுக்கணக்கில் நுணுக்கமான வர்ண ஓவியங்கள்... மங்காம, உயிர்ப்போட இருந்ததைக் கண்ட மலைப்பு கொஞ்ச நாளைக்குச் சுகமாய் கூடவே ஒட்டி இருந்தது... அப்படீன்னா உனக்கு?"

பழரசத்தைப் பருகியவன் எழுந்து நடக்க, மூலிகைக்குக் கட்டுப்பட்ட நாகமாய் பின்தொடர்ந்தாள், சித்ரா.

"மூச்சை ஆழ இழுத்துவிட்டு அவசரப்படாம ஏறு."

அவன் பேச்சைக் கேட்டபடி பாதி தூரம் ஏறியதும், அஜந்தா குகைகள் இருந்த மலையும், அதன் பிரமாண்ட நீள்வளைவு அழகும் புலனாகியது. மறுபக்கம் மிரட்டும் பாதாளம்.

ஒவ்வொரு குகைக்குள்ளும் போய் ஓவியங்களையும், பிரமாண்ட புத்த சிலைகளையும் பார்க்க, மிரட்சி மறைந்து ரசனை தலை தூக்கியது.

முப்பரிமாண புத்த சிலையைக் காட்டிய வழிகாட்டி, "ஒளி நேரே பட, சாந்த சொரூபியாய் தெரியும் இதே புத்தரின் முகம், ஒளி இந்தக் கோணத்தில் இருந்து வர துக்கமாகவும், மறுகோணத்தில் இருந்து பாய, புன்னகைப்பதாயும் தெரிவது அற்புதம்."



'டார்ச்' ஒளியுடன் விளக்கினார்.

"அற்புதம்தான்."

அத்தனையையும் சரத்தின் அனுசரணையான அண்மையுடன் கண்டுவிட்டு வீடு திரும்பியவள், அவனை நன்றியுடன் பார்த்தாள்.

"நன்றி அத்தான்."

புன்னகைத்தான்– "இன்னைக்கே கட்டுரையை எழுத உட்கார்ந்திடுவே இல்லையா?"

"மனதிலே நினைவு பசுமையாய் இருக்கிறப்ப எழுதினால் சுலபம்– சின்ன விஷயங்களைக்கூட விடாம எழுதிடலாம்... பிறகு, அசைபோட்டு அழகூட்டலாம்."

"அதன்பிறகு எனக்கு வாசிக்கத் தரலாம்."

"ஆகட்டும்."

"அத்தான், இப்போ அக்காவோட விசிறி ஆகிட்டீங்க இல்ல?"

"முழுமையாக எல்லாவற்றிலும்..."

அவன் மீது பதிந்த தன் பார்வையை அவளால் விலக்க முடியவில்லை. தன் மனக்குகைக்குள் ஒய்யார ஓவியம் ஒன்று உருவாவதையும்கூட...

நகரின் பிரபல நகைக்கடை, அது. பளிங்குத் தரையின் பளபளப்பு அங்கிருந்த ஆபரணங்களின் முன்னால் எடுபடவில்லை.

கண்ணாடியில் தன்னை அழகு பார்த்த நிகிலா கேட்டாள்–

"எப்படிம்மா இருக்குது?"

"கடவுள் உனக்கு அழகிலே வஞ்சனையே செய்யலையே மகளே– எதைப் போட்டாலும் உனக்கு அம்சம்தான்" இந்தியில் அங்கலாய்த்தாள், அந்த குண்டு தாயார்.

"இந்த மூணு 'செட்'டும் பிடிச்சிருக்கும்மா. எதை வாங்க?"

"உனக்குக் கூறு பத்தலை. இருந்திருந்தா, இந்த மூணோடு காய்கறிக் கடையில கீரைக்கட்டை அள்றாப்பல கண்ணுல பட்டதெல்லாம் எடுத்துக்கலாம்."

இதற்கு நிகிலா பதில் சொல்லவில்லை.

பல வைபவங்களுக்குப் போட்டு அலுத்த ஒரு பழைய நகை 'செட்'டை விற்றுவிட்டு, கூட சில ஆயிரங்கள் போட்டு புதுசு வாங்க வந்திருந்தனர்.

அப்பழைய நகைகூட 'சேட்' பையன் ஒருவனோடு நெருங்கிப்

பழகிய நாட்களில் அவனைப் பரிசளிக்கச் செய்ததுதான்.

தாய் சொல்வது போல தனக்குக் கூறுதான் போத வில்லையோ?

சரத்திடம் நயக்காமல், சக்தி காரியத்தைக் கெடுத்தாயிற்று. ஏதோ இவர்கள் சண்டைகென்றே காத்திருந்தவள் போல அவன் முறைப்பெண்ணும் அந்த நேரமா வரணும்.

இப்போது அவள் சதா சரத் பார்வையில் பட்டு, பழகியபடி.

"வாம்மா போகலாம்."

"என்னடி இதிலேயும் எது வேணும்னு முடிவு பண்ண முடியலியா?"

தாய் கடிந்தாள்.

"ம்ப்ச்.. மூடு இல்லம்மா..."

"பத்மஜா கல்யாணத்துக்கு இன்னும் ஒரு வாரங்கூட இல்லை. அதிலே நீ புதுசா ரெண்டு நகை போட்டுட்டு வளைய வரவேணாம்? மறுபடி என்னால இப்படி அலைய முடியாதுடி..."

பதில் சொல்லாமல் நிகிலா எழுந்து நடக்க, கடை முதலாளி முகமெல்லாம் மலர்வாய் யாரையோ வரவேற்பது தெரிந்தது.

நுழைந்தது. பெரியவர் சருநாத்.

கையில் பெட்டியுடன் நுழைந்த அவர் பெரும் மரியாதையுடன் தனி கேபினுக்குள் கூட்டிச் செல்லப்பட, நிகிலாவுக்குள் குறுகுறுத்தது.

ஐந்து நிமிடம் வலையல்களைப் பார்ப்பதாய் வளைய வந்தவள், 'கேபின்' கதவை தட்டிய கையோடு திறந்து நுழைந்துவிட்டாள்.

அவள் எதிர்பார்த்தபடி– திறந்த அப்பெட்டி நிரம்ப இருந்தவை நகைகள்தாம்.

சற்று கோபமாய் திரும்பினர், இரு ஆண்களும். 'நமஸ்கரிக்கிறேன்ஜி' சருநாத்தின் பாதம் தொட இவள் குனிய– இருக்கையுடன் அவசரமாய் பின்நகர்ந்தார், அவர்.

இவள் வெளியேற வேண்டியதானது. இருப்பதை விற்றுவிட்டு, புது நகை வாங்க தான் அல்லாட, ஒரு பெண்கூட இல்லாத சரத்தின் வீட்டில் பெட்டி நிரம்ப நகை வகைகள்– சற்றுமுன் அம்மா சொல்லிய காய்கறி மூட்டை போல.

இத்தனையையும் இங்கு ஏன் எடுத்து வந்திருக்கிறார்? புதுப்பித்து தன் மருமகளுக்குப் பரிசாக்கவா? கூடாது. அத்தனையும் தனக்குரியவை.

பேராசையால் அவள் நெஞ்சு விம்மியது.



## 15

"நாடகம் முடிஞ்சு நான் சித்ராவுக்கு மாலையிட்டு மரியாதை பண்ணப்ப என்ன கைத் தட்டுன்றீங்க? அவ எழுத்தின் சக்தி அப்படி."

"பெண்ணே சக்திதானேப்பா..."

ஆமோதித்தார், சருநாத்.

"அதிலும் சித்ராவுக்கு எல்லாத்திலேயும் அசாத்திய திறமை, பொறுமை எல்லாம்."

"நாடக விஷயமாய்தான் சந்திச்சோம் சார். அவ நாடகத்திலே 'ஹீரோ'வாய் நான் நடிக்க, ஆரம்பிச்ச பழக்கம். அவ வீட்டாருக்கும் என்னைப் பிடிக்கும்."

சிரித்தவன் சித்ராவை அர்த்தத்துடன் பார்த்தான்.

'உனக்கும்தானே பெண்ணே?' என்ற கேள்வி அதில் இருந்தது.

காண்பதெல்லாம் கொடும் கனவா. நனவா என்ற பிரமையில் இருந்தாள், சித்ரா. ஒருவகையில் நிகிலாவிற்கு நன்றி சொல்ல வேணும். இல்லையெனில் அர்ஜுன் வீட்டு வாசலில் வந்திறங்கிய காட்சி பெரும் அதிர்ச்சியாய் இருக்கும்.

'உனக்கு கடிதம் எழுதினதாய் சொன்னார்– உன்னைப் பற்றியே பேசினார்– வருவார்' என்று நிகிலா சொன்னது தன்னைக் குழப்பினாலும், மற்ற நினைப்புகளில் அதை ஒதுக்க முடிந்தது. கதைகள், அஜந்தா பற்றிய கட்டுரையில் மும்முரமான புத்தி– மற்றவற்றை அநாவசியம் என்று அலட்சியம் செய்திருந்தது. ஆனாலும் நிகிலாவின் எச்சரிப்பால் இவன் வருகை முழு அதிர்ச்சி அல்ல.'

"என்ன வரு... புது ஊர் ஒத்துகிச்சு போல? ஒருபிடி வளர்ந்திருக்கே. ஆனா, கூச்சம் வந்திருக்குது. என்னைச் சுற்றி சுற்றி வருவே– இப்ப பெரியாளாய் உட்கார்ந்திருக்கே?"

வரு இதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. தற்போது அவனுக்கு புது தெளிவும், தோரணையும் வந்திருப்பதாய் சித்ராவிற்குத் தோன்றியது. வாழ்க்கையின் கடின பாடங்கள் அத்தெளிவை கற்றுத் தந்திருக்கலாம்.

'ஏனக்கா அர்ஜுன் என்னைப் பார்க்காத மாதிரி போனார்?' என்று போன ஆண்டு துக்கத்துடன் தம்பி அர்ஜுனைக் குறித்து கேட்டது நினைவிருக்கிறது.

அந்த ஏக்கமும், துக்கமும் இன்று அவன் இளமுகத்தில்

இல்லை. நன்றியுடன் தன் புது உறவுகளைப் பார்த்தாள், சித்ரா.

மருமகளைத் தேடிவந்த விருந்தாளி என்று மாமா அர்ஜுனுக்கு ராஜ உபசாரம் செய்துகொண்டிருந்தார். சரத்தும் சளைக்காமல், 'பெரிய விருந்தினர் அறையை தயாராக்கிடுங்க மகிழம்மா– உங்களுக்குப் பிடிச்ச சாப்பாடு வகைகளைச் சொல்லுங்க மிஸ்டர் அர்ஜுன்' என தடபுடல்படுத்தினான்.

சித்ராவிற்கு மெல்லவோ முழுங்கவோ முடியாத சிரமம்.

இவனை யார் அழைத்தது? தன்னையே அவன் எங்கே அழைக்கக் கூடிய வகையில் தங்களுக்கிடையே என்ன உறவு? இவன் வந்ததின் காரணம் என்ன? சோழியன் குடுமி சும்மா ஆடாதென்பது நிச்சயம்.

“இத்தனை அருமையான உறவுக்காரங்க சித்ராவுக்கு இருக்காங்கங்கிறதுல எனக்குப் பெருமை சார். சித்ராவை ராணி போல வச்சுக்குவீங்க...”

“அவதானேப்பா எங்க வீட்டு ராணி?”

“எங்க ஊருக்கே சித்ராதாங்க ராணி.”

அர்ஜுன் சொல்ல, சிரித்தார்கள்.

சாப்பிடும்போதும் அடிக்கடி கிளம்பிய சிரிப்பில் சித்ரா பட்டுக்கொள்ளவில்லை.

“என்ன சித்ரா... இன்னும் பிரமிப்பு தீரலியா?”

“ம்...”

ஒரு வாய் நீர் பருகியவள், கேள்வியுடன் அர்ஜுனை நோக்கினாள். “இப்படி நான் இங்கே இருக்கிறது கனவு போலிருக்குதா? உனக்கு 'போன்' கூட செய்ய முடியலை. தவிர, நீ உன் போன் நம்பரையும் தரலியே?”

'விலாசமும் தரவில்லை' மனதுக்குள் கறுவியவள், அவன் விருந்தினன் என்ற ஒரே காரணத்துக்காக நினைத்ததைச் சொல்லாமல் உணவோடு சேர்த்து விழுங்கினாள்.

“ஆனா என் கடிதம் கிடைக்காததுதான் ஆச்சரியம்.”

“கடிதம்ன்னா– எத்தனை எழுதினீங்க?” சரத் கேட்டான்.

“ரெண்டுதான் சார்.”

“ஏன்னா நான்தான் கடிதங்களைப் பிரிச்சு, வீட்டுத் தபால்களை டி.வி. மேல் வைப்பேன்.”

“மும்பை போக நான் ஒத்துக்கிட்டதுக்கே சித்ராதான்



காரணம்– அப்பவே முதல் கடிதத்தை எழுதிட்டேன்.”

“சந்தோஷம் தம்பி. இத்தனைத் தூரம் தேடி வந்தீங்களே... நாலு நாளாவது தங்கணும்.”

“இன்னைக்கும்... நாளைக்கும் வேணா தங்கலாம்.”

அர்ஜுன் வழிந்தபடி சொன்னதை எரிச்சலுடன் கவனித்தாள்.

“இங்கே வந்து குகை ஓவியங்களைப் பார்க்கலைன்னா எப்படி?”

“நாளைக்கு நாம ஒரு சுற்றுலா போலாமா சித்ரா?” குழைந்தான், அர்ஜுன்.

“நான் எல்லாம் பார்த்தாச்சு.”

முன்தினம் குழந்தை போல தயங்கிய தன்னைத் தேற்றி, அஜந்தாவை ரசிக்க வைத்திருந்த சரத்தை நன்றியுடன் பார்த்தாள். எத்தனை கனிவும், கண்ணியமுமான துணையாய் உடனிருந்தான்.

கை கழுவியவள், “நீங்க ஓய்வு எடுங்க அர்ஜுன்” என்று நழுவினாள்.

“உங்கிட்ட நிறைய பேசணுமே, சித்ரா?”

“எழுத்து வேலை மிச்சமிருக்குது” –வெளியேறினாள்.

அன்று மாலையும் அர்ஜுனுடன் நகர்வலம் வர வரூவை வலிய அனுப்பியவள் தான் நழுவினாலும், அன்றிரவு மாட்டிக் கொண்டாள்.

கட்டுரையை முழுமையாக்க மேலும் சில சரித்திர குறிப்புகள் தேவைப்பட்டன.

“வந்த மன்னர்கள் புத்தத் துறவிகளை விரட்டியடிக்க, உயிருக்கு அஞ்சி அவர்கள் ஓடியபின் கவனிப்பாரற்று மரங்கள் மூடி மறைத்தன இக்குகைகளை... ஆயிரம் ஆண்டுகள் அக்குகைகளும் தனிமையில் தவமிருந்தன. வகோரா ஆற்றின் அருகே வேட்டையாடப் போன ஆங்கிலேயர்கள் எதேச்சையாகக் கண்டுபிடித்தனர் இந்தக் குகைகளை.”

வாசித்தது நினைப்பிருந்தாலும், எந்த ஆண்டு, எப்படி என்று மேலும் சில உண்மைகள் தேட, கீழிறங்கினாள்.

அம்மாவின் பழைய சேலையில் தைத்த 'நைட்டி'யில் இருந்தவள், இந்நேரம் யார் விழித்திருப்பார்கள் என்ற அலட்சியத்தில் விளக்கைத் தட்டி, புத்தகத்தைத் தேட, காலடி சத்தம் கேட்டது.

சரத்தாக இருக்குமோ என்ற ஆவலில் திரும்பிய அவள் முகம் இறுகியது.

"நினைச்சேன் சித்ரா... நீ தனியே வருவேன்னு தெரியும். உன் அறையிலே விளக்கு அணையவே இல்லையே..."

"எழுதிட்டிருந்தேன்."

"நான் உனக்காய் காத்திட்டிருந்தேன்."

"புரியலை?"

ஓரளவு அவன் பேச்சு புரிந்தும், பல விஷயங்கள் புரியவில்லை. அதில் முக்கியமானது, 'ஏனிந்த திடீர் பாசம்?' என்பதுதான்.

"ரொம்ப நாளாச்சு சித்து, உன்னைப் பார்த்து."

அம்மா அழைக்கும் அச்செல்லப் பெயரை அவன் பயன்படுத்தியதை வெறுப்பாய் பொறுத்துக்கொண்டாள்.

"சாத்தூர் பள்ளி விழாவில்கூட பார்த்தேனே... நீங்க கவனிக்கலை போல."

தேடிய புத்தகத்தை கண்டு உருவினாள்.

"உன் கோபம் நியாயம்தான், சித்ரா. ஆனா, எம்பிரச்சினையையும் கொஞ்சம் புரிஞ்சுக்கோ. வேலையில சிக்கல். இப்ப புது வேலை. முதலாளி ஒரு குஜராத்தி."

"நான் தேடின தகவல் கிடைச்சிருச்சு– நாளை பார்க்கலாமா?"

"ஒரு நிமிடம் சித்து... உன் அழகு கூடி இருக்குது... பணத்திலே புழங்கினா தேகத்தில் தனி பளபளப்பு ஏறுதில்ல?"

"நான் இங்கே வந்தது பாசத்தை எதிர்பார்த்து."

"ஆமா, உம் மேல ரொம்ப பாசம் காட்டுறாங்க. ஆனா, நானும் உன்னை ரொம்ப 'மிஸ்' பண்ணுறேன், சித்ரா. நீ சரத்தோடு நின்ன படத்தைப் பத்திரிகையில் பார்த்து அந்த நிமிடம் நெஞ்சு அடைச்சிடுச்சு. நீ அவரைப் பார்த்து சிரிக்கிறே. அந்த அழகு சிரிப்பை இழந்திடுவோமோங்கிற பயம்."

மவுனமாய் நின்றாலும், என்ன சொல்ல முயலுகிறான் என்று உள்ளம் படபடத்தது.

"மாளிகையில் ராணியாய் உன்னைப் பார்க்கிறப்ப பெருமையா இருக்குது. போனதும் எங்க அம்மாட்ட சொல்வேன். 'சித்ரா துக்கிரி, ராசி இல்லாதவள்ன்னு ஊர் பேசுச்சேம்மா. ஓட்டு வீட்டை இழந்தவளுக்கு மாளிகை கிடைச்சிருக்குப் பாருன்னு."

அவனைத் துச்சமாய் பார்த்தாள்.

"எங்கம்மா– அப்பா இழப்பை எதாலேயும் ஈடுசெய்ய முடியாதே. அந்நேரம் வந்து ஆறுதலாய் ரெண்டு வார்த்தை சொல்லத்



துணிவில்லை, உங்களுக்கு."

"அம்மா... வந்து... வேணாம்னு..."

"இப்ப அம்மா அனுமதி கிடைச்சிடுச்சா?"

"நான் போய் உன் வாழ்வைச் சொன்னால் ஊரே உன்னை அதிருஷ்டக்காரின்னு கொண்டாடும்."

'உங்கிட்டே இருந்து தப்பினதுதான்டா பெரிய அதிருஷ்டம்' என்று விளாசத் துடித்த நாக்கை அடக்கினாள்.

"உன்னைப் பார்த்தது என் அதிருஷ்டம் சித்து."

நெருங்கி இவளை தோளைப் பற்ற முயன்றவன்– கையை ஒதுக்கிய நேரம் சரத்தின் தலை தெரிந்தது.

"ஓ... சாரி... நீங்கதான் பேசறதுன்னு புரியாம..."

தங்கள் நெருக்கத்தைத் தப்பாய் கணித்துவிட்டானோ?

"ஒன்றுமில்லை... இந்த புத்தகத்துக்காய் வந்தேன், சரத்."

"நான் வந்தது சித்துவுக்காய்" அர்ஜுன் அசட்டுத்தனமாய் சிரிக்க– இவளுக்கு எரிந்தது.

## 16

மறுநாள் அர்ஜுனைப் பார்த்து– உற்சாகமாய் உபசரித்த சரத்தைப் பார்க்க பார்க்க தன்னுள் புரண்ட உணர்வு சித்ராவிற்குப் புதியது.

ஏன் இப்படி இதயம் கனக்கிறது?

சரத்தின் உற்சாகம் ஏன் தனக்கு துக்கமாக இருக்கிறது?

ஏமாற்றத்தினால் உள்ளம் வெம்புவது ஏன்?

"என்ன சித்ரா... நீ இன்னும் தயாராகலை?"

"தலை கனக்குது சரத்... நேத்து ராத்திரி படுக்க நேரம் ஆயிடுச்சு."

சொன்னதும் நாக்கைக் கடித்துக்கொண்டாள்... 'தப்பாய் நினைத்துவிடுவானோ?'

நினைத்தால் தேவலையே... எந்த விகல்பமும் இல்லாமல் விருந்தாளியை உபசரித்த சரத்தைத் துளி வெறுப்புடன் பார்த்தாள்.

தன்னுள் ஏற்பட்டிருந்த மாற்றங்களை... தானே உணராத... அல்லது உணர வெட்கிய மாற்றங்களை, நேற்றிரவின் சிந்தனைகள் அவளுக்குப் புரிய வைத்து இருந்தன.

அன்புக் கைகளை நோக்கித் தாவும் குழந்தையாய் சரத் மீது தன் மனம் தாவுவது புரிந்தது.

கோபமும், சந்தேகத்திலுமாய் ஆரம்பித்த உறவு பண்பட்டு இருந்தது உண்மை.

சரத் பாசமும், பரிவும் காட்டியது சரி... ஆனால், அதற்குமேல் தான் எதிர்பார்ப்பது அறிவீனம்.

அதுவும் அவன் மனதில் ஏற்கெனவே ஒரு அழகி இடம் பிடித்திருந்தது தெரிந்தும் சலனப்படுவது தப்பு.

அன்புக்கு ஏங்கிய தன் இதயம் தாவ துடிக்கலாம்... இனி அதை அடக்கத்தான் வேணும். ஆனால், அது சுலபமாயில்லை.

பாதுகாப்போ, பராமரிப்போ அற்ற குகை ஓவியங்கள் நூற்றாண்டுகள் பல கழிந்த பிறகும் மறையாதிருப்பது போல சில மனச்சித்திரங்கள் மாறாது.

**"மனக்குகை முழுதும்**
**உன் மாய ஓவியம்**
**மறக்க வேண்டிச்**
**சுரண்டச் சுரண்ட**
**நகக் கண்களில் கசியும்**
**நம் காதல்..."**

மனதில் முன்பு எப்போதே பதிந்திருந்த கவிதை இங்கிதமற்று இப்போது முகம் நீட்டியது.

சாக்கட்டியால் கிறுக்கியது போன்று, அர்ஜுனின் பழக்கம்– சுவடின்றி மறைய... இப்புது ஓவியம் அழுந்த பதிந்துவிட்டது. ஒவ்வொரு நாளும் மெருகேறுகிறது.

தவிர, தான் காசு ஆசைப் பிடித்து ஒண்டவில்லை என்பது புரிந்த பிறகுதான் சரத் அன்புடன் பழகுவது... இருக்க, மறுபடியும் தன் நேசத்தை, சொத்தை முழுமையாய் அடையும் ஆசை என்றே அவன் கொச்சைப்படுத்திவிட்டால்...?

அது போக தன் மீது சற்றேனும் காதல் நினைப்பு இருந்தால், இப்படி அர்ஜுனை தலை மீது தூக்கி வைத்து ஆட முடியுமா?

'நீதாம்மா இந்த வீட்டுக்கு...' என்று அடிக்கடி மாமா சொல்ல, தான் இப்படி உரிமை எடுத்துக்கொள்கிறோமோ?

'தலைவலி' என்ற பொய்யுடன் படுத்தவள், பத்து மணிக்கு வீடு அமைதியானதும், ஆற அமர தலைக்குக் குளித்தாள்.



"தலைவலின்னுட்டு ஏம்மா தலைக்கு ஊத்தினே?" கடிந்த மகிழம்மா, ஈரக் கூந்தலைப் பிரித்து சிக்கெடுத்தாள்.

"இப்ப ஒன்றுமில்லைம்மா."

"அவருகூட போகலியா?"

"அர்ஜுன்கூடவா? இல்லை..."

"அவர் எப்படிம்மா பழக்கம்? நமக்கு உறவா?"

"ஊங்கூம்... ரெண்டு ஆண்டு முன்னே ஏற்பட்ட பழக்கம். சீக்கிரமே சுருங்கியும் போச்சு."

"அப்ப ஏன் அவரு உன்னைப் பார்க்க வரணும்?"

"எனக்கும் அதான் புரியலை... இத்தனைத் தொலைவு வந்தவனாச்சேன்னு மாமா தங்க வச்சு உபசரிக்கிறார்... உங்களுக்கும் ஜாஸ்தி வேலை..."

"இதென்னம்மா... பத்து பேர் வந்து ஒரு மாசம் இருந்தாலும் சளைக்காம விருந்தோம்புவோமே... ஆனா..."

ஈரக்கூந்தலை அளைந்த முதியவளின் விரல்கள் தயங்கின.

"சொல்லுங்க."

"விருந்தாளியும் அதுக்குத் தக்கவராய் இருக்கணும்."

"புரியலியே மகிழம்மா..."

"இன்னைக்குக் காலையில பத்திரிகைகளை பெரியவரு ஆபீஸ் அறையில் வைக்க நான் கதவைத் திறந்தா... இந்த அர்ஜுன் உள்ளே நிக்கிறாரும்மா..."

"மாமா அறையில அவருக்கென்ன வேலை?"

"அதைத்தான் நானும் கேட்டேன். அதுவும் அவரு அம்மா இல்ல..."

"என்ன பண்ணிட்டிருந்தார்?"

"பெரியவர் மேசை டிராயரைத் திறந்து பார்த்துட்டிருந்தாரு."

சித்ராவிற்கு 'சுருக்'கென்றது.

"வேண்டாத விருந்தாளியாய் வந்து வம்பு வேறு செய்கிறானா?"

"கேட்கிறதுதானே மகிழம்மா?"

"கேட்டேம்மா... 'கடிதாசி எழுத காகிதம் வேணும்'னாரு. 'வேணுங்கிறதை எங்ககிட்ட கேளுங்க தம்பி. கொணாந்து தருவோம்ல? வாங்க'ன்னு கையோடு வெளியே கூட்டிட்டு வந்துட்டேம்மா."

அந்த அலுவலக அறைக்குள் சித்ராவே போக நேர்ந்ததில்லை.

காலையில் அங்கு செய்தித்தாளை வாசிக்கும் மாமா, அன்றைய வேலைகளை அங்கு வைத்து திட்டமிடுவதோடு சரி. ஆனால், முக்கிய கோப்புகள் இருக்கக்கூடும். அங்கே அர்ஜுனுக்கு என்ன வேலை?

"**அ**ம்மாவுக்கு தபால் வந்திருக்குது... கையெழுத்து வேணுமாம்."

வேலையாள் நீட்டிய நீள உறையை வாங்கி யோசனையுடன் புரட்டினாள். கையொப்பமிட்டு, பதிவு தபாலின் வெளி முத்திரையில் பரபரப்படைந்து, உறை பிரித்து, கடிதத்தை உருவினாள். இத்தனை பிரபல புத்தகப் பதிப்பாளர்களிடம் இருந்து தனக்கென தகவல்?

'ரீ–டைரக்டட்' என்ற குறிப்புடன் மாமாவின் விலாசம் புதுத்தாளில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. தலைமை ஆசிரியரின் கையெழுத்தில். கூடவே, அவரது கடிதமும் வந்திருந்தது.

முதல் கடிதத்தை வாசித்தவள் அதை மார்போடு அணைத்து விட்டாள்.

"என்ன சித்ராம்மா?"

"விக்ரமாதித்தன் கதைகளுக்கு அப்பா 'கார்டூன்' படம் போட்டு அனுப்பி இருந்தாராம். அது வெளிநாட்டு பதிப்பகத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்காம். பெரிய அளவில் இப்புத்தகத்தைப் பதிப்பிப்பாங்க... அப்பா வரைஞ்ச படங்களை உலகம் முழுசும் பார்ப்பாங்க... ரசிப்பாங்க..."

"நல்லவங்க போனபின்னும் அவங்க பேரு நிக்கும்மா."

"'ராயல்டி' பணம் அனுப்புவாங்களாம்... அப்பா, அம்மா இருந்திருந்தால் பூரிச்சிருப்பாங்க."

சித்ராவின் குரல் தழுதழுத்தது.

"இப்ப உன்னோடு சேர்ந்து சந்தோஷப்பட நாங்க இல்ல... பிறகென்னம்மா? முதல்ல பெரியவர்கிட்ட 'போன்' போட்டு விவரத்தைச் சொல்லிடலாம்."

"அப்புறம் இதையே 'கார்டூன்' தொடராக எடுக்கத் திட்டமாம். அதுக்கும் அப்பாவின் படங்கள்தான் அடிப்படை. அதுக்கும் தனியாய் பணம் வருமாம்."

"ஐயா பேரையும் டி.வி.யில காட்டுவாங்கல்ல?"

"ம்..."



"அது போதுமே... நாம பார்த்து பார்த்து மனசு நிறஞ்சுக்கலாம்."

மகிழம்மாவைக் கட்டிக்கொண்டாள், சித்ரா. ஆனால், மறுகடிதத்தை பிரித்து வாசித்தவளுக்குள் கோபம் குமிழிட ஆரம்பித்தது.

தலைமை ஆசிரியரின் கடிதத்தை இருமுறை வாசிப்பதற்குள் உலர்ந்த இவள் கூந்தலைச் சிக்கெடுத்து தளர பின்னி இருந்தாள், மகிழம்மா.

"காப்பியா... இல்லை ஜூஸ் ஏதும் அனுப்பட்டுமாம்மா?" கேட்டவள், சித்ராவின் முகக் கடுப்பைப் பார்த்துவிட்டு, "என்னப்பா... என்னாச்சு?" எனக் கேட்டாள்.

தன் மகிழ்வைப் பகிர்ந்தவளிடம், 'இதையும் சொல்லலாம்... தப்பில்லை' என்று பட்டது.

"எங்க பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் எழுதி இருக்கார்."

"என்ன, உடனே வரச்சொல்றாரா மனுஷன்?"

அந்த குரோதக் கேள்வியில் சித்ராவிற்கு சிரிப்பு வந்தது.

"இந்த பதிவுத்தபாலை அனுப்புறதைப் பற்றிக் குறிப்பிட்டுட்டு, அர்ஜுன் மும்பை போறது பற்றியும் எழுதி இருக்கார்."

"சரி."

"வேலை விஷயமாய் மும்பை போறவன், உன் விலாசத்தை ஒருவேளை கேட்பானோன்னு நினைச்சேன். கேட்டால் இந்த முக்கிய கடிதாசியை அவன் மூலமாய் கொடுத்துவிடலாமேங்கிற நப்பாசை. ஆனா, இல்லைன்னு வருத்தமாய் எழுதி இருக்கிறாரு."

"அப்ப இந்த அர்ஜுன் துரை எப்படி நம்ப வீட்டைக் கண்டு பிடிச்சாராம்?" மகிழம்மா புருவத்தை நெறித்தாள்.

"என் விலாசமே தெரியாமல் என் கடிதம் கிடைச்சுதான்னு வந்ததும் வராததுமாய் கேட்டது புளுகுதான்... நிகிலாகிட்ட கூட... இதே பொய்யைத்தான் சொல்லி இருக்கான்."

"எதை?"

மகிழம்மாவிற்கு தலையும், வாலும் எட்டவில்லை.

சித்ரா விவரமாய் விளக்கியதும், "ரெண்டு பேரும் சேர்ந்து போடுற நாடகம் போல் இருக்குதும்மா" தீர்ப்பு சொன்னாள், மகிழம்மா.

"ரெண்டு பேருன்னா யாரு?"

"நிகிலாப் பொண்ணுதானே முதல்ல இவரைப் பத்தி பேசியது?

அது கொடுக்கலைன்னா நம்ப விலாசம் இவருக்கெப்படி கிடைக்கும்?"

"அதானே?"

"நிகிலாவுக்கு சரத் தம்பி தன் கைவிட்டு நழுவியாச்சுங்கிறது தெரிஞ்சிடுச்சு. ஆனா, முழுசாய் விட்டுடவும் மனசில்லை. தற்செயலாய் ரெயிலில் சந்திச்சு பேச்சுக் கொடுத்தவனை கூட்டு சேர்த்துகிடுச்சு."

"எதுக்கு?"

"சொத்துக்கு மொத்த வாரிசான சரத் தம்பியை கல்யாணம் செய்துக்கிறது நிகிலாவோட திட்டம்மா..."

"சரி."

"அந்நேரம் உன் கடிதாசி வந்ததும் பெரியவருக்கு சந்தோஷம் தாங்கலை."

"யாரும் இல்லாம, வீடும் இல்லாம எம் மருமக எங்கயோ இருக்கிறதா? போய் குழந்தைகளைக் கூட்டிட்டு வாடா... பாதி சொத்துக்கான அதிபதி அவதான்'னு இங்கே அமர்க்களம் பண்ணிட்டாரு."

"ம்..."

"இந்த அமர்க்களம் ஊருக்குள்ளே பரவ- நிகிலாவுக்கு 'திக்'குன்னு ஆகி, நம்ப தம்பியோடு சண்டை போட்டுச்சு."

தான் இங்கு நுழைந்த நேரம் இச்சண்டையில்தானே இருவரும் மும்முரமாக இருந்தனர்? பெருமூச்சுடன் வருந்தினாள், சித்ரா.

"மேலுக்கு ஆளு பளபளப்பாய் இருந்தாலும் வாய் திறந்து வந்த பேச்சில், பொண்ணுக்குள்ள விஷம் இருக்கிறதை சரத் தம்பி கண்டுகிடுச்சு. நிகிலா இப்ப சுதாரிச்சிட்டு இங்கு வளைய வருதுதான்."

'ஆனா, பல்லைக் கழட்டாத பாம்பு, தோலைக் கழட்டி என்ன- வாலைக் கழட்டி என்ன?'

எளிமையாய் இருந்தாலும்- வயதுக்குரிய அறிவும், அனுபவமுமாய் பேசிய மூத்தவளை வியப்புடன் பார்த்தாள், இளையவள்.

"பாதி சொத்து கைவிட்டு போறதுக்கே குஸ்தி போட்ட நிகிலாவுக்கு புரிஞ்சிடுச்சு, கொஞ்சம் அசந்தா முழு சொத்தும் போயிடும்னு..."

"புரியலியே..."



"இது புரியலைன்னா எப்படிம்மா? வந்த நீ முறைப்பொண்ணு. ரத்த உறவாய் இல்லாட்டியும், ஒருத்தருக்கு ஒருத்தர்னு செஞ்ச ஜோடி. பொம்மையாட்டம் இருக்கிறீங்க. உன் குணமும், அறிவும் பழகினவங்களுக்கு விட்டுப் பிரிய மனசு வருமாம்மா? பெரியவரோடு சின்னவரும் உம்பக்கம் சாஞ்சுட்டது புரிய- வீம்புக்காய் வெளியூர் போனவ, ஓடிவந்துட்டா. உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணமாயிட்டா தனக்குக் கிடைக்கும்னு நினைச்ச பாதியும் தேறாதேங்கிற பயத்துல, இந்த அர்ஜுனனை ஏவி விட்டுருக்கணும்."

"என்னன்னு?"

"சித்ராவுக்கு நெருங்கினவனாய் நடின்னு."

"ஒரு விஷயம் மகிழும்மா..." தயங்கினாள்.

"சொல்லு."

"முன்னே... கொஞ்ச காலம் நான் அர்ஜுனை விரும்புறதாய் நினைச்சதுண்டு. ஆனா, அப்பா- அம்மா இறந்தப்ப இவர் எங்க வீட்டுப் பக்கமே வரலை... நான் ராசிக்கெட்டவள்ன்னு அவங்க வீட்ல திட்டினதால் பயந்துகிட்டு..."

"விடம்மா- இந்தப் பேச்சையும் இத்தோட விடு. உன்னை மாதிரி மகராசிக்கு இவனா ஈடு? ஆக நிகிலா... இவனிடம்."

"நீ போய் சித்ராவை மடக்கப் பாரு. முழுசாய் சொத்து பறிபோறதைக் காட்டிலும், 'உனக்குப் பாதி- எனக்குப் பாதியாவது மிஞ்சட்டும்'னு திட்டம் போட்டு ஏவிவிட்டிருக்கா."

மெள்ள புன்னகைத்தாள், சித்ரா.

"மகிழம்மா, நீங்க கதை எழுதினதுண்டா?"

"சொல்றதுதாம்மா... உக்கார்ந்து யோசிக்க, எழுதவெல்லாம் நேரமெங்க?"

"எழுதினா பிரபலமான எழுத்தாளர் ஆயிடுவீங்க" பெருவிரலைக் காட்டினாள், சித்ரா.

"போம்மா... நான் இப்ப சொன்னது சரியாய் இருக்கும் பாரேன்..."

"இத்தனைத் திட்டமும் ஆறு மணி நேர ரெயில் பயணத்துல, அப்பத்தான் அறிமுகமான ஒரு பயணியோடு நிகிலா செய்ததாய்... நம்ப முடியலியே?"

"அந்தப் பொண்ணு பணங்காசுக்காய் எதையும் செய்யும்மா."

"ம்... அர்ஜுனும்கூட அப்படித்தான்னு தோணுது."

"பின்ன ஜாடிக்கு மூடி சேர்ந்துகிச்சு!"

## 17

"சித்ரா..."

அர்ஜுனின் அழைப்பு கேட்டது. எத்தனை உரிமையான அழைப்பு. இவளோ எரிச்சலுடன் எழுந்தாள்.

முன்பு பெற்றோரைப் பார்க்கும் சாக்கில் வீடு நுழைந்து, இவள் முன்னறைக்குப் போனால் மட்டுமே இவளுடன் சில வார்த்தைகளைப் பேசியவன், இன்று சர்வ சுதந்திரமாய்– சொண்டவன் போல இவள் பெயரைக் கூவியபடி சுற்றுகிறான்!

எத்தனை துணிவு இருந்தால் வந்ததும், 'நான் போட்ட கடிதம் வரலியா?' என்று அலட்டுவான்.

அவள் கண்களை இறுக்கியபடி படுத்து இருந்தாள்.

"சித்ரா..."

அறைக்கு வெளியே அவன் குரல் கேட்க– மனமின்றி எழுந்தாள். மெள்ள கதவருகே போனபோது, கதவு ஒரு அங்குலம் திறந்திருப்பது தெரிந்தது.

'நல்லவேளை அவ இல்லை' என்ற முணங்கலுடன் படிகளில் இறங்கிய அர்ஜுனனின் முதுகை விநோதமாய் பார்த்தாள்.

'என்ன சொல்கிறான் இவன்?'

கதவு பின்னே சற்று பம்மியவள், அவன் படிகளை இறங்கும் வரை அசையவில்லை; மனதுக்குள் புது கலக்கம்.

அதிக சப்தமின்றி நகர்ந்த அர்ஜுன், சுற்றிலும் ஒருமுறை பார்த்த பின் அந்த அறைக்குள் நுழைய– இரண்டு நிமிட இடைவெளிவிட்டு அவனைத் தொடர்ந்தவள்– ஒரு கணம் அவனைக் காணாமல் திகைத்தாள்.

மாமாவின் அலுவலக அறையில் காது பதித்தவள்– 'பட்'டென கதவைத் திறக்க– அறைப்பட்டவன் போல விதிர்த்து நிமிர்ந்தான், அறைக்குள் நின்ற அர்ஜுன்!

"ஓ... நீதானா சித்ரா? இப்பத்தான் உன்னைக் கூப்பிட்டேன்..."

"அப்புறம், நல்லவேளை நான் இல்லைன்னு இங்கே வந்து புகுந்திட்டே இல்ல?"

"என்ன திடீர்னு ஒருமைக்குத் தாவிட்டே?" சிரிக்க முயன்றான்.

"இந்த மரியாதையே அதிகந்தான்."

அங்கிருந்த அகல தேக்கு மேசையின் இழுப்பறை வாய் திறந்திருந்தது.

"அதை ஏன் திறந்தே?"

"கடிதம் எழுத காகிதம் கிடைக்குமான்னு..."

"மகிழம்மாகிட்ட சொன்ன அதே பொய்தானா எங்கிட்டேயும்?" ஏளனமாய் புன்னகைத்தாள்.

"வேற எனக்கென்ன இங்கே வேலை?"

"அதைத்தான் பார்க்க வந்தேன்."

"இங்கே வெறும் 'பைல்'கள்தான்..."

"தெரியுதுல்ல... பிறகென்ன குடைச்சல்?"

முன்னேறியவள் மேசை மேல் பிரிக்கப்பட்டிருந்த கோப்பினை எடுத்தாள்.

"மறுபடி உள்ளே வச்சுடுறேன், சித்ரா" அவன் குரல் நடுங்கக் குழைந்தான்.

"நான் இது என்னன்னு பார்த்த பிறகு."

அமர்த்தலாய் சொன்னாலும்– எண்ணும், எழுத்துமாய் நிரம்பிய தாள்கள் எதைக் குறித்தன என்பது புரியவில்லை. கம்பெனி பங்குகளாய் இருக்கலாம் என யூகித்தாள்.

கோப்பை மறுபடி உள்ளே வைக்க எடுத்தவளின் விழிகள் திகைப்பில் விரிந்தன– கோப்பின் கீழிருந்தன இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுகள்!

"இதை எங்கேருந்து எடுத்தே?" –கேட்ட குரல் கம்மியது. இவன் இத்தனை இழிந்தவனா என்ற விக்கிப்பு!

"இல்ல... வந்து சும்மா..."

"திருட வந்தியா?"

"சித்ரா... நான் இங்கே வந்தது உனக்காக..."

"நான் அத்தனையும் பறிகொடுத்துட்டு சாத்தூர்ல நின்னப்ப வராத நீ, இங்கே ஏன் தேடி வரணும்? தவிர, தலைமை ஆசிரியர் கிட்ட நீ என் விலாசத்தையும் வாங்கிக்கலை... அதைத் தந்தது நிகிலா தானே!"

அவன் முகம் மேலும் வெளிறியது.

"எல்லாம் சொல்லிடுறேன், சித்ரா. முதல்ல முக்கியமான விஷயத்தை... உன் மாமா எழுதின புது உயிலைப் பார்க்க வந்தேன்... போன வாரம் எழுதின அதில் என்ன இருக்குன்னு."

"நிகிலா உளவறியச் சொன்னாளா? ஆனா, இப்ப சந்திச்ச அவளுக்காய் நீ ஏன் இத்தனை சிரமப்படணுங்கிறது எனக்குப் புரியலை."

ஆரம்ப அதிர்ச்சி குறைந்து, அவள் புத்தி செயல்பட ஆரம்பித்து இருந்தது.

"ரெயில் பயணத்துல சந்திச்சோம்... உன் படத்தை நிகிலா கையில் இருந்த பத்திரிகையில் பார்த்ததும் போய்ப் பேசினேன். தவிர, என் 'ஜி.எம்.'மை நிகிலாவுக்குத் தெரியுமாம். சொல்லி என் வேலையை நிரந்தரமாக்குகிறேன்னா... ஆனா, உன்னைப் பார்க்கிற ஆசையில்தான்..."

"போதும் அர்ஜுன். இனி பொய் வேணாமே..."

கை உயர்த்தி அவள் முகம் சுளிக்க, அவன் குன்றினான்.

"நீ இங்கே ராணி மாதிரி வாழறதுல சந்தோஷம்... இங்கே வந்தது சரிதான்..."

"என்ன சரி? மாமா பணக்காரர்ங்கிறதாலயா? அவர் முதலாளியாய் இல்லாம தொழிலாளியாய் இருந்திருந்தாலும் நான் இங்கே வந்திருப்பேன். இப்ப எனக்கு மிஞ்சி இருக்கிற உறவு அவர் மட்டுந்தான். தவிர, உயிலை எல்லாம் தேடி கஷ்டப்படாதே. மாமா அதுல என்ன எழுதி இருந்தாலும், சொத்து முழுக்க இத்தனை நாள் உழைச்ச சரத்துக்குத்தான். இப்ப புறப்படுறியா?"

"இப்ப திடீர்னு...?"

"உடனே கிளம்பணும். மாமா மதியச் சாப்பாட்டுக்கு வர்றப்ப நீ இங்கே இருக்கக்கூடாது. சரத் வந்தால் விபரீதமாய்கூட ஆகலாம்" அவள் தொனி மிரட்டியது.

"மன்னிச்சிடு சித்ரா. உம்மேல எனக்கு இப்பவும் பிரியந்தான். நீ சம்மதிச்சா நான் இங்கேயே இருக்கவும் சம்மதம். சொத்தை உம்பேரிலேயும், சரத் பேரிலும் பாதி பாதியாய்..."

"பிளீஸ்... எனக்கு உம்மேலேயும் பிரியமில்லை... இந்தச் சொத்து மேலேயும் பற்றில்லை."

அர்ஜுனின் கண்கள் இடுங்கின.

"கதைவிடாதே சித்ரா... வெறுமே உன் மாமாவைப் பார்க்க

வந்திருந்தா, பார்த்துட்டு ரெண்டு நாள்ல கிளம்பி இருக்க வேண்டியதுதானே? ஒன்றரை மாசமாய் இப்படி இருந்து..."

"இங்கே கிடைச்ச அன்பு அப்படி... திரும்பிப் போறதை நினைச்சு வேதனைப்படுற அளவுக்கு மாமா அன்பு காட்டினார். சரத்தும் தான்! இவங்க இல்லாம இனி... சரி இன்னும் நின்னு பேசணும்னா போலீசுக்கு முதல்ல 'போன்' பண்ணிடுறேன். அவங்க வந்து 'ஜீப்'ல உன்னை அழைச்சுட்டு போற வரைக்கும் பேசலாம்... என்ன? அஞ்சு நிமிடம் அவகாசம் தர்றேன்."

ஏழாம் நிமிடம் பெட்டியோடு வாசற்படி இறங்கியவனைக் கண்டு மனம் இளகியது.

"எனக்கு நேசம்னா என்னன்னு இங்கேதான் புரிஞ்சுது... உனக்கும் அது புரிய வரும்னு நினைக்கிறேன், அர்ஜுன். எதிர்பார்ப்பு இல்லாத அன்பு– காசு, அந்தஸ்து எல்லாத்தையும்விட பெரிசு... அபூர்வமானது."

மெள்ளச் சொன்னவள், கதவை மூடிவிட்டுத் திரும்பினாள்.

கைதட்டும் ஒலி கேட்க, திடுக்கிட்டவள் பார்வையில், சரத்!

"புளுகு, திருட்டுன்னு சகலகலா கெட்டவனான அர்ஜுன் உன்னை வேறேதும் செய்திவானேன்ற பயத்துல பாதுகாப்புக்காய் நான் இங்கேயே நிற்க நேர்ந்திடுச்சு... ஆனா, அம்மணி அசத்திட்டீங்க!"

"சரத்... இத்தனை நேரம் இங்கேயா இருந்தீங்க?"

"கொஞ்ச ஓரமாய் நின்னேன். ம்..."

பாக்கெட்டில் கைகளை விட்டபடி குறும்பாய் சிரித்தவன், தொடர்ந்தான். "மாமாவைக்கூட ஒட்டுக்கேட்க வசதியாய் ஆபீஸ் அறை ஜன்னலுக்கு வெளியே நிற்க வச்சிருந்தேன்..."

சங்கடமாய் நெளிந்தாள்.

"நீங்க இதையெல்லாம் எதிர்பார்த்தீங்களா?"

"ஆமா... மகிழம்மா கோடு காட்ட, அர்ஜுன் கேடிங்கிறது புரிஞ்சுது. போறதுக்கு முன்ன மறுபடி ஆபீசை உருட்ட வருவான்னு காத்திருந்தோம்."

"வரு எங்கே... அவனும்?"

"இல்லை! அவனுக்கு இதுக்கான வயசு போதாதுன்னு 'ஐஸ்கிரீம் பார்'லருக்கு அனுப்பி இருந்தேன். இப்ப பெரியப்பா, வருவைக் கூட்டிட்டு நகைக்கடைக்குப் போயிருக்கார்."

"அங்கே என்ன?"



"பெரியப்பாவுக்கு ஏதோ வேலை... இவனையும் அழைச்சிட்டுப் போறார்."

"ஓ..?"

படபடக்கும் நெஞ்சுடன் அவனைக் கடந்து போக முயன்றவளை கைப்பற்றினான்.

"எல்லாத்தையும் முழுசா முடிச்சுடுவோமா, சித்ரா?"

"எதை?"

"நீதான் சொன்னேன் முதல்ல நிலாகிட்ட போய் 'உன் நரித்தனமெல்லாம் வெளுத்திடுச்சு'ன்னு சொல்லலாமா? இல்ல,' அவ கிடக்கிறா கழுதை'ன்னு நம்ம கதையை ஆரம்பிக்கலாமா?"

விலா எலும்பில் தன் இதயம் மோதும் ஒலி அவளுக்குப் போர் முரசு போல கேட்டது.

வறண்ட நாக்கிற்கு ஒரு தம்ளர் தண்ணீர் தந்துவிட்டு படுத்துக் கொண்டால் போதும் என்று உடம்பு கெஞ்சியது.

"நீ சோர்ந்து தெரியறே... நாம இப்ப பின்பக்க கல்படி பக்கமாய் போலாமா, சித்ரா?"

குழப்பத்தில் இவளுக்குத் தலை சுழன்றது.

"அங்கே.. ஏன்.. எதுக்கு?"

"அங்கேதானே நான் உன்னை முதல்முதலாய் பார்த்தேன்?"

"அதனால?"

அது ராசியான இடம். அங்கே வச்சு, நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு நான் கெஞ்சினா 'வொர்க்-அவுட்' ஆகும் என்ற நம்பிக்கை."

"சரத்... அர்ஜுனின் அக்கிரமங்களை ஜீரணிக்கவே என்னால் முடியலை... இதுல நீங்க வேற விளையாடாதீங்க..." படபடத்தாள்.

நெற்றி, மேலுதட்டில் வியர்வை முத்துகள் அரும்பின.

"உக்காரு... குடிக்க ஏதாச்சும் எடுத்துட்டு வர்றேன்."

உட்கார்ந்தவள், முகத்தைத் துடைத்தாள். அவன் கொண்டு நீட்டிய குளிர்பானத்தை நாலு மிடறு குடித்ததும் சற்றுத் தெளிந்தது.

"எனக்குத் தெளிவாய் பேசத் தெரியலை, சித்ரா. ஆனா, நீ அர்ஜுன்கிட்ட சொன்னதை வச்சுதான் இப்படி துணிச்சலாய் அடிச்சேன்... நீயானா முறுக்கிக்கிறே... நான் உண்மையிலே உன்னை நேசிக்கிறேன்."

குப்பென சூடேறிய முகத்தைக் கவிழ்ந்தாள்.

"அர்ஜுன்கிட்ட நான் என்ன சொன்னேன்?"

"நீ தேடின அன்பு, நேசம் எல்லாம் இங்கே கிடைச்சதுன்னு..."

"ஆமா... மாமாவைப் பற்றி..."

"எம்பேரையும்தான் சொன்னே" விழிகளை உருட்டினான்.

"சொன்னேன்..." இழுத்தாள்.

"அதை எங்கிட்ட சொல்லக்கூடாதா? காதெல்லாம் சிவந்திருக்குது... ரொம்ப வெட்கமா இருந்தா நாளைக்குச் சொல்லு... ஆனா, என்னால் இனியும் தள்ளிப்போட முடியாது, சித்ரா... கல்படி வரை நடக்க உனக்கு மனம் இல்லைன்னா என்ன... இங்கேயே சொல்றேன்..."

"இல்ல..."

விடுவிடுவென்று விலகி, வீட்டைவிட்டு வெளியேறியவளை வெறித்தான்.

"சித்ரா... ப்ளீஸ்... சாரி..."

ஆனால், ஓட்டமும், நடையுமாய் அவள் போய் நின்ற இடத்தைப் பார்த்தவன் முகம் கனிந்தது.

"நன்றி சித்ரா. முறையாய் முதல்ல மன்னிப்பு கேட்டுடுறேன். முதல்ல உன்னைத் தப்பாய் நினைச்சதுக்கு- தப்பு தப்பாய் திட்டினதுக்கு... ஆனா, பழகி உன்னைப் புரிஞ்ச பிறகு, என்னால் தவிர்க்க முடியலை... உன்னை நேசிக்க ஆரம்பிச்சுட்டேன்... இயல்பாய், இனிமையாய்..."

"ஆனா..."

"கேளு."

"நாம 'எல்லோரா' போய் இருந்தப்ப நான் சீக்கிரம் ஊர் திரும்பிடுவேன்னதும் உங்க முகத்துல நிம்மதி தெரிஞ்சது?"

"ம்... நீ நிகிலாவைப் போலில்லை... நல்ல பொண்ணுங்கிற நிம்மதி, அது. நீகூடத்தான் திறப்பு விழா அன்னைக்கு முகத்தைத் திருப்பிகிட்டே?"

கேள்வியுடன் புருவம் சுருக்கினாள்.

"என்ஜினியருடைய அம்மா, சரத்துடைய முறைப்பொண்ணு வந்தாச்சுன்னு கிண்டல் பண்ணுனப்ப?"

"ம்... வெட்கம் வர, வேறென்ன பண்ணுறதாம்?" மனதுள் முணங்கினாள்.

"உண்மையான காதலில் விழுறது அற்புதமாக இருக்குது சித்ரா... மதிப்பு, [illegible] எல்லாம் கலந்த உணர்வுதான் காதல்... புரிஞ்சு... அனுபவிக்க... உனக்கும் அப்படித்தானே?"

அவள் கைகளை [illegible] பற்றினான், அவன்.

"நான் அப்படி எதும் [illegible]"

"ப்ளீஸ்... இப்பவே சொல்லிடேன்... இனி காத்திருக்க முடியாது..." இவள் தோள்களைப் பற்றி உலுக்கினான்.

"இப்படி மிரட்டினா வேறென்ன சொல்றது?" சரி... நானும்தான்."

"என்ன?"

"உங்க மேல பிரியம் வச்சிட்டேன்... மனக்குகையில உங்க ஓவியத்தை விதவிதமாய் வரைஞ்சுட்டேன்."

அவளை இழுத்து இறுக அணைத்தான்.

ஆசிர்வதிப்பது போல அவர்கள் மீது மழைத்துளி விழுந்தன... மேலும் வலுத்தன...

மண்மணம் கிளர்ந்து அவர்களை வாழ்த்தியது.

மழை அதிகமாகுது... வீட்டுக்குப் போகலாமா சித்ரா?"

"போகணும்... வடைக்கு ஊறப்போட இனி நேரமில்லை... பஜ்ஜியாவது போடணும்."

அவன் சொன்னது புரியாவிட்டாலும், ஆனந்தமாய் அவளைப் பின்தொடர்ந்தான், சரத்.

**(முடிந்தது)**

ராணி இணைப்பு சேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600007. அச்சிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600007.